விலை ரூபா: 15.00

Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி

Valampurii

பக்கங்கள்: பதினெட்டு

சங்கு 11 வள்ளுவர் ஆண்டு 2041 வைகாசி 06 வியாழக்கிழமை (20.05.2010) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 152

ராம்கோ
MADRAS CEMENTS LTD
RAMCO CEMENT
ஆசியாக் கண்டத்தில் முதலாந் தர தொழிற்சாலையிலிருந்து தயாரிக்கப்பட்டது ராம்கோ சீமெந்து
RAMCO

# சரணடைந்த விடுதலைப்புலிகள் அனைவரும் கொல்லப்பட்டனர்

## முகாம்களுக்குச் செல்ல ஐ.சி.ஆர்.சி. கோரிக்கை

(கொழும்பு)

இலங்கையில் தாம் தொடர்ந்து மக்களுக்குப் பணியாற்ற வேண்டிய தேவை இன்னமும் உள்ளது என்று சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்தின் தலைவர் தெரிவித்துள்ளார்.

விடுதலைப்புலிகளுடனான போர் முடிவுக்கு வந்து விட்டதாக அரசு அறிவித்து ஓராண்டு நிறைவடைந்துள்ள நிலையில் அரசின் நலன்புரி நிலையங்களுக்கும் மக்கள் மீள் குடியமர்த்தப்பட்டுள்ள இடங்களுக்கும் சென்று வரத் (18 ஆம் பக்கம் பார்க்க)


## சனல்-4 தொலைக்காட்சிச் சேவைக்கு இராணுவ அதிகாரி திடுக்கிடும் தகவல்

(லண்டன்)

**வன்னியில் இடம்பெற்ற இறுதி யுத்தத்தின் போது சரணடைந்த விடுதலைப்புலி உறுப்பினர்கள் அனைவரையும் சுட்டுக் கொன்றதாக சனல்-4 தொலைக்காட்சிக்கு இராணுவ அதிகாரி ஒருவர் தெரிவித்தார். மேலிடத்து உத்தரவின் பேரிலேயே தாங்கள் அதனைச் செய்ததாகவும் அவர் கூறியுள்ளார்.** (18 ஆம் பக்கம் பார்க்க)

## விசாரணை செய்யப்பட்டதன் பின்னர் பிரபாகரனின் மகன் கொல்லப்பட்டார்

### இராணுவ அதிகாரி தெரிவித்ததாக சனல்-4 இல் செய்தி



(கொழும்பு)

வன்னியில் கடந்த வருடம் இடம்பெற்ற யுத்தத்தின் போது தனது மெய்ப்பாதுகாவலர்களுடன் சரணடைந்த விடுதலைப்புலிகளின் தலைவர் வே.பிரபாகரனின் 13 வயது மகன் விசாரணை செய்யப்பட்ட பின்னர் இராணுவத்தால் கொல்லப்பட்டதாக சனல்-4 தொலைக்காட்சி செய்தி வெளியிட்டுள்ளது.

கடந்த வருடம் ஓகஸ்ட் மாதம் இலங்கையில் ஜனநாயகத்திற்கான அமைப்பு வெளியிட்ட, கைது செய்யப்பட்ட இளைஞர்களைக் கண்களையும் கைகளையும் கட்டி நிர்வாணமாக்கி, சீருடை அணிந்த இலங்கை இராணுவத்தினர் துப்பாக்கியால் சுடும் காட்சிகளைக் கொண்ட வீடியோக் காட்சியை சனல்-4 ஒளிபரப்புச் செய்திருந்தது.

அது புனையப்பட்ட ஒரு வீடியோக் காட்சி என்று இலங்கை அரசு மறுத்திருந்தது. எனினும் பின்னர் ஐ.நா. அது உண்மையானது என உறுதிப்படுத்தியிருந்தது.

தற்போது முதன்முறையாக சனல்-4 நேரடியாக இவை தொடர்பான தகவல்களைப் பெற்றுள்ளது. இவ்வாறான படுகொலைகள் உயர் (18 ஆம் பக்கம் பார்க்க)

## காற்றுடன் கூடிய மழையால் மரங்கள் பல முறிந்தன

(யாழ்ப்பாணம்)

யாழ். குடாநாட்டில் நேற்றிரவு பெய்த காற்றுடன் கூடிய மழையால் பயன்தரு பல மரங்கள் முறிந்து விழுந்தன.

மின்சாரக் கம்பி மீது மரங்கள் விழுந்ததனால் சில மணிநேரத்திற்கு மின்சாரம் தடைப்பட்டிருந்தது. வடமராட்சி கொற்றாவத்தைப் பகுதியில் மின்சாரக் கம்பி மீது பனை மரம் முறிந்து விழுந்ததில் வடமராட்சிப் பிரதேசம் சில மணிநேரத்திற்கு இருளில் மூழ்கியது.

இச் சம்பவத் (18 ஆம் பக்கம் பார்க்க)

## சனல்-4 வெளியிட்ட செய்தி உண்மைக்குப் புறம்பானவை

### இலங்கைத் தூதுவர் விளக்கம்

(லண்டன்)

இறுதி யுத்தத்தில் சரணடைய வந்த விடுதலைப்புலிகளின் உறுப்பினர்கள் மற்றும் பொதுமக்களை இலங்கைப் படையினர் சுட்டுக் கொன்றார்கள் என்ற சனல்-4 தொலைக்காட்சி வெளியிட்ட செய்திகள் உண்மைக்குப் புறம்பானது என பிரிட்டனுக்கான இலங்கைத் துணைத் தூதுவர் அம்ஷா தெரிவித்துள்ளார்.

சனல்-4 தொலைக்காட்சி வெளியிட்ட செய்தி குறித்துக் கருத்து வெளியிடும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

உலகில் போர் (18 ஆம் பக்கம் பார்க்க)




## நிபுணர் குழுவை அமைக்கும் திட்டத்தில் மாற்றம் இல்லை

### ★ ஐக்கிய நாடுகள் சபை அறிவிப்பு ★

(கொழும்பு)

இலங்கை தொடர்பாக ஐ.நா.பொதுச் செயலாளர் பான் கீ மூனுக்கு ஆலோசனை வழங்க நிபுணர்கள் குழு உருவாக்கும் திட்டத்தில் மாற்றமில்லை என ஐக்கிய நாடுகள் சபை தெரிவித்துள்ளது.

ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவினால் உண்மையைக் கண்டறியும் நோக்கில் நியமிக்கப்பட்டுள்ள நல்லிணக்க ஆணைக்குழுவின் நடவடிக்கைகள், குறித்த நிபுணர்கள் குழுவின் நோக்கங்களை நிறைவேற்றாது எனவும் ஐ.நா. அறிவித்துள்ளது.

எனவே நிபுணர்கள் குழுவின் உருவாக்கம் திட்டமிட்டபடி (18 ஆம் பக்கம் பார்க்க)

## நாச்சிக்குடாப் பகுதியிலிருந்து மனித எலும்புக்கூடுகள் மீட்பு

### மிதிவெடி அகற்றும் போது கண்டுபிடிப்பு

(கிளிநொச்சி)

கிளிநொச்சி நாச்சிக்குடாப் பகுதியில் புதைகுழி ஒன்றிலிருந்து நூற்றுக்கும் மேற்பட்ட மனித எலும்புக் கூடுகள் மீட்கப்பட்டதாகத் தகவல்கள் வெளியாகியுள்ளன.

அப் பகுதியில் மனிதநேயக் கண்ணிவெடி அகற்றும் பணியாளர்கள் இந்த எலும்புக் கூடுகளைக் கண்டுபிடித்ததாகச் செய்திகள் தெரிவித்தன.

இறுதி யுத்தத்தின் போது உயிரிழந்து அநாதரவாகக் கிடந்தவர்களின் எலும்புக் கூடுகளாக இவை இருக்கலாம் எனச் சந்தேகிக்கப்படுகின்றது.

இது குறித்து உரிய தரப்பினருக்குத் தகவல் கொடுக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (எ-5)

## பழைய மாணவர் சங்க பொதுக் கூட்டம்

(கிளிநொச்சி)

கிளிநொச்சி மத்திய கல்லூரி பழைய மாணவர்சங்க பொதுக் கூட்டம் எதிர்வரும் 24ஆம் திகதி திங்கட்கிழமை பிற்பகல் 2.30 மணிக்கு மத்திய கல்லூரி தற்காலிகமாக இயங்கிவரும் ரி.ஆர்.ரெக் மண்டபத்தில் (வலயக் கல்விப் பணிமனைக்கு அருகில்) நடைபெறும்.

இக் கூட்டத்தில் பழையமாணவர்கள் அனைவரையும் தவறாது கலந்து கொள்ளுமாறு அறிவிக்கப்பட்டுள்ளது. (ச)

## பட்டப் பகலில் நேற்று மோ.சைக்கிள் திருட்டு

(யாழ்ப்பாணம்)

யாழ். நகரப்பகுதியில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த மோட்டார் சைக்கிலொன்று இனந்தெரியாத இருவரால் திருடிச் செல்லப்பட்டுள்ளது.

கஸ்தூரியார் வீதியில் உள்ள எரிபொருள் நிரப்பு நிலையத்துக்கு அருகில் நிறுத்திவைக்கப்பட்டிருந்த மோட்டார் சைக்கிளே திருடப்பட்டுள்ளது.

நேற்றுபிற்பகல் 3 மணியவில் அப்பகுதியில் நடமாடிய சந்தேகத்துக்கிடமான இருவர் அங்கிருந்த கீரோ ஹொன்டா வகைமோட்டார் சைக்கிளை திருடியுள்ளனர்.

இதனை அங்கு நின்றவர்கள் கண்டு அவர்களை துரத்திச் சென்ற போது அவர்கள் மோட்டார் சைக்கிளுடன் தப்பிச் சென்றுள்ளனர்.

இது குறித்து யாழ். பொலிஸ் நிலையத்தில் முறையிடப்பட்டுள்ளது. (ச-2,7,22)

## ஒத்திவைக்கப்பட்ட மறியல் போராட்டத்தை எதிர்வரும் திங்களன்று நடத்த ஏற்பாடு

### காணாமல் போனோரை தேடியறியும் குழு அறிவிப்பு

(வவுனியா)


காணாமல் போனோரை தேடியறியும் குழுவினால் ஏற்பாடு செய்யப்பட்டு ஒத்திவைக்கப்பட்ட மறியல் போராட்டம் மீண்டும் எதிர்வரும் 24ஆம் திகதி திங்கட்கிழமை நடந்த ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

காணாமல் போனோரை தேடியறியும் குழுவினால் நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை வவுனியாவில் மறியல் போராட்டம் நடத்த ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

எனினும் தென்னிலங்கையில் ஏற்பட்டுள்ள அசாதாரணகால நிலை காரணமாக பெருமளவானோர் கலந்துகொள்ளமுடியாமல் போனது.

இதனால் ஒத்திவைக்கப்பட்ட போராட்டம் எதிர்வரும் 24ஆம் திகதி காலை 10 மணிக்கு வவுனியா பஸ் நிலையத்துக்கு முன்பாக நடைபெறும் எனவும் இப் போராட்டத்தில் காணாமல் போனவர்களினதும் அரசியல் கைதிகளினதும் உறவினர்களை கலந்து கொள்ளுமாறு மேற்படி குழுவின் இயக்குநர் சுந்தரம் மகேந்திரன் அறிவித்துள்ளார். (ச-2)

## பாராட்டி வாழ்த்துகின்றோம்




கௌரவ சில்வேஸ்திரி அலன்ரீன் (S.A.உதயன்) (பாராளுமன்ற உறுப்பினர்)



மாண்புமிகு அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா (பா.உ) (பாரம்பரிய கைத்தொழில்கள் மற்றும் சிறு கைத்தொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சர்)



கௌரவ முருகேசு சந்திரகுமார் (அசோக்) (பாராளுமன்ற உறுப்பினர்) குழுத்தலைவர், பாராளுமன்றம்.



திரு.கந்தசாமி கமலேந்திரன் (தோழர் கமல்) (யாழ். மாவட்ட அமைப்பாளர், ஈழமக்கள் ஜனநாயகக் கட்சி)



திரு.இராசரத்தினம் ஜெயபாலசிங்கம் (அன்புத் தோழர்) (வலிகாமம் பொறுப்பாளர், ஈழமக்கள் ஜனநாயகக் கட்சி)

மக்கள் தலைவனின் மகத்தான சேவைக்கு எமது மனமார்ந்த வாழ்த்துக்கள். அவரது சேவை மேலும் தொடரவும், அவருடன் இணைந்து அயராது உழைக்கும் ஏனைய அன்பு உள்ளங்களை யும் மனதார பாராட்டி வாழ்த்துகின்றோம்.

**J/215 அளவெட்டி வடக்கு வாழ்.மக்கள்**

(1536)

## போர் வியூகங்கள் இந்தியாவுடன் பகிர்வு

(சென்னை)

இந்திய நக்சலைட்டுகளுக்கு எதிராக நடவடிக்கை எடுப்பதற்கு ஆலோசனை வழங்க தயார் என இலங்கை அறிவித்துள்ளது.

விடுதலைப்புலிகளை கட்டுப்படுத்தியதன் மூலம் பெற்றுக்கொள்ளப்பட்ட அனுபவங்களை பகிர்ந்து கொள்ள தயார் என இலங்கை, இந்தியாவிடம் தெரிவித்துள்ளது.

நக்சலைட்டுகளுக்கு எதிராக வெற்றிகரமான போராட்டத்தை முன்னெடுப்பதற்கு இந்திய துணை இராணுவ குழுக்களுக்கு, இலங்கைப் படையினர் பயிற்சிகளை வழங்க முடியும் என குறிப்பிடப்பட்டுள்ளது.

இந்தியாவிற்கான இலங்கைத் தூதுவர் பிரசாத் காரியவசம் இந்திய பாதுகாப்பு ஆலோசகர் சிவ் சங்கர் மேனனிடம் இந்த உறுதி மொழியை வழங்கியுள்ளார்.

நக்சலைட்டுகள் நடவடிக்கைகளை மேற்கொள்ளும் பிரதேசங்களிலிருந்து அவர்களை எவ்வாறு கட்டுப்படுத்துவது என்பது தொடர்பில் மட்டும் இலங்கை அரசாங்கம் உதவிவழங்க உள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது. (ச-5)

## நாற்று செய்தி மடல்-2 நூல்வெளியீட்டு விழா

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் வலயக்கல்வி அலுவலக முன்பள்ளி அபிவிருத்திப் பிரிவின் நாற்று செய்தி மடல்-2 வெளியீட்டு விழா இன்று வியாழக்கிழமை பிற்பகல் 3 மணிக்கு சன்மார்க்க மகாவித்தியாலயத்தில் நடைபெறும்.

யாழ்.வலயக் கல்விப் பணிப்பாளர் திருமதி அருளேஸ்வரி வேதநாயகம் தலைமையில் நடைபெறும் இந் நிகழ்வில் கருமத்திருதி லயன் டாக்டர் வி.தியாகராஜா பிரதமவிருந்தினராகக் கலந்து கொள்கிறார்.

நூல் வெளியீட்டுரையை வடமாகாண கல்வி அமைச்சின் ஆரம்ப பிள்ளைப்பருவ அபிவிருத்திப் பிரிவைச் சேர்ந்த செல்வி ஜெயா தம்பையா நிகழ்த்துவார்.

கருத்துரையை கோப்பாய் தேசிய கல்வியியற்கல்லூரி விரிவுரையாளர் க.தனபாலன் வழங்குவார்.

## மீள் குடியேற்றத்திட்ட வரைபு தயாரித்தல்

(கொழும்பு)

அரியாலை தென்கிழக்கு (ஜே/89) கிராம அலுவலர் பிரிவை சேர்ந்த மணியந்தோட்டம், உதயபுரம் ஆகிய கிராமங்களிற்கும் அரியாலை கிழக்கை (ஜே/90) சேர்ந்த நாவலடி, பூம்புகார், அரியாலை முனங்கு ஆகிய கிராமங்களிற்கும் மீள் குடியேற்ற திட்டவரைபு தயாரிக்கும் நோக்கில் மக்கள் பங்களிப்புடனான கிராமிய கணிப்பீடு ஒன்று அப்பிரதேச மக்களின் உதவியுடன் நாளை வெள்ளிக்கிழமை காலை 8.30 மணிக்கு அரியாலை சரஸ்வதி சனசமூக நிலையத்தில் நடைபெறவுள்ளது.

எனவே அன்றைய தினத்தில் மேற்படி கிராமங்களை சேர்ந்த மக்களை தவறாது பங்குபற்றுமாறு நல்லூர் பிரதேச செயலர் பி.செந்தில் நந்தன் கேட்டுள்ளார். (ச)

## பொதுக் கூட்டம்

(யாழ்ப்பாணம்)

சாவகச்சேரி பிரதேச சபையின் நூலக அபிவிருத்தி ஆலோசனை சபை பொதுக் கூட்டம் எதிர்வரும் 23ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 10 மணிக்கு கச்சாய் பொது நூலக மண்டபத்தில் நடை, பெறவுள்ளது.

மேற்படி கூட்ட நிகழ்வில் நூலக அங்கத்தவர்கள் அனைவரையும் கலந்து கொள்ளுமாறு சாவகச்சேரி பிரதேச சபை செயலர் கேட்டுள்ளார். (ச-2)

## அரசாங்க அறிவித்தல்

### நிவாரண விநியோகத்திற்குரிய பொருட்களை கொள்வனவு செய்வதற்கான கூறுவிலை கோரல்

யாழ்ப்பாண மாவட்டத்தில் இடம்பெயர்ந்த மக்களுக்கான நிவாரண விநியோகத்தை மேற்கொள்வதற்காக பின்வரும் பொருட்களை கொள்வனவு செய்வதற்கான கூறுவிலைகள் யாழ். மாவட்ட அரசாங்க அதிபரினால் கோரப்படுகின்றது.

1. சிவப்பு நாட்டரிசி
2. கோதுமை மா
3. சீனி
4. பருப்பு

இப் பொருட்கள் கொள்வனவு செய்வதற்கான முத்திரையிடப்பட்ட (*Sealed*) கூறுவிலைகள் யாழ்ப்பாணம் அரசாங்க அதிபரினால் கோரப்படுகின்றது. இப் பொருட்களை விற்பனை செய்யவிரும்புபவர்கள் மீளளிப்பு அற்ற வைப்பு பணமாக ரூபா 5,000.00உம் மீளளிக்க கூடியதான வைப்பாக ரூபா 50,000.00 உம் செலுத்தி விண்ணப்பப்படிவத்தை புனர்வாழ்வு கிளையில் பெற்று தபால் உறையின் மேல் மூலையில் 'நிவாரண விநியோகத்திற்குரிய பொருட்களுக்கான கூறுவிலை' என குறிப்பிட்டு 26.05.2010ஆம் திகதி 10.00 மணிக்கு முன்னர் கிடைக்கக்கூடியவாறு புனர்வாழ்வுப்பகுதியில் உள்ள கேள்விப் பெட்டியில் நேரடியாக அல்லது பதிவுத்தபால் மூலம் சீல் (*Seal*) இடப்பட்ட கடித உறையில் தங்களது கூறுவிலைகளை சமர்ப்பிக்குமாறு கோரப்படுகின்றார்கள்.

கூறுவிலைகள் சமர்ப்பிக்கப்படும் போது பொருட்களுக்கான மாதிரி சமர்ப்பிக்கப்படல் வேண்டும். பொருட்களை கொள்வனவு செய்வது தொடர்பாக பொருட்களின் தரம், கேள்வி, நிபந்தனைகள் மற்றும் விண்ணப்பப்படிவங்களை மாவட்டப் புனர்வாழ்வு புனரமைப்பு செயலகத்துடன் தொடர்பு கொண்டு 20.05.2010முதல் பெற்றுக் கொள்ள முடியும்.

கூறுவிலைகள் 26.05.2010ஆம் திகதி பிற்பகல் 3.00 மணிக்கு திறக்கப்படும். இதில் கூறுவிலை சமர்ப்பித்தவர் அல்லது அவரின் அனுமதி பெற்ற பிரதிநிதி சமுகமளித்திருக்க முடியும்.

பொருட்களை விநியோகிப்பவர்கள் கோரப்படும் தொகையினை அறிவித்தல் வழங்கப்பட்ட தினத்தில் இருந்து ஒரு வாரத்தினுள் நாவற்குழி களஞ்சியத்தில் இறக்கி ஒப்படைத்தல் வேண்டும்.

கேள்விச் சபையின் முடிவே இறுதியானது.

க.கணேஷ்
அரசாங்க அதிபரும்/ மாவட்டச் செயலரும்
யாழ். மாவட்டம்.

(சி-293)








ஸ்ரீ ஸ்ரீ மஞ்சுநாதா ஜோதிட நிலையம்

இந்தியாவில் மந்திராலயத்திலிருந்து வருகை தந்துள்ள பிரபல கைரேகை ஜோதிட வல்லுனர்

தனஞ்செயன் சாஸ்திரி
077 0366383

கைரேகை மூலம் துல்லியமாக நடப்பவை மற்றும் நடக்கப் போகின்றவை பற்றிய விபரங்களை, பலன்களை குறைந்த செலவில் கூறுவார்.

துல்லியமாக கணித்துப் பார்க்கப்படும் விடயங்கள்

கை ரேகை, நாம நட்சத்திரம், ஜாதகம், கல்வி, உத்தியோகம், தொழில், வியாபாரம் விருத்தியடைதல், லட்சுமி வசீகரம், திருமண யோகம், குழந்தைப் பாக்கியம், கணவன் மனைவி ஒற்றுமையின்மை, வாஸ்துசாஸ்திரம், வீட்டில் வதிவிடப்பிரச்சினை, விஷேட பயணம், எதிரிகள் கண் திருஷ்டி, கஷ்ட நஷ்டங்கள், கோர்ட் வழக்குகள், வாகனப் பொருத்தம், பெண் பிள்ளைகள் பெற்றோருடன் ஒற்றுமையாக நிலைத்திருத்தல், பிரிந்தவர்கள் ஒன்று கூடுதல் இவைகள் அனைத்தும் 11 நாட்களுக்குள் செய்து தரப்படும்.

இவற்றினைத் தெரிந்து கொள்ள ஒருமுறை எங்களைச் சந்தித்து பயன் பெறுங்கள்

K.R.V. INN
252, பருத்தித்துறை வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
(நல்லூர் கோயில் முன்பாக)

கைரேகை பார்க்கும் நேரம்:
காலை 8.00 மணி முதல் மாலை 6.00 மணி வரை பார்க்கப்படும்.

(1532)

# இன்று ஒரு தகவல்

## வாழ்வது எதற்காக?

ஒருத்தர் அலுவலக வேலை முடிந்து வீட்டுக்குப் போகும் போது ஒரு பெரிய பையை தூக்க முடியாமல் தூக்கிக் கொண்டு போவார்.

எல்லாம் அலுவலக பைல்கள்..... பதிவேடுகள். வீட்டுக்குப் போயும் அலுவலக வேலைகளைப் பார்க்கிறதுக் காக அவர் அப்படிச் சுமந்து கொண்டு போகிறார்.

கடமைகளில் கண்ணும் கருத்துமாக இருப்பவர் என்று அவருக்குப் பெயர். பலபேர் இப்படி உண்டு.

அலுவலகத்தை வீட்டுக்குச் சுமந்து கொண்டு போகி றவர்கள்.

இப்படிப்பட்டவர்கள் வாழ்க்கை ஒரு திருவிழா என்பது தெரியாமலே வாழ்ந்து முடித்துவிடுகிறார்கள்.

வாழ்க்கை என்பது கடமைகளை நிறைவேற்றுவ தற்காக அமைந்த ஒன்றா ..... அல்லது அது ஒரு கொண் டாட்டமா என்பதை முதலில் புரிந்து கொள்ள வேண்டும் என்கிறார் ஓஷோ.

வாழ்க்கை கொண்டாடுவதற்காக அமைந்த ஒன்று. இப்படி நினைப்பவர்கள் வேலை செய்வதையே விட்டு விடுவார்கள் என்று அர்த்தமில்லை.

அவர்கள் நிச்சயமாக வேலை செய்வார்கள்.

ஆனால் அதுவும் அவர்களுடைய கொண்டாட்டத்தின் ஒரு பகுதியாக அமைந்துவிடும். விழாவின் அம்சம் அதில் கலந்திருக்கும்.

வேலையிலேயே மூழ்கிப் போகிறவர்களுக்கு வாழ்க் கையே வேலையாக ஆகிவிடும். பலபேர் அப்படித்தான்.

வாழ்க்கையே ஒரு தொழிற்சாலையாக மாற்றிக் கொண்டு கவலைப்படுகிறார்கள்.

வாழ்வதற்காகத்தான் வேலை செய்கிறோம் ஆனால் வேலையே வாழ்க்கையாகிப் போய்விடுகிறது.

ஆடிப்பாடி மகிழ நேரமில்லாமல் அந்திமகாலம் வந்து சேர்ந்து விடுகிறது. எல்லோரும் கொஞ்சம் யோசித்துப் பாருங்கள்.

மனிதனைத்தவிர.... மற்ற எல்லாவற்றிற்கும் வாழ்க்கை என்பது ஒரு விளையாட்டுத்தான் - திருவிழா தான்.இவன் தான் வேலை செய்கிறான். கடினமாகஉழைக்கிறான். ஏராளமாக கண்ணீர் சிந்துகிறான்.

நமக்கு நாமே குழப்பத்தையும் - சிக்கலையும் உண்டாக்கிக் கொள்கிறோம். அதில் சிக்கிக் கொள்கிறோம்.

அதன்பின் காலம் முழுவதும் ஓய்வு கிடைக்காதா, நிம்மதியாக வாழ்க்கையை அனுபவிக்க முடியாதா என்று ஓடிக் கொண்டே இருக்கிறோம்.

அந்த நாள் வருவதேயில்லை.தொழில் போதையில் மூழ்கிக் கிடப்பவர்களுக்கு ஓய்வு, மகிழ்ச்சி வாழ்க்கையின் இன்பம் எதுவுமே தெரிவதில்லை. பழங்குடி மக்களைப் பாருங்கள்.

தொழிலுக்கும் கொண்டாடத்துக்கும் என்ன உற வென்று புரியும்.

நாள் பூராவும் அவர்கள் உழைக்கிறது இரவில் ஆனந்தமாக ஆடிப்பாடி மகிழத்தான்.

ஆனால் நாகரிக மனிதன் என்ன செய்கிறான்?பகலில் மட்டுமல்ல இரவிலும் உழைக்கிறான். இரவு பகலாக உழைக்கிறேன் சேர் என்று பெருமையாகவும் சொல்லிக் கொள்கிறான்.

இன்றைய உலகத்தில் ஆனந்தம் இருக்கவேண்டிய இடத்தை யெல்லாம் பொழுதுபோக்கு ஆக்கிரமித்துக் கொண்டிருக்கிறது.

ஆனந்தம் என்பது வேறு, பொழுதுபோக்கு என்பது வேறு. கொண்டாட்டத்தில் நீங்களும் பங்கு கொள்ளலாம், கலந்து கொள் ளலாம்.

பொழுது போக்கில் நீங்கள் வெறும் பார்வையாளர் மட்டும் தான். ஆட்டத்தைப் பார்ப்பது பொழுதுபோக்கு, நீங்களே ஆடுவது ஆனந்தம்.... கொண்டாட்டம் வாழ்வையே ஒரு வேலையாக ஆக்கிக் கொள்பவர்கள் இந்த உலகத்தையே ஒரு பைத்தியக்கார விடுதியாக ஆக்கிவிடு கிறார்கள்.

எதையோ நோக்கி எங்கேயோ ஓடும் பைத்தியக்காரர்களாகத் தான் காட்சி அளிக்கிறார்கள். எங்கே ஓடுகிறோம் என்று யாருக்கும் தெரியாது.

ஒருத்தன் வாடகைக் காரில் ஏறி உட்கார்ந்து "போ வேகமா"என்றான். கார் பறந்தது.கொஞ்சநேரம் கழித்து திரும்பி "எங்கே போக வேண்டும்?" என்று கேட்டார்.

அதற்கு இந்த ஆள்," எங்கே போகவேனும் என்பது முக்கியமில்லை. நான் வேகமாகப் போகனும் என்பது தான் முக்கியம்" என்றானாம்.

இது போலத்தான் வாழ்க்கையில் எல்லோரும் பறந்து கொண் டிருக்கிறார்கள்.

ஒரு ரயில் நிலைய பிளாட் பாரத்தில் ஒருத்தன் அவசரமாக எதையோ தேடிக் கொண்டிருந்தான்.

"என்னத்தைத் தேடுறீங்க?" என்றார் ஒருத்தர்.

''என்னுடைய டிக்கெற்றைத் தவறவிட்டுவிட்டேன் சேர்'' என்று சொல்லி விட்டு மறுபடியும் குனிந்து தேடினான் இதற்குள் ரயில் வந்து விட்டது.

''பரவாயில்லை... வாங்க... வேற டிக்கெற் வாங்கலாம் என்றார் அவர்.''

''அது ஒன்றும் கஷ்டமில்லை சேர்... வேற டிக்கெற் வாங் கிக்கலாம்... ஆனா அந்த பழைய டிக்கெற் கிடைச்சாத் தானே நான் எந்த ஊருக்கு போகணும் என்று தெரியும்'' என்றான் இவன்.

*தென்கச்சி கோ சுவாமிநாதன்*

# அனைத்து இடம்பெயர் மக்களுக்கும் உதவிகள் வழங்கப்பட வேண்டும்

(திருநெல்வேலி)

இடம்பெயர்ந்த மக்களிற்கு வழங்கப்படும் உதவிகள் அனைத்தும் பாரபட்சம் இன்றி அனைத்து இடம்பெயர்ந்த மக்களிற்கும் கிடைக்கவேண்டும் என வடமராட்சி இடம் பெயர்ந்தோர் நலன்பேணும் அபிவிருத்தி அமைப்பு வலியுறுத்தி உள்ளது.

வடமராட்சி கிழக்கு பகுதியில் உள்ள மீனவர்களிற்கு அண்மையில் மீன்பிடி வலைகள் வழங்கப்பட்டன. அதுபோல் பல ருக்கு இவை வழங்கப்பட வில்லை. இவ்வாறு துவிச்சக்கர வண்டிகளும் பல மாணவர்க ளிற்கு வடமராட்சிப் பகுதியில் இன்னும் வழங்கப்படவில்லை.

எனவே உதவும் அமைப்புக்கள் பாரபட்சம் இன்றி அனைவருக்கும் உதவவேண்டும் என இடம்பெயர்ந்தோர் அமைப்பின் செயலாளர் கிருஸ்ணா வலியுறுத்தி உள்ளார் .(6-43)

## விசேட பயிற்சிப் பட்டறை

(யாழ்ப்பாணம்)

யாழ்.முகாமைத்துவ சம்மேளனத்தினால் நடத்தப்படும் "தனிமனிதனிற்கேயுரிய சமூக மதிப்பீடுகள், கடமை, பொறுப்பு, பண்பு" என்னும் விடயம் பற்றிய விசேட பயிற்சிப் பட்டறை எதிர்வரும் 23 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 4 மணி முதல் 6 மணிவரை இல. 17,பருத்தித்துறை வீதி நல்லூரில் அமைந்துள்ள யூரோவில் மாநாட்டு மண்டபத்தில் மக்கள் வங்கியின் யாழ்.மாவட்ட உதவிப் பொதுமுகாமையாளர் கே.ஆனந்தராஜா தலைமையில் நடை பெறவுள்ளது. இந்நிகழ்வில் பிரம்மகுமாரிஸ் ராஜயோக நிலையத்தின் சிரேஷ்ட விரிவு ரையாளர் பி.கே.கணேஸ் கலந்து கொள்ள வுள்ளார். (4)

## கரபந்தாட்ட இறுதியாட்டத்தில் O.L.R. வி.கழகம் வெற்றி

(யாழ்ப்பாணம்)

யாழ்.பிரதேச செயலகத்தால் பதிவு செய்யப்பட்ட கழகங்களுக்கிடையிலான கரப் பந்தாட்ட சுற்றுப்போட்டியின் இறுதியாட்டத்தில் ஜெற்லைன்ஸ் விளையாட்டுக் கழகத்தை எதிர்த்து ஆடிய O.L.R. விளையாட்டுக்கழக அணி 25:18, 2:22 என்ற புள்ளியின் அடிப்படையில் வெற்றிபெற்றுள்ளது.(4)

## ஆன்மீக சொற்பொழிவு

ஸ்ரீவல்லிபுர ஆழ்வார் ஆலயச் சூழலில் அமைந்திருக்கும் பெரியாழ்வார் ஆச்சிர மத்தில் பிரதி ஞாயிற்றுக்கிழமை தோறும் நடைபெற்று வரும் ஆன்மீக நிகழ்வு தொடரில் எதிர்வரும் 23 ஆம்திகதி ஞாயிற் றுக்கிழமை பகல் 10 மணி பூசை முடிவுற்றதும் "கிருஷ்ண வழிபாடு" என்னும் விடயம் பற்றி காரை எம்.பி.அருளானந்தன் ஆன்மீக சொற்பொழிவாற்றவுள்ளார். (4-35)

## இராசி பலன்

20.05.2010
(வைகாசி 6, வியாழக்கிழமை)
சப்தமி முன்னிரவு 7.06 மணிவரை
ஆயிலியம் முன்னிரவு 8.03 மணிவரை
இராகுகாலம் 1.22-2.52 மணிவரை
சுபநேரம் 7.22-8.52 மணிவரை
சித்தாமிர்தம்.

| | |
|---|---|
| மேடம் | கல்வியில் ஆர்வம், நல்ல முயற்சி, தேவையற்ற பயம், பிரயாணம். |
| இடபம் | அந்நியர் சந்திப்பு, இனிய சம்பவம், புதிய பொருள் சேர்க்கை, வாகன சுகம். |
| மிதுனம் | அமைதிக் குறைவு, கோபப் படுதல் ,தொழில் சிந்தை, முயற்சி தாமதம். |
| கடகம் | ஜனவசியம், சயன சுகம், புதிய பொருள் சேர்க்கை, எதிர்பாராத நன்மை. |
| சிங்கம் | உணர்ச்சி வசப்படுதல், பிரயாணம், பண விரயம், முயற்சி தாமதம். |
| கன்னி | தொழில் நன்மை, நண்பர்கள் சந்திப்பு, பொருள் சேர்க்கை, காரியசித்தி. |
| துலாம் | சுபநிகழ்வு, கடின முயற்சி, தேக நலம், தூரதேசச் செய்தி. |
| விருச்சிகம் | அச்சமான நிலை, ஆன்றோர் சந்திப்பு, பிரயாண நன்மை, கட்டுப்பாடு. |
| தனுசு | வீண்தொல்லை, வாகன பயம், காரிய தாமதம், போசன நன்மை. |
| மகரம் | நண்பர்கள் சந்திப்பு, திடீர் பயணம், தேகநலன், பணவரு வாய். |
| கும்பம் | சத்துரு ஜெயம், காரிய நன்மை, பணவருவாய், உடல்நலம். |
| மீனம் | வியாபார நன்மை ,புத்திரரால் கவலை, நல்ல முயற்சி, அதிக செலவு. |

வளவன்


## குடாநாட்டு சந்தைகளில் நேற்றைய விலை விபரம்

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | யாழ்ப்பாணம் | சாவகச்சேரி |
|---|---|---|---|
| 1 Kg | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 80 | 90 | 100 |
| உருளைக்கிழங்கு | 60 | 70 | 80 |
| பச்சைமிளகாய் | 80 | 90 | 95 |
| தக்காளி | 80 | 90 | 110 |
| மரவள்ளிக்கிழங்கு | 40 | 50 | 45 |
| கோவா | 80 | 90 | 80 |
| கரட் | 120 | 130 | 120 |
| பூசணி | 40 | 50 | 35 |
| புடோல் | 50 | 60 | 65 |
| வாழைக்காய் | 40 | 50 | 50 |
| சின்ன வெங்காயம் | 90 | 100 | 90 |
| பெரிய வெங்காயம் | 60 | 70 | 65 |
| பாகற்காய் | 80 | 100 | 120 |
| வெண்டிக்காய் | 50 | 60 | 50 |
| கரணைக் கிழங்கு | 40 | 50 | 45 |
| பயிற்றங்காய் | 90 | 90 | 80 |
| லீக்ஸ் | 90 | 100 | 100 |
| பீற்றூட் | 60 | 70 | 75 |
| கறிமிளகாய் | 160 | 140 | 120 |
| முருங்கைக்காய் | 190 | 210 | 200 |
| போஞ்சி | 160 | 200 | 130 |
| கத்தரிதம்புள்ள | 40 | 50 | 60 |
| கீரை - 1 பிடி | 30 | 35 | 30 |
| தேசிக்காய் | 80 | 90 | 70 |
| தேங்காய் (ஒன்று) | 30 | 35 | 35 |

# யாழ். கல்வி வலய அதிபர்களின் மலையகக் கல்வித் தரிசனம் 2

மாலைப் பொழுதை நெருங்கும் வேளை மாத்தளை அருள்மிகு ஸ்ரீ முத்துமாரி அம்மன் கோவிலை பஸ் அடைந்தது.

எங்கும் பசுமைக் கம்பள விரிப்பிற்கிடையே வர்ணபகவானின் பன்னீர் அபிஷேகம். அந்தக் கண்கொள்ளாக் காட்சியில் வானுயர்ந்து நிற்கும் ஒன்பது தளங்களைக் கொண்ட இராஜகோபுரத்தின் கம்பீரத் தோற்றம்.




மாத்தளை முத்துமாரியம்மன் கோவில்

மலையகத்தின் காவல் தெய்வமாக முத்துமாரியம்மன் வீற்றிருப்பதை உறுதிசெய்தன.

நாடற்று, வீடற்று இருக்கும் மலையக மக்களின் நம்பிக்கைக்குரிய வழிபடு கடவுளாக வீற்றிருக்கும் மாத்தளை முத்துமாரியம்மனின் புனித தலத்திற்குள் நுழைந்தபோது எங்கள் உள்ளம் பரவசத்தில் மூழ்கிப்போனது.

வருடந்தோறும் மாரி பெய்வதனால் தான் உனக்கு மாரியம்மன் என்று பெயர் வைத்தார்கள்.



குறிஞ்சிக் குமரன் கோவில்

பெயருக்கும் பொருளுக்கும் உள்ள தொடர்பை நிரூபணமாக்கி நிற்கும் மாத்தளை மாரியம்மன் மலையக மக்களின் ஒற்றுமைக்கு உரம்சேர்ப்பதற்காக பஞ்சரதங்களில் பவனி வரும் செய்தி மனதிற்கு மகிழ்வு தருவதாகும்.

மாத்தளை மாரியம்மனின் தரிசிப்பை விட்டகலவிருப்பின்றி பஸ்ஸில் ஏறிக்கொள்ள, மலையக ஏற்றத்திற்கு ஈடுகொடுப்பதுபோல பஸ்ஸும் உறுமி தனக்கு உஷார் கொடுத்தது.

**குறிஞ்சிக் குமரன் கோயில்**

05.05.2010 மாலை 6 மணிக்கு குறிஞ்சிக் குமரன் கோயிலைத் தரிசிக்கும் பேறு கிடைத்தது.

குன்றிருக்கும் இடமெல்லாம் குமரன் இருக்கும் இடம் என்ற மெய்மைக்கப்பால், குறிஞ்சியில் குமரன் வீற்றிருக்கும் இடத்திற்கு செல்வதென்பது பெரும் பேறுதான்.

இருந்தும் எங்கள் பஸ் வண்டி குறிஞ்சிக் குமரன் இருக்கும் இடத்திற்கு வர மறுத்துவிட்டது. ஒற்றையடிப் பாதையில் பயணிப்பது தன் ஆயுளுக்கு மட்டுமல்ல; உங்கள் ஆயுளுக்கும் ஆரோக்கியமாகாதென்பதை உணர்த்துவதுபோல பஸ் அடம் பிடித்துக்கொள்ள, நடந்து செல்வதே வழிபாட்டிற்குகந்ததென்ற பழைய புராணத்தை உச்சாடனம் செய்துகொண்டு நடக்கத் தொடங்கினோம்.

சிறு தூரம் சென்றதும் பெண் அதிபர்கள் களைத்துப் போக, முச்சக்கர வண்டியின் உதவியுடன் அவர்கள் குறிஞ்சிக் குமரன் கோவிலுக்குச் சென்றனர்.

ஆண் அதிபர்கள் நடந்தே செல்வதென்ற முடிவில் தங்கள் திறமையைக் காட்டுவதுபோல வீறாப்புடன் நடந்தனர்.நடையில் எல்லோரும் சமமாக ஈடுகொடுக்கும் வல்லமை இல்லாமையால், வேக அளவை வகுப்பாயிடை செய்ததுபோல சிறு சிறு குழுக்களாக குறிப்பிட்ட இடை வெளிதூரத்தில் நடைப்பயணம் அமைந்தது.

வேகத்தில் பிந்திய குழுவில் கோப்பாய் கிறிஸ்தவக்கல்லூரி அதிபர் இராஜசேகரம், கோப்பாய் சரவணபவானந்தன் வித்தியாலய அதிபர் எஸ்.ஞானசம்பந்தன், உரும்பிராய் சந்திரோதய வித்தியாலய அதிபர் ஜி.அன்ரன்பிறேமதாஸ், யாழ்.சென்றோக்ஸ் அதிபர் அ.மரியதாசன் ஆகியோருடன் நானும் இடம்பிடித்துக் கொண்டேன்.முந்திச் செல்பவர்களை முந்தி விடவேண்டும் என்ற மனநிலையில் நாம்.

**விதுரன்**

அந்த மனநிலைக்கு குறிஞ்சிக் குமரன் உதவுவதுபோல இளைஞர் ஒருவர் வேகமாக நடந்துவந்து குறுக்குப் பாதை ஒன்றில் ஏறினார்.

எங்களில் சிங்களம் தெரிந்த சிலர் அந்த இளைஞரிடம் வினவினர்.

குறிஞ்சிக்குமரன் கோவிலுக்கு குறுக்குப்பாதையால் போகலாமா? என்பதே அவர்களின் வின்வல்.

நாவல் மரத்தில் நின்ற முருகன் ஒளவைக்கு சுட்ட பழம் கொடுத்தது போல அந்த இளைஞனும் போக முடியுமென்று அமைதியாகக் கூற, நடையில் பிந்திய குழுவினர் செல்லப்பரைப் பின்தொடர்ந்த யோகர் சுவாமிகள் போல இளைஞரைத் பின்தொடர்ந்தனர்.

குறுக்குப்பாதை, ஐயா! சாமி! போதுமடா என்று கூறுமளவிற்கு ஏற்ற இறக்கம் வாட்டி வதைத்தது. இளைஞனோ எந்தச் சலனமுமின்றி குறுக்குப் பாதையின் ஏற்ற இறக்கங்களை சுலபமாகத் தாண்ட, எங்களில் சிலர் மலையில் நின்ற மரங்களையும் கொப்புகளையும் பற்றிப்பிடித்து குமரா...குமரா... இதுவும் உன் திருவிளையாட்டோ என்றெண்ணி குறிஞ்சிக் குமரன் கோவிலைச் சென்றடைந்தனர்.

கூடவே வந்த இளைஞன் குறிஞ்சிக் குமரன் கோவிலுக்கு அண்மித்துள்ள பேராதனைப் பல்கலைக்கழக மருத்துவபீட மாணவர் விடுதிக்குள் சென்று மறைந்துகொண்டான்.

கடல்மட்டத்திலிருந்து சுமார் 3500 அடி உயரத்தில் குறிஞ்சிக்குமரன் கோவில் அமைந்துள்ளது.



குறிஞ்சிக் குமரனை தரிசிக்க மலையேற்றம்

1969 இல் அமைக்கப்பட்ட இவ்வாலயம் கும்பாபிஷேகத்திற்காக பாலஸ்தாபனம் செய்யப்பட்டு திருப்பணிவேலைகள் நடந்தவண்ணமுள்ளன.

உடுப்பிட்டியைச் சேர்ந்த சிவஸ்ரீ நித்தியானந்தக் குருக்கள் கோவிலின் பிரதம சிவாச்சாரியராக இருக்கின்றார். அன்றைய தினம் அவரின் மகன் பூசை வழிபாட்டை மிகவும் பக்தி பூர்வமாகச் செய்துகொண்டார்.

பேராதனைப் பல்கலைக்கழகத்தில் கணனித்துறையில் (Computer Science) பட்டப்படிப்பை மேற்கொள்ளும் அவரின் பூசை வழிபாட்டைப் பார்த்தபோது மனம் நெகிழ்ந்தது. பல்கலைக்கழகத்தில் பட்டப்படிப்பு.

மாலையில் பூசை வழிபாடு இப்படி எங்கள் இந்துமத குருத்துவம், கல்வியோடு கலந்திருந்தால் எங்கள் சமயத்தை மற்றவர்கள் மதிப்பார்கள் அல்லவா? இந்த நினைப்போடு குறிஞ்சிக்குமரனின் புளியமர நிழலில் குறுக்குப் பாதை தந்த களைப்பைப் போக்க அமர்ந்துகொண்டோம். (வளரும்)

# மின்னணு வாக்குப் பதிவு முடிவுகளை மாற்ற முடியும்

## அமெரிக்க விஞ்ஞானிகள் தெரிவிப்பு

(கொழும்பு)

அமெரிக்க பல்கலைக்கழகம் ஒன்றின் விஞ்ஞானிகள் இந்தியாவில் தேர்தல்களில் பயன்படுத்தப்படும் மின்னணு வாக்குப்பதிவு இயந்திரங்களை தொழில் நுட்ப ரீதியாக தாக்கக்கூடிய ஒரு யுக்தியை தாங்கள் உருவாக்கியிருப்பதாகக் கூறுகிறார்கள்.

மெக்சிகன் பல்கலைக்கழகத்தினைச் சேர்ந்த ஆராய்ச்சியாளர்கள் இணையத்தில் பிரசுரித்திருக்கும் ஒரு வீடியோ ஒன்று அவர்கள் தயாரித்த மின்னணு இயந்திரம் ஒன்றை வாக்குப்பதிவு இயந்திரத்துடன் இணைப் பதைக் காட்டியது. பிறகு அவர்கள் ஒரு மொபைல் தொலைபேசி வாயிலாக இந்த இயந்திரத்துக்கு செய்திகளை அனுப்புவதன் மூலம் வாக்குப் பதிவு முடிவுகளை மாற்ற முடிகிறது.

இந்தியத் தேர்தல் அதிகாரிகள் தங்கள் வாக்குப்பதிவு இயந்திரங்களை இவ்வாறு மோசடி செய்யப் பயன்படுத்த முடியாது என்றும் மோசடி செய்யப் பயன்படுத்துவதற்கு ஒரு வாக்குப்பதிவு இயந்திரத்தைக்கூட முதலில் பெறுவதே மிகக் கடினமானதாக இருக்கும் என்றும் அவர்கள் கூறுகிறார்கள்.

இந்தியாவில் கடந்த பத்து ஆண்டுகளுக்கும் மேலாக மின்னணு வாக்குப் பதிவு இயந்திரம் புழக்கத்தில் இருக்கிறது.

தற்போது நடக்கும் நாடாளுமன்ற மற்றும் சட்டமன்றத் தேர்தல்களில் மின்னணு வாக்குப்பதிவு இயந்திரமே முழுக்க பயன்படுத்தப்படுகிறது. (6)

# வன்னியில் ஒரு இலட்சம் பேர்வரை மீள்குடியமர்த்தப்பட்டுள்ளனர்

## கிளிநொச்சி அரச அதிபர் தெரிவிப்பு

வன்னியில் இடம்பெற்ற மோதலைத் தொடர்ந்து இடம்பெயர்ந்த மக்களில் இது வரை ஒரு இலட்சத்துக்கும் மேற்பட்டவர்கள் மீள்குடியேற்றப்பட்டுள்ளதாகக் கிளிநொச்சி மாவட்ட அரசாங்க அதிபர் திருமதி ஆர். கேதீஸ்வரன் தெரிவித்தார்.

இதன் அடிப்படையில் கிளிநொச்சி மாவட்ட கரைச்சி பிரதேச செயலக பிரிவில் 8ஆயிரத்து 310 குடும்பங்களைச் சேர்ந்த 24 ஆயிரத்து 610 பேரும் கண்டாவளை பிரதேசங்களைச் சேர்ந்த 2 ஆயிரத்து 350 குடும்பங்களைச் சேர்ந்த 7 ஆயிரத்து 210 பேரும் பச்சிலைப் பள்ளி பிரதேச செயலகப் பிரிவுகளில் 16 ஆயிரத்து 889 குடும்பங்களைச் சேர்ந்த 52 ஆயிரத்து 887 பேரும் மொத்தமாக கிளிநொச்சி மாவட்டத்தில் 32 ஆயிரத்து 650 குடும்பங்களை சேர்ந்த ஒரு இலட்சத்து 2 ஆயிரத்து 171 பேரும் மீள்குடியேற்றப்பட்டுள்ளதாகவும் அரச அதிபர் தெரிவித்தார்.

மீள் குடியேற்றம் செய்யும் மக்களுக்கான நிவாரண உதவிகளை ஐக்கிய நாடுகள் அகதிகளின் உயர்ஸ்தானிகராலய அதிகாரிகள் வழங்கி வருகின்றனர் என அவர் மேலும் தெரிவித்தார். (6)

# வர்த்தக உரிமையாளரை மிரட்டிய சந்தேக நபர் துப்பாக்கியுடன் கைது

## அக்கரைப்பற்றில் சம்பவம்

(கொழும்பு)

அம்பாறை மாவட்டம் அக்கரைப்பற்று ஆலையடிவேம்பு பிரதேசத்தில் உள்ள வீடொன்றை நேற்று முன்தினம் சோதனையிட்ட போது ரி 56 ரக துப்பாக்கியுடன் சந்தேக நபர் ஒருவரை கைது செய்ததாக பொலிஸார் தெரிவித்துள்ளார்.

சந்தேக நபர் கடந்த திங்கட்கிழமை இரவு 8.30 அளவில் நாவற்குடா பகுதியில் உள்ள வர்த்தக நிலையமொன்றில் உரிமையாளர் ஒருவரை துப்பாக்கியால் அச்சுறுத்தியுள்ளார். இது குறித்து பொலிஸாருக்கு கிடைத்த தகவலொன்றை அடுத்து மேற்கொள்ளப்பட்ட சோதனையில் குறித்த சந்தேகநபர் கைது செய்யப்பட்டதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இவர் முன்னாள் விடுதலைப்புலிகளின் தலைவர் ஒருவரின் கீழ் செயற்பட்டு வந்ததாகவும் புலிகள் அமைப்பில் உறுப்பினராக இருந்துள்ளதாகவும் பொலிஸார் குறிப்பிட்டுள்ளனர். (6)

# வெள்ளப்பெருக்கால் 14 பேர் உயிரிழப்பு; நிர்க்கதியான நிலையில் 4 இலட்சம் பேர்

## அமைச்சர் பௌஸி தகவல்



(கொழும்பு)

நாட்டில் பரவலாக பெய்து வரும் இடி மின்னலுடன் கூடிய கடும் மழை மற்றும் வெள்ளப்பெருக்கு காரணமாக நேற்று வரை 14பேர் உயிரிழந்துள்ளதுடன் 3 இலட்சத்து 92 ஆயிரம் பேர் நிர்க்கதி நிலைக்கு ஆளாகி உள்ளதாக இடர் முகாமைத்துவ அமைச்சர் ஏ.எச்.எம்.பௌஸி தெரிவித்துள்ளார்.

நிர்க்கதி நிலைக்கு ஆளானவர்கள் 39 முகாம்களிலும் நண்பர்கள் மற்றும் உறவினர்கள் வீடுகளிலும் தங்கியுள்ளதாக அமைச்சர் குறிப்பிட்டார்.

அவர்களுக்கு உடனடி நிவாரண உதவிகளை வழங்க ஜனாதிபதி ஆலோசனை வழங்கியுள்ளதாகவும் அதன்படி அமைச்சர் பஸில் ராஜபக்ஷ உலர் உணவுப் பொருட்களை வழங்க நடவடிக்கை எடுத்து வருவதாகவும் கூறினார்.

பாதிக்கப்பட்டவர்களுக்கு உதவி வழங்க ஐக்கிய நாடுகளின் உலக உணவுத் திட்டத்தின் உதவியையும் பெற்றுக்கொள்ள நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

வெள்ளப்பெருக்கு ஏற்படுவதைத் தவிர்ப்பதற்கு சாக்கடைகளை புனரமைக்கும் பணிகளையும் ஆரம்பித்துள்ளதாக அமைச்சர் மேலும் தெரிவித்தார். (2-6)

# 20.05.2010

## இன்றைய நாளின் முன்னைய பதிவுகள்

- 526 - சிரியாவில் நிகழ்ந்த நிலநடுக்கத்தில் 300 000 பேர் வரையில் கொல்லப்பட்டனர்.
- 1498 - போர்த்துக்கீச மாலுமி வாஸ்கொடகாமா இந்தியாவின் கோழிக்கோடு நகரை அடைந்தார்.
- 1570 - உலகின் முதலாவது நவீன நிலவரையை (atlas) ஆபிரகாம் ஓர்ட்டேலியஸ் வரைந்தார்.
- 1631 - முப்பதாண்டுப் போர் ஜெர்மனியின் மாக்டெபூர்க் நகரை புனித ரோமப் பேரரசு கைப்பற்றி நகர மக்களின் பெரும்பான்மையோரைப் படுகொலை செய்தது.
- 1813 - நெப்போலியன் பொனபார்ட் பிரெஞ்சுப் படைகளுடன் ஜேர்மனியின் சாக்சனி நகரில் நுழைந்து ரஷ்யா மற்றும் புரூசியாப் படைகளுடன் போரில் ஈடுபட்டு வெற்றி பெற்றான்.
- 1869 - யாழ்ப்பாணத்தில் தொலைத்தொடர்பு இணைப்பு வேலை நிறைவடைந்தது.
- 1882 - ஜெர்மனி ஆஸ்திரியா - ஹங்கேரி மற்றும் இத்தாலி ஆகிய நாடுகள் முத்தரப்புக் கூட்டணியை ஏற்படுத்தின.
- 1891 - தோமஸ் அல்வா எடிசன் தனது முதலாவது உடல் அசைவு ஒளிப்படக் கருவியைக் காட்சிப்படுத்தினார்.
- 1902 - ஐக்கிய அமெரிக்காவிடம் இருந்து கியூபா விடுதலை பெற்றது. தொமாஸ் எஸ்ட்ராடா பால்மா முதலாவது அரசுத் தலைவரானார்.
- 1949 - குவோமிங்தான் அரசு தாய்வானில் இராணுவ ஆட்சியை அறிமுகப்படுத்தியது.
- 1965 - எகிப்தில் கெய்ரோ நகரில் பாகிஸ்தான் விமானம் தரையிறங்கும் போது ஏற்பட்ட விபத்தில் 119 பேர் கொல்லப்பட்டனர்.
- 1980 - கியூபெக் மாநிலத்தில் இடம்பெற்ற வாக்கெடுப்பில் கனடாவில் இருந்து விடுதலை பெறுவதற்கு எதிராக 60 வீதத்தினர் வாக்களித்தனர்.
- 1983 - எயிட்ஸ் நோயை உண்டாக்கும் கிருமிகளைக் கண்டுபிடித்த செய்திகள் முதற் தடவையாக வெளியிடப்பட்டன.
- 1995 - கியூபெக் மாநிலத்தில் இடம்பெற்ற இரண்டாவது வாக்கெடுப்பில் கனடாவில் இருந்து விடுதலை பெறுவதற்கு எதிராக பெரும்பான்மையானோர் வாக்களித்தனர்.


### பிறப்புக்கள்

- 1799 - பல்சாக் பிரெஞ்சு எழுத்தாளர் (இ.1850)
- 1845 - அயோத்தி தாசர் தமிழறிஞர் (இ.1914)
- 1860 - எடுவாடு பூக்னர் ஜெர்மனிய வேதியியல் அறிஞர் (இ.1917)
- 1894 - சந்திரசேகரேந்திர சரஸ்வதி சுவாமிகள் காஞ்சி காமகோடி பீட குரு (இ.1994)

### இறப்புக்கள்

- 1506 - கிறிஸ்தோபர் கொலம்பஸ் இத்தாலியக் கடல் பயணி (பி.1451)
- 1947 - பிலிப் லெனார்ட் நோபல் பரிசு பெற்றவர் (பி.1862)
- 2005 - செம்பியன் செல்வன் ஈழத்து எழுத்தாளர் (பி.1943)
- 2008 - பால்ராஜ் விடுதலைப் புலிகளின் மூத்த தளபதி (பி.1965)

**2002 - கிழக்குத் தீமோரின் விடுதலையை போர்த்துக்கல் அங்கீகரித்தது. 23 ஆண்டுகால இந்தோனேசிய ஆட்சி மற்றும் மூன்றாண்டு கால ஐ.நா.வின் தற்காலிக ஆட்சி முடிவுக்கு வந்து கிழக்குத் தீமோர் விடுதலை பெற்றது.**



# மாகாண மட்ட தமிழ்த்தினப் போட்டியின் எழுத்தாக்கப் போட்டி முடிவுகள்

(யாழ்ப்பாணம்)

மாகாண மட்ட ரீதியாக நடத்தப்பட்ட தமிழ்த் தின எழுத்தாக்கப் போட்டி முடிவுகள் வெளியிடப்பட்டுள்ளன. இப்போட்டியில் முதல் மூன்று இடங்களைப் பெற்ற மாணவர்களின் விபரம் வருமாறு,

**ஆக்கம்- எழுத்து (பிரிவு-1)**

பா. காருண்யா (யா/சென் ஜோன் பொஸ்கோ வித்தியாலயம்), ந.அபிராமி (மு/வித்தியானந்தாக் கல்லூரி), ம.லக்சன் (வ/புதுக்குளம் மகா வித்தியாலயம்)

**கட்டுரை வரைதல் (பிரிவு-2)**

ப.கஸ்தூரி (யா/வேம்படி மகளிர் உயர்தரப் பாடசாலை), இ.சங்கீர்த்தனா (கிளி/கிளிநொச்சி இந்துக்கல்லூரி), செ.அருந்துசன் (மு/ஸ்ரீசுப்பிரமணியம் வித்தியா சாலை),

**(பிரிவு-3)**

ப.கதிர்தர்சினி(யா/வேம்படி மகளிர் உயர்தரப் பாடசாலை),க.மோகனப்பிரியா (மன்/உயிலங்குளம் றோ.க.த.வி), க.தூரிகா (கிளி/முழங்காவில் மகா வித்தியாலயம்),

**கட்டுரை வரைதல், இலக்கியம் நயத்தல்-(பிரிவு-4)**

சோ.நிரஞ்சன்(வ/கிடாச்சூரி அ.த.க.பாடசாலை), பொ.கோகிலா (மு/ வற்றாப்பளை மகா வித்தியாலம்), ஏ.எப்.நிபாயா (மன்/நானாட்டான் ம.வி),

**தமிழியற் கட்டுரை வரைதல், இலக்கியம் நயத்தல் -(பிரிவு- 5)**

ப. கஜிதா(யா/மீசாலை வீரசிங்கம் மகா.வி.) , அ.மடுமலர் (மன்/ நானாட்டான் ம.வி), சோ.வசந்தகௌரி(வ/புதுக்குளம் மகா வித்தி,

**இலக்கணப் போட்டி(பிரிவு-4)**

கோ.தர்மிக்கா(யா/வட.இந்து மகளிர் கல்லூரி), ச.கீர்த்திகா (வ/இறம்பைக்குளம் மகளிர் மகா வித்தி.), உ.துஷேந்தினி (மன்/முருங்கன் ம.வி.)

**(பிரிவு-5)**

க.சிவகௌரிநாயகி (யா/யூனியன் கல்லூரி), இ.நிஷாந்தினி (வ/தமிழ் மத்திய மகா வித்தி, ந.ஜீவிதா(மன்/பத்திமா ம.ம.வித்தி ,

**திறனாய்வுப் போட்டி (பிரிவு-5)**

இ.சுயந்தன்(வ/புதுக்குளம் மகா வித்தி), வி.மேகலா(யா/கரம்பொன் சிறியபுஷ்ப மகா வித்தி, றொ.இ.ஜெய்ராஜ்(மன்/ புனித சவேரியார் ஆண்கள் கல்லூரி),

**குறுநாடக ஆக்கம் (பிரிவு-4)**

து.சங்கீர்த்தனா(யா/அருணோதயக் கல்லூரி), அ.அனந்தா(கிளி/கிளிநொச்சி மத்திய கல்லூரி), செ.டேசிகா(வ/சுந்தரபுரம் சரஸ்வதி வித்தி,

**பிரிவு -5**

அ. கோகுலன் (யா/நெல்லியடி ம.ம.வித்தி , கு.நிதர்சனா(வ/சைவப்பிரகாசா மகளிர் கல்லூரி), ச.நிலானி ( மு/மல்லாவி மத்திய கல்லூரி),

**கவிதை ஆக்கம் (பிரிவு-4)**

சி.பிரவீனா (கிளி/புனித திரேசா பெண்கள் கல்லூரி), கு.ரஜிந்தினி (வ/பூம்புகார் கண்ணகி வித்தியாசாலை), செ. சுகாங்கி ( யா/ விக்கினேஸ்வராக் கல்லூரி)

**பிரிவு -5**

க.றமாப்பிரியா ((மன்/ உயிலங்குளம் றோ.க.த.வி), ஜெ. ஜனார்தகன் (மு/ யோகபுரம் மகா வித்தி, ஆ. கனிஸ்ரா (யா/ மானிப்பாய் மகளிர் கல்லூரி)

**சிறுகதையாக்கம் பிரிவு -4**

வி.திவாகரன் (யா/ ஸ்கந்தவரோதயாக் கல்லூரி), பா. உஷாந்தினி (மு/ புதுக்குடியிருப்பு மத்திய கல்லூரி), ப.சியாந்தனா (மன்/ தோட்ட வெளி அ.த.க பா),

**பிரிவு -5**

இ.பிரியங்கா (யா/மெதடிஸ்த பெண்கள் உயர்தர பாடசாலை), ஞா. அனுசியா (மடு/ அடம்பன் மத்திய.ம.வி), கா.கிரிசாந்தினி (வ/ சைவப்பிரகாச மகளிர் கல்லூரி)

**சிங்கள மாணவர்களுக்கான தமிழ் உறுப்பெழுத்து விஷேட பிரிவு -1**

எஸ்கே. சஜீகா தில்ஹானி(வ/காமினி வித்தியாலயம்

**சிங்கள மாணவர்களுக்கான தமிழ் உறுப் பெழுத்து விஷேட பிரிவு -2**

சாருகா பிரியதர்சினி(வ/காமினி வித்தியாலயம் (4-6-7)

## க.பொ.த(உ/த) கணித, விஞ்ஞான பிரிவு மாணவர்களுக்கான செயலமர்வு

(யாழ்ப்பாணம்)

தொண்டைமானாறு வெளிக்கள நிலையத்தினால் க.பொ.த(உ/த) கணித, விஞ்ஞானப் பிரிவு மாணவர்களுக்கான செயலமர்வு இன்று வியாழக்கிழமை காலை 9 மணிக்கு யாழ்.மத்திய கல்லூரியில் நடைபெறவுள்ளது.

இதில் பௌதீகவியல், இரசாயனவியல், உயிரியல் ஆகிய பாட பரீட்சை விடைத்தாள்களில் மாணவர்கள் விடும் தவறுகள் பிரதம பரீட்சை மேற்பார்வையாளர்களால் சுட்டிக் காட்டப்படவுள்ளது.

பிரபல விரிவுரையாளர்களினால் இச் செயலமர்வு நடத்தப்படவுள்ளதுடன் க.பொ.த (உ/த) பரீட்சைக்கு தோற்றவுள்ள மாணவர்கள் இதில் கலந்துகொள்ளுமாறு தொண்டைமானாறு வெளிக்கள நிலையம் அறிவித்துள்ளது. (4)

## தெரிவு செய்யப்பட்ட மாணவர்களுக்கான இலவச மூக்குக் கண்ணாடி வழங்கல்

(யாழ்ப்பாணம்)

கடவுளின் சொந்தக் குழந்தைகள் நிறுவனத்தின் அனுசரணையுடன் கடந்த பெப்ரவரிமாதம் 25 ஆம் திகதியன்று நடாத்தப்பட்ட கண் சிகிச்சை முகாமில் இனம் காணப்பட்ட 81 பார்வைக் குறைபாடுடைய மாணவர்களுக்கு இலவசமாக மூக்குக் கண்ணாடிகள் வழங்கப்படவுள்ளன.

இவர்களுக்கான மூக்குக் கண்ணாடி வழங்கும் நிகழ்வு எதிர்வரும் 25 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை காலை 9.30 மணியளவில் யாழ்.கல்வி வலய முகாமைத்துவ மண்டபத்தில் இடம்பெறவுள்ளது.

எனவே தெரிவு செய்யப்பட்ட மாணவர்களை உரிய நேரத்தில் தவறாது வருகை தந்து பெற்றுக்கொள்ளுமாறு யாழ்.வலயக் கல்விப் பணிப்பாளர் தெரிவித்துள்ளார். (2-7)



நீர்வேலி கரந்தன் சிவபூதநாதேஸ்வர சுவாமி கோவிலின் வருடாந்தத் தேர்த் திருவிழாவின் போது மூன்று திருத் தேர்களும் உலா வருவதைப் படத்தில் காணலாம்.

**யாழ்.மறை மாவட்ட**

## இளையோர் எழுச்சி ஒன்றுகூடல்

(யாழ்ப்பாணம்)

யாழ்.மறைமாவட்ட இளையோர் ஒன்றியத்தின் ஏற்பாட்டில் யாழ்.மறை மாவட்டத் தின் எல்லாப் பங்குகளிலும் இருந்து பிரதிநிதிகளாக வருகை தரும் இளையோர்கள் இறையாட்சிப் பணியில் தனது நிலைபற்றி ஆய்வு செய்யும் எழுச்சி ஒன்றுகூடல் எதிர்வரும் 30ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை நடத்தப்படவுள்ளது.

இதில் இவ் ஒன்றியத்தினால் நடத்தப்பட்ட போட்டிகளில் வெற்றி பெற்றோருக்கான பரிசில்களும் வழங்கப்படவுள்ளது. (4)

## பரு.கோட்ட மட்ட ஆங்கில தின போட்டி

(அல்வாய்)

பருத்தித்துறை கோட்டமட்ட ஆங்கில தினப் போட்டி நாளை மறுதினம் சனிக்கிழமை யா/வட இந்து கல்லூரி மண்டபத்தில் நடைபெறும் என ஆங்கில பாட உதவிக் கல்விப் பணிப்பாளர் சி.சுந்தரமூர்த்தி அறிவித்துள்ளார். (4-9)

## தேசிய மட்ட ஆங்கில தின போட்டி-2008 பிற்போடப்பட்டுள்ளது

(அல்வாய்)

தேசிய மட்ட ஆங்கில தினப் போட்டி-2008 நாளை மறுதினம் சனிக்கிழமை நடைபெறும் என முன்னர் அறிவிக்கப்பட்டிருந்தது. எனினும் நாட்டின் சீரற்ற காலநிலையால் இப் போட்டிகள் பிற்போடப்பட்டுள்ளதாகவும் இது தொடர்பான திகதி பின்னர் அறிவிக்கப்படும் என சகல வலயக் கல்வி அலுவலகங்களுக்கும் அறிவிக்கப்பட்டுள்ளதாக மத்திய கல்வி அமைச்சின் ஆங்கில பாட பிரிவு செயலாளர் அறிவித்துள்ளார். (4-19)

## ஆசிரியர்களுக்கான செயலமர்வு

(அல்வாய்)

வடமராட்சி கல்வி வலய கணிதபாட ஆசிரியர்களுக்கான கேந்திர கணிதம் தொடர்பான இரண்டாம் கட்ட செயலமர்வு நாளை மறுதினம் சனிக்கிழமை காலை 8.30 மணிக்கு யா/நெல்லியடி மத்திய மகாவித்தியாலயத்தில் நடைபெறவுள்ளது.

இதில் வடமராட்சி வலய கணித ஆசிரியர்களை தவறாது கலந்துகொள்ளுமாறும் தரம் 11 இல் ஒழுங்காக பாடசாலைக்கு சமுகமளிக்கும் மாணவர்களின் விபரங்களை கொண்டு வருமாறும் வடமராட்சி வலயக் கல்விப் பணிப்பாளர் வ.செல்வராசா அறிவித்துள்ளார். (4-29)

**யாழ்.கல்வி வலய**

## க.பொ.த (சா/த) மாணவர்களுக்கான ஆங்கில மொழி பரீட்சை

(யாழ்ப்பாணம்)

யா /வைத்தீஸ்வராக் கல்லூரியின் வெளிச்சவீடு பாடசாலை அலகு (Lighthouse School Unit) தரம்11 மாணவர்களின் ஆங்கில மொழி விருத்தியை மேம்படுத்த இலவச தொடர் பயிற்சி வினாத்தாள்களை வழங்க பயிற்சி அளிக்கப்படவுள்ளது.

இதில் முதலாவது பரீட்சை யாழ்.கல்வி வலயப் பாடசாலைகளில் எதிர்வரும் 24ஆம் திகதி திங்கட்கிழமை நடைபெற ஏற்பாடாகியுள்ளது.

வினாத்தாள் பொதிகளை பாடசாலை அதிபர்கள் தத்தம் கோட்டக்கல்விப் பணிமனைகளில் பெற்றுக்கொள்ள முடியும் என வித்தியாலய அதிபர் அறிவித்துள்ளார்.(6-4)

## அலங்கார உற்சவம்

(யாழ்ப்பாணம்)

ஆவரங்கால் மேற்கு ஞான வைரவர் ஆலய அலங்கார உற்சவம் கடந்த 16 ஆம் திகதி ஆரம்பமாகி நடைபெற்று வருகின்றது.

இவ் உற்சவத்தில் 11 ஆம் திருவிழாவான எதிர்வரும்26 ஆம் திகதி தீர்த்தோற்சவம் இடம்பெற்று மாலை வசந்த மண்டப பூசையைத் தொடர்ந்து திருவூஞ்சல் இடம்பெறவுள்ளது. (4)

## வைகாசிப் பெருவிழா

(மருதங்கேணி)

தொண்டைமானாறு சந்நிதியான் ஆலயச்சூழலில் அமைந்திருக்கும் சந்நிதியான் ஆச்சிரம சைவகலை பண்பாட்டு பேரவையினால் வருடந்தோறும் நடத்தி வரும் வைகாசிப் பெருவிழா நாளை வெள்ளிக்கிழமை காலை 6 மணிக்கு ஆரம்பமாகி நடைபெறவுள்ளது.

இவ்விழாவின் சிறப்பு நிகழ்வாக இளைப்பாறிய ஆசிரியர் ஐ.சண்முகலிங்கம் தலைமையில் ''ஒரு திருமுருகன் வந்தான்'' என்னும் விடயம் பற்றி கவி அரங்கம் இடம் பெறவுள்ளதுடன் இதனைத் தொடர்ந்து வறுமைக்கோட்டின் கீழ் வாழும் மாணவி ஒருவருக்கு துவிச்சக்கரவண்டி வழங்கும் நிகழ்வும் இடம்பெறவுள்ளது. (4-35)




## இளையோர் எழுச்சி ஒன்றுகூடல்

(யாழ்ப்பாணம்)

யாழ்.மறை மாவட்டத்தின் எல்லாப் பங்குகளிலும் இருந்து பிரதிநிதிகளாக வருகை தரும் இளையோர்கள் இறையாட்சிப் பணியில் தனது நிலைபற்றி ஆய்வு செய்யும் எழுச்சி ஒன்று கூடல் ஒன்று வரும் 3ஆம் திகதி நடைபெறவுள்ளது.

இவ் ஒன்றுகூடல் யாழ்.மறைமாவட்ட இளையோர் ஒன்றியத்தினால் நடாத்தப்படவுள்ளது.

இந்நிகழ் வில் ஒன்றியத்தினால் நடத்தப்பட்ட போட்டிகளில் வெற்றிபெற்றோருக்கான பரிசில்களும் வழங்கப்படவுள்ளன. (2)

# எம்.எஸ்.ஒபீஸ் -2010 புதுமைகள்

*(சென்ற வாரத் தொடர்ச்சி)*

ஒபீஸ் 2010 இல் பைல் மெனு மீண்டும் தரப்பட்டுள்ளது குறிப்பிடத்தக்கது. 2007 தொகுப்பில் ஓப்பன் அண்ட் சேவ் டயலொக் பொக்ஸ், பிரிண்ட்பங்சன் போன்றவை ஒபீஸ் மெனுவில் மறைத்து வைக்கப்பட்டிருந்தன. இவை இப்போது மிகத் தெளிவாக, வண்ணக் கலவையில் காட்டப்படுகின்றன. ரிப்பன் மெனுவில் இடது ஓரம் அனைத்தும், பைல் ஒப்ஷனாகத் தரப்பட்டுள்ளன.


மேலும் இந்த ரிப்பன் இன்டர்பேஸ் இணைந்து டெவலப்பர்கள் பல டேப்களைத் தங்கள் விருப்பத்திற்கேற்ப உருவாக்கி அமைக்கலாம். ஒப்ஜெக்ட், கிராபிக்ஸ் போன்றவற்றை எடிட் செய்வது, மாற்றி அமைப்பது போன்றவை. ஒபீஸ் 2010 தொகுப்பின் அனைத்து புரோகிராம்களில் ஒரே மாதிரியாக உள்ளன.

ஆனால் டெக்ஸ்ட் எடிட் செய்வதில், இந்தப் புரோகிராம்களுக்கிடையே வேறுபாடுகள் உள்ளன. வேர்ட் தொகுப்பில் டாகுமெண்ட் ஒன்றில் சொற்களைத் தேடுவதற்கு பைண்ட் அண்ட் ரீபிளேஸ் பயன்படுத்துகிறோம். வேர்ட் 2010 நேவிகேஷன் பேனில் தரப்பட்டிருக்கும் மூன்றாவது டேப்பில் இந்த தேடல்கள் அனைத்தும் தரப்பட்டுள்ளன.

சேர்ச் பொக்ஸில் ஒரு சொல்லை டைப் செய்கையில்,

அந்த சொல் இருக்கும் அனைத்து இடங்களும் ஹைலைட் செய்யப்படுகின்றன. இதனால், நாம் சொல் உள்ள அடுத்தடுத்த இடங்களை தொடர் முயற்சி இன்றி அறியலாம். எக்ஸெல் தொகுப்பில் அனைத்து பங்ஷன்களும் மீண்டும் துல்லியமாகவும் வேகமாகவும் செயல்படும்படி அமைக்கப்பட்டுள்ளன். டேட்டா பேஸ் தனியே அமைத்து, எக்ஸெல் வேர்க் ஷீட்டில் இணைத்துப் பயன்படுத்துபவர்களுக்கு இந்தத் தொகுப்பில் பல வசதிகள் கூடுதலாகத் தரப்பட்டுள்ளன.

அவுட்லுக் 2010 இல் மெனுவிற்குப் பதில் ரிப்பன் இன்டர்பேஸ் தந்திருப்பது ஒரு முக்கிய மாற்றமாகும். புதியதாக தரப்பட்டுள்ள இரண்டு வசதிகளை இங்கு குறிப்பிட வேண்டும் .குயிக் ஸ்டெப்ஸ் (Quick Steps) என்ற ஒரு டூல் உள்ளது. இதில் கட்டளைகளை லிஸ்ட்டிலிருந்து எடுத்து, அவற்றைச் செயல்படுத்தும் வரிசைப்படி அமைக்கலாம். பின்னர் இதனை ஹோம் டேப்பில் உள்ள பட்டன் ஒன்றுக்கு இணைக்கலாம். இந்த பட்டனை அழுத்துவதன் மூலம் அனைத்துக் கட்டளைகளையும் செயல்படுத்தலாம்.



அடுத்ததாக மெசேஜ்களை குழுவாக அமைக்கும் டூல் செயல்படும் விதத்தினைக் குறிப்பிடலாம். மெசேஜ் சப்ஜெக்ட் அடிப்படையில் அவை குழுவாக அமைக்கப்படுகின்றன. இதில் புதியதாக இக்னோர் (Ignore) ஒப்ஷன் தரப்பட்டுள்ளது. இதனை அழுத்தினால் தேர்ந்தெடுக்கப்பட்ட மெசேஜ் அல்லது கொன்வர்சேஷன் மற்றும் அதன் பின்னணியில் வரப்போகும் அனைத்து மெசேஜ்களும் தானாகவே நீக்கப்படுகின்றன.

ஒருவருக்கு பிரதி செய்யப்படும் தேவையற்ற மெசேஜ்களை நீக்க இது பயன்படும். இந்த டூல் சப்ஜெக்ட் தலைப்பின் அடிப்படையில் செயல்படுவதால் அதில் சிறிய மாற்றம் ஏற்பட்டாலும் இந்த வசதி செயல்படாமல் போய்விடும்.

இந்தப் பிரச்சினை வரும் காலத்தில் தீர்க்கப்படலாம். அடுத்ததாக ஒபீஸ் 2010 தொகுப்பு எவற்றை எல்லாம் கொண்டிருக்கிறது என்று பார்க்கலாம். அனைத்து எடிஷன்களும் Word Excel PowerPoint மற்றும் One Note ஆகிய அனைத்தையும் கொண்டுள்ளன. இவை 32 பிட் மற்றும் 64 பிட் வகைகளில் கிடைக்கின்றன.

### ஹோம் எடிஷன் (Home Edition)

இது கீழ்க்காணும் வகைகளில் கிடைக்கிறது. Microsoft Office Home and Student 2010 - இந்த தொகுப்பினைப் பெறும் ஒருவர் தன் வீட்டில் மூன்று பேர்சனல் கணனிகளில் இதனை நிறுவிக் கொள்ளலாம். மேலே சொல்லப்பட்ட இந்த நான்கு அடிப்படை தொகுப்புகள் மட்டுமே உள்ளன. இதனை எந்த வர்த்தக நிறுவனத்திலும் இலாப நோக்கில் செயல்படும் அமைப்புகளிலும் பயன்படுத்தக் கூடாது. அரசு அலுவலகங்களிலும் பயன்படுத்துவது ஒப்பந்தப்படி தடை செய்யப்படுகிறது.

### Microsoft Office Home and Business 2010

இது சிறிய அளவில் வர்த்தகத்தில் ஈடுபடுவோருக்கென வடிவமைக்கப்பட்டு ள்ளது. மேலே சொல்லப்பட்ட நான்கு தொகுப்புகளுடன் அவுட்லுக் தொகுப்பும் இணைக்கப்பட்டுள்ளது.

### Microsoft Office Professionaol Academic 2010

இந்தத் தொகுப்பில் அவுட்லுக் பப்ளிஷர் மற்றும் அக்செஸ் (Outlook Publisher and Access) உள்ளன. -- @_edu என்ற இமெயில் முகவரியைக் கொண்டுள்ள எவருக்கும் விற்பனை செய்யப்படுகிறது. அத்தாட்சி பெற்ற கல்வி சார்ந்த அமைப்புகள் வழியாகவே இதன் விற்பனை மேற்கொள்ளப்படும்.

### பிசினஸ் எடிஷன் Business Edition

இது கீழ்க்காணும் வகைகளில் கிடைக்கிறது.

### Microsoft Office Standard 2010

இந்தத் தொகுப்பில் அடிப்படையான நான்கு புரோகிராம்களுடன் அவுட்லுக் மற்றும் பப்ளிஷர் இணைக்கப்பட்டுள்ளன. மொத்த வால்யூம் லைசன்ஸ் முறையில் இது விற்பனை செய்யப்படும்.

### Microsoft Office Professional 2010

சில்லறை விற்பனையாளர்கள் மூலம் பெற்றுக்கொள்ளலாம். அவுட்லுக், பப்ளிஷர் மற்றும் அக்செஸ் இணைக்கப் பட்டுள்ளன.

### Microsoft Office Professional Plus 2010

அடிப்படை தொகுப்புகளுடன் (Outlook, Publisher,Access,Share point Workspace (formerly Groove), Communicate, and Infopath ஆகியவை இணைக்கப்பட்டு கிடைக்கின்றன. வால்யூம் லைசன்ஸ் முறையில் வாங்கலாம்.

ஒபீஸ் 2010 ஐ இயக்க உங்கள் சிஸ்டம் எந்தக் கட்டமைப்புடன் இருக்க வேண்டும் என்பதனைப் பார்க்கலாம். விண்டோஸ் எக்ஸ்பி(எஸ்.பி.3 இணைப்புடன்), விண்டோஸ் விஸ்டா எஸ்.பி.1 அல்லது பின்வந்த இணைப்புடன் (32 அல்லது 64 பிட்) விண்டோஸ் 7 (32 அல்லது 64 பிட்) விண்டோஸ் சேர்வர் 2003 ஆர் 2 மற்றும் விண்டோஸ் சேர்வர் 2008.

ஹார்ட் டிஸ்க் குறைந்தது 3ஜிபி இதற்கென இருக்கவேண்டும். வழக்கம்போல, ஒரு ஒபீஸ் 2010 தொகுப்பு, ஒரு கணனியில் மட்டுமே பதிந்து இயக்க லைசன்ஸ் வழங்கப்படுகிறது.கூடுதலாக பதிவதற்கென, ஒரு சில தொகுப்புகள் மட்டும் சில வரையறைகளுக்குள் அனுமதிக்கப்பட்டுள்ளன.

மேலே குறிப்பிட்டவை அல்லாமல் ஒபீஸ் ஸ்டார்ட்டர் எடிஷன் கிடைக்கிறது. ஆனால் இவை கணனி தயாரிப்பு நிறுவனங்களுக்கு ஒப்பந்த அடிப்படையில் வழங்கப்படுகின்றன. வெளியே தனியே சில்லறை விற்பனையில் வாங்கமுடியாது.

இதில் வேர்ட் ஸ்டார்ட்டர் மற்றும் எக்ஸெல் ஸ்டார்ட்டர் ஆகியவை மட்டும் உள்ளன. இதனைப் பெற்றவர்கள், கூடுதலாகப் பணம் செலுத்த முழுமையான ஒபீஸ் 2010 தொகுப்பாகத் தங்கள் ஸ்டார்ட்டர் எடிஷனை மாற்றலாம். (முற்றும்)




# உலகின் மிகப்பெரிய பிளாஷ் ட்ரைவ்

எளிதாகக் கையில் எடுத்துச்சென்று பயன்படுத்த நமக்கு உதவுவது பிளாஷ் டிரைவ். ஆனால் இதன் கொள்ளளவு நாம் எதிர்பார்த்த அளவு இல்லை என்பது ஒரு சிலரின் ஆதங்கமாகும். இதுவரை நமக்கு அதிகபட்ச அளவாக 64 ஜிபி கொள்ளளவுடன் பி ள ா ஷ் டிரைவ்கள்கிடைத்து வருகின்றன.




அண்மையில் இத்துறையில் புகழ் பெற்ற கிங்ஸ்டன் நிறுவனம் தன்னுடைய டேட்டா ட்ராவலர் வரிசையில், 256 ஜிபி கொள்ளளவுடன் பிளாஷ் ட்ரைவ் ஒன்றைத் தயார் செய்து விற்பனைக்கு அறிமுகப் படுத்தியுள்ளது.

டேட்டா ட்ராவலர் 310 என்ற பெயரில் வந்துள்ள இந்த ட்ரைவ், ஒளி ஊடுருவிச் செல்லும் வகையில் அமைப்பினைக் கொண்டுள்ளது. இதன் நீளம் 73.7 மிமீ., தடிமன் 16.1 மிமீ., அகலம் 22.2 மிமீ. எடையும் மிகவும் குறைவு.சற்று தடிமன் அதிகமாக இருப்பதால், அடுத்தடுத்து இரண்டு யு.எஸ்.பி.ட்ரைவ் இருந்தால், இதனை செருகிய பின்னர் இன்னொரு பிளாஷ் ட்ரைவினைச் செருகுவது கடினம்.

இந்த ட்ரைவ் செயல்படுகையில் , இதனுள்ளே இருக்கும் எல்.இ.டி.விளக்கு எரிந்து காட்டுகிறது. இதன் ட்ரைவ் என். டி.எவ்.எஸ். வகையில் போர்மட் செய்யப்பட்டுள்ளது.இதில் 4 ஜிபி அளவுக்கு மேல் உள்ள பைல்களையும் பிரதி செய்திடலாம்.இதிலேயே பாஸ்வேர்ட் ட்ராவலர் என்னும் சொப்வெயர் பதிந்து கிடைக்கிறது. முதல் முதலாக இதனைப் பயன்படுத்து கையில் பிரைவேட் ஸோன் என்று ஒரு பகுதியை உருவாக்குமாறு கேட்டுக்கொள் கிறது. மீதமுள்ள பகுதி பப்ளிக் ஸோன் ஆக போர்மட் செய்யப்படுகிறது.

முதல் பகுதியில் கொப்பி செய்யப்படும் பைல்களை,நீங்கள் மட்டுமே கையாளமுடியும். அதற்கான பாஸ்வேர்ட் பாதுகாப்பினை நீங்கள் ஏற்படுத்திக்கொள்ளலாம். ஆனால் இதன் விலை எந்தவகையிலும் பொருத்தமானதாக இல்லை. குறிக்கப்பட்டுள்ள விலை ஆயிரம் அமெரிக்க டொலர்கள். இதனால் விற்பனையாவது சற்று கடினமே.

# மூவி எடிட்டிங் டூல்ஸ்




நீங்களாகவே தயாரித்த உங்களுடைய ஹோம் மூவீஸ்களுக்கு மெருகூட்ட திட்டமிடுகிறீர்களா? ஒன்லைனினில் இந்த வேலைகளை மிக எளிதாக மேற்கொள்ள உதவுகிறது http:// pixorial. com/என்னும் இணையத் தளம். எப்படிப் படங்களுக்கு அடோப் போட்டோஷொப் அல்லது அண்மைக் கால அப்ளிகேஷன் சி.எஸ்.4 உதவுகிறதோ, அதேபோல பிக்ஸோரியல் என்னும் இந்தத் தளம் அனைத்து டூல்களையும் தரு கிறது.

நம் வீடியோ பைல்களுக்கு இந்தத் தளம் 10 ஜிபி இடம் தருகிறது. 800எம்பி வரையிலான அளவு எந்த போர்மட்டிலும் வீடியோ பைல்களை அனுப்பி மெருகூட்டலாம். AVI, FLV, MP4, MPEG, DV மற்றும்WMV என அனைத்து வகை போர்மட் பைல்களையும் இந்தத் தளம் ஏற்றுக்கொள்கிறது.

உங்கள் வீடியோ பைலை இந்தத் தளத்தில் அப்லோட் செய்தவுடன், இந்தத தளம் தரும் எளிய ஒன்லைன் எடிட்டரைப் பயன்படுத்தலாம். கிளிப் காட்சிகளை எப்படி இணைப்பது என்ற வரிசையைக் காட்டலாம். இதனை ஒரு ஸ்டோரி போர்டாக அமைக்கலாம்.

பின்னர் ஒவ்வொன்றுக்கும் நேரம் அமைப்பது, தோன்றி மறைவது போன்ற எபக்டுகளைத் தரலாம். தலைப்புகளை அமைக்கலாம். மொத்தமாக அனைத்தும் முடிந்த பின்னர், மூவியினை அதிகமான அல்லது குறைந்த செல்யூசனில் வடிவமைத்து டவுண்லோட் செய்திடலாம்.

நீங்கள் விரும்பினால் பின்னர் இதனை எந்த சோஷியல் நெட்வேர்க் தளங்களிலும் பதியலாம்.அல்லது டிவிடியில் கொப்பி செய்திடலாம்.

முதலில் இந்தத் தளத்தில் நுழைந்தவுடன், உங்களுக்கென உள்ள இமெயில் எக்கவுண்ட் மற்றும் அதற்கான பாஸ்வேர்ட் கொடுத்து எக்கவுண்ட் ஒன்று தொடங்க வேண்டும்.


### இந்தவார இணையத்தளம்

பின்னர் காட்டப்படும் விண்டோவில் மூன்று ஒப்ஷன்கள் கிடைக்கும். உங்கள் ஹோம் வீடியோ டைலை அப்லோட் செய்வது,உங்களுடைய ஷோவினை நீங்களே உருவாக்குவது மற்றும் உங்கள் படைப்புகளை மற்றவர்களுடன் பகிர்ந்து கொள்வது.

உங்களுக்கென இந்தத் தளத்தில் தரப்படும் 10ஜிபி இடத்தில் உங்கள் வீடியோக்களைப் பதிந்துவைக்கலாம்.அல்லது உங்களுக்குப் பிரியமான சோஷியல் நெட்வேர்க் தளங்களிலும் பதிந்துவைக்கலாம். இந்தத் தளத்தின் முகவரி:http://www.pixorial.com/

# இணைய ஊடகவழியில் கல்வியும் தகவல்களும்

4



இந்தியாவில் 18-23 வயது இளைஞர், யுவதிகளின் 7% ஆனவர்களும், இலங்கையில் 2% ஆனவர்களும் உயர் கல்வியைப் பெற வாய்ப்பளித்துள்ளதாக அறிக்கைகள் குறிப்பிடுகின்றன. பல்கலைக்கழகக் கல்வியைப் பெற வாய்ப்பற்றோருக்குக் கல்வி வழங்குவதாக பல நாடுகளில் பல்கலைக் கழகங்களுக்கு இணையாக செயற்பட்டு கல்வித்தகைமையை வழங்குவதை அவதானிக்க முடிகின்றது. பல்கலைக்கழக மட்டத்தில் விரிவுரை நடந்தும் Vedio conferencing முறைமை வளர்ச்சி பெற்றுள்ளது. இதற்கு Broad Band Media நுட்ப முறையை தகவலை சேமித்து தேவையான நேரங்களில் பயன்படுத்துவதற்கு வாய்ப்பளிக்கின்றது.

இலங்கையைப் பொறுத்தமட்டில் இணைய சேவையைப் பெற்றுக்கொள்வதில் ¶ ß ¼ Ä ISP (Intern Service Provider) நிறுவனம் முக்கியமானது.

இங்கு பயனைப் பெறுவோர் பின்வரும் வசதிகளை ஏற்படுத்திக் கொள்ளவேண்டும்.

**சேவை பெறுவோர் செலுத்த வேண்டிய இணைப்புக் கட்டணம்**

- தொலைபேசிக் கட்டணம்

இவ்வாறு சேவை வழங்கும் நிறுவனத்தின் ஊடாக இணையத் தொடர்புகளைப் பெற்றுக்கொள்ள முடியுமாயினும் அதன் கட்டணம் உயர் தொகையாக இருப்பதனால் நடைமுறையில் பொருத்தமற்றதாகவே அமைகின்றது. இதன் காரணமாக இலங்கையில் பின்வரும் நிறுவனங்கள் மூலம் இணைய வசதிகளைப் பெறக்கூடிய வாய்ப்புக்களை ஏற்படுத்தப்பட்டுள்ளது.

உதாரணங்களாக

| | |
|---|---|
| ஸ்ரீலங்கா ரெலிகொம் | -பான் லங்கா நெட்வேக் |
| லங்கா இன்டநெட் கம்பனி | - லங்கா கொம்னிகேஷன் |
| இலங்கைக் கல்வி ஆராய்ச்சி வலைப்பின்னல் | - ஸ்ரீ கொம் நிறுவனம் |
| இன்போலப் நிறுவனம் | -இலக்றோ டெக்ஸ் |
| ஸ்ன்டெல் கம்பனி | - இட்மின் |


இணைய தொடர்பை வழங்கும் முன்னணி நிறுவனமான ஸ்ரீலங்கா ரெலி கொம் ஆரம்ப கட்டமாக நாடு முழுவதும் ஆயிரத்து 100 பாடசாலைகளுக்கு அகவப்படி இணையத்தள இணைப்பை வழங்க நடவடிக்கை எடுத்துள்ளது.

இதற்கு ரெலிகொம், கல்வி அமைச்சு, ஆசிய அபிவிருத்தி வங்கி என்பன இணைந்து இரண்டாம் நிலைக் கல்வி நவீன மயப்படுத்தல் திட்டத்தை அறிமுகம் செய்துள்ளமை குறிப்பிடத்தக்கது.


இதன்மூலம் சாதாரண மாணவர்கள் தகவல் அறிவியலைப் பெறுதல்,ஆசிரிய பயிற்சி, பாடவிதான வளங்களைப் பெற உதவுதல் சாத்தியமாகும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

கனடா அரசின் உதவியுடன் இணையத் தளத்தினூடாக தொலைக் கற்றல் tele learning centres நிலையங்களை நிறுவும் செயற்றிட்டமும் திட்டமிடப்பட்டுள்ளது. தென்னாசிய நாடுகளைப் பொறுத்தமட்டில் உலகின் குடித்தொகையில் 23% சதவீதத்தைத் தன்னகத்தே கொண்டுள்ளது. இதில் 1% சதவீதத்தினரே இணைய வசதிகளைப் பயன்படுத்துபவர்களாக உள்ளனர்.

ஐக்கிய அமெரிக்காவில் 3:1 இந்தியா, பாகிஸ்தான், வங்களாதேசம் ப்த்தாயிரம் பேருக்கு 1என்றும் இலங்கையில் ஆயிரம் பேர் - 3பேர்,சுவிஸ் ஆயிரம் பேருக்கு 400



என்றும்(சிறுவர் நிலை அறிக்கை யுனிசெப் - 2000) குறிப்பிடுகின்றது.



**பரராஜசிங்கம் இராஜேஸ்வரன்**
ஆசிரிய பயிற்றுவிப்பாளர் -ஊடக தகவல் கற்கை
ஆசிரியர் - தொடர்பாடல் ஊடகக்கல்வி
யா/ கொக்குவில் இந்துக் கல்லூரி

ஜேர்மனியில் 21.5 % இணையத்தளப் பாவனையாளர் உயர்கல்வியைப் பெறுவதாக வும், வட அமெரிக்கா மற்றும் ஐரோப்பாவில் இணையம் பயன்படுத்துவோர் விகிதம் 1:35 ஆகவும், ஆபிரிக்க நாடுகளில் 1:250 ஆகவும் உள்ளமை பற்றி பிறிதொரு அறிக்கை சுட்டிக்காட்டுகின்றது.

உலகில் இணைய வழி மூலம் உயர் கல்வி வழங்கும் முன்னோடி நிகர் நிலையை பல்கலைக்கழகம் ஆபிரிக்கா நிகர் நிலைப் பல்கலைக் கழகம் ஆகும். செயற்கைக்கோள் தகவல் முறை சார்ந்த தொலைக் கல்வி முறையை இது கொண்டுள்ளது. (தொடரும்)

## கிழக்கு முதல்வர் தொடர்பில் ஐ.தே.க.வின் கேள்விக்கு ஹக்கீம் அதிருப்தி

(கொழும்பு)

கிழக்கு மாகாணசபையின் முதலமைச்சர் சிவநேசதுரை சந்திரகாந்தன் தொடர்பில் ஐக்கிய தேசியக் கட்சி பாராளுமன்றில் எழுப்பிய கேள்வி தொடர்பில் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் தலைவர் ரவூப் ஹக்கீம் அதிருப்தி வெளியிட்டுள்ளஉார். இது தொடர்பில் மேலும் தெரியவருவதாவது,

கிழக்கு மாகாண முதலமைச்சர் சிவநேசதுரை சந்திரகாந்தனை வெளிநாட்டு இராஜதந்திரிகளை சந்தித்தமை தொடர்பில், ஐக்கிய தேசியக் கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் ரவி கருணாநாயக்க கேள்வி எழுப்பியிருந்தார்.

இது தொடர்பில் அமைச்சர்களும், பாராளுமன்ற உறுப்பினர்களும் மட்டுமா வெளிநாட்டு ராஜதந்திரகிளை சந்திக்கமுடி யுமா என ரவூப்ஹக்கீம் கேள்வி எழுப்பியுள்ளார்.

ரவி கருணாநாயக்க எழுப்பிய தனைப் போன்ற கேள்விகளுக்கு அவையில் சந்தர்ப்பம் அளிக்கப்படக்கூடாது எனவும் அதிகாரப் பகிர்விற்கு ஆதரவளிக்கும் கட்சியான ஐக்கிய தேசியக் கட்சி இவ்வாறான கேள்வியை எழுப்பியமை அதிருப்தி அளிப்பதாகவும் தெரிவித்துள்ளார். (2-6)

## வருமானம் எனக்கு தேவையில்லை; இனம்தான் முக்கியம் -சீமான் உரை

இயக்குநர் சீமானின் நாம் தமிழர் கட்சித் ஆரம்ப விழா மதுரையில் நடந்தது. பல ஆயிரக்கணக்கான தொண்டர்கள் பங்கேற்ற இந்த மாநாட்டில், நாம் தமிழர் இயக்கம் அரசியல் கட்சியாக உதயமானது.

செவ்வாய்க்கிழமை மாலை, மதுரை ரிங் ரோடு அருகே உள்ள மைதானத்தில் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த பிரமாண்ட மேடையில் நாம் தமிழர்கட்சி, பாயும் புலி கொடியோடு உதயமானது.

மலேசியாவின் பினாங்கு மாகாண துணை முதல்வர் ராமசாமி மற்றும் காந்திய அரசியல் இயக்கத்தலைவர் தமிழருவி மணியன் ஆகியோர் குத்துவிளக்கேற்றித் ஆரம்பித்து வைத்தனர்.7 மணிக்கு ஆரம்பமாகிய மாநாடு 11 மணிக்கு முடிந்தது.இம்மாநாட்டில் சீமான் எழுச்சி முழக்கமிட்டார்.

அவர் கட்சிக்கு நிதிக்கு என்ன செய்யப் போகிறீர்கள் என்று கேட்கிறார்கள். பணத்தை நம்பி நான் இந்த கட்சியை ஆரம்பிக்கவில்லை. இனத்தை நம்பி ஆரம்பித்திருக்கிறேன். இனம் சேர்ந்தா பணம் தானா வரும். திரைப் படங்கள் இயக்கி என்னால் சம்பாதிக்க முடியும்.வருமானம் எனக்கு தேவையில்லை. இனமானம் தான் முக்கியம்.என்னை தலைவராக பார்க்காதீர்கள் என்றார். (2-6)







யாழ்.கல்வி வலயத்தைச் சேர்ந்த க.பொ.த(உயர்தரம்) ஆங்கில மொழிமூலம் கற்பிக்கும் ஆசிரியர்களுக்கான செயலமர்வில் யாழ்.வலயக் கல்விப் பணிப்பாளர் திருமதி அ.வேதநாயகம் உரையாற்றுவதையும், அருகில் ஆசிரிய ஆலோசகர் சி.தயாகரன், வளவாளர் திருமதி எஸ்.தனபாலன் ஆகியோர் அமர்ந்திருப்பதையும், கலந்துகொண்ட ஆசிரியர்களையும், ஆசிரியர்கள் குழுச் செயற்பாட்டில் ஈடுபடுவதையும் படங்களில் காணலாம்.

(படங்கள்:- என்.குமார்)

# தரம் -05 புலமைப்பரிசில் பரீட்சை -2010

ஆசிரியர்:- எஸ்.ஏ.சந்திரபவன்
புலமைப்புலரி பப்ளிகேஷன்

## மாதிரி பரீட்சை–03
## வினாத்தாள் –II

நேரம்- 1 மணி 1 5 நிமிடம்

**கீழுள்ள பாடலை நன்றாக வாசித்து அது தொடர்பான வினாக்களுக்கு விடை தருக.**

(A)
சின்னக் கோழிக் குஞ்சுகள்
தீனிபோடத் தாயுடன்
என்னை நோக்கி வந்துமே
இரையை கையில் தேடுமே

(B)
பாலைக் குடிக்கக் கன்றுமே
பசுவைத் தேடி ஓடுமே
வாலைக் கிளப்பித் துள்ளுமே
வந்து என்னைத் தள்ளுமே

(C)
பூனை கண்ணை மூடிக் கொண்டு
பாலைக் குடிக்கப் பார்க்குமே
நானெழுந்து நடக்கவே
நடுவிற் கண்ணைத் திறக்குமே

01. சரியான விடைகளைப் புள்ளிக் கோட்டில் எழுதுக.
1.**தீனி** என்பதன் ஒத்தசொல் பாடலில் உள்ளது.அதனை எழுதுக...............

2.**கோழி** என்பதன் இளமைப் பெயரைத் தருக...............

3.தேடி என்பது பெயரெச்சமா? வினையெச்சமா?...............

4.பாடலிலுள்ள **சினைப்பெயர்** ஒன்று எழுதுக...............

5.பாடலில் காணப்படும் **தன்மைச் சொல்** ஒன்று எழுதுக...............

6.***நானெழுந்து*** என்பதனைப் பிரித்தெழுதுக...............

7.***வந்து+ என்னை*** என்பதனைச் சேர்த்தெழுதுக...............

8.***கையில்*** என்பதைப் பன்மையாக எழுதுக...............

9.பாடலில் உள்ள உயர்திணைப் பெயர்ச்சொல்லை எழுதுக...............

10.***மூடி*** என்பதன் எதிர்ச்சொல்லை எழுதுக...............

(10 புள்ளிகள்)

02. 1. பின்வரும் சொற்களை ஒழுங்குபடுத்திக் கருத்துள்ள வாக்கியமாக எழுதுக
1.வீசியதால் / வீடுகள் / புயல் / சேதமடைந்தன / பல / காற்று / பலமாக
...............

2.பயனுள்ள / நீருற்றது / பொழுதுபோக்காகும் / பூச்செடிகளுக்கு / ஒரு
...............


(4புள்ளிகள்)

2.சின்னக்கோழிக்குஞ்சுகள் என்னை நோக்கி வந்தன என்பதிலுள்ள
1. எழுவாய் யாது? (...............)


2. எழுவாய் அடைமொழி யாது? (...............)

3. பயனிலை யாது? (...............)

**03.கீழ்வரும் வினாக்களின் விடைகளைப் புள்ளிக் கோட்டில் எழுதுக.**

1. 



இவ்வுருவின் சுற்றளவு யாது?
(...............)

2. 



இப்பாத்திரத்தில்1200 மி.லீ. பால் உள்ளது. இவ்வாறான 6 பாத்திரங்களில் உள்ள பாலின் அளவு யாது?

3. 240 cm நீளமுடைய சலாகையிலிருந்து ஒரு மீற்றர் நீளமான சலாகைத் துண்டு வெட்டி எடுக்கப்பட்டது. எஞ்சியுள்ள சலாகையின் நீளம் யாது?
...............

4. 400 மீற்றர் சுற்றுவட்டத்தைக் கொண்ட நீள் வட்ட மைதானம் ஒன்றில் 3000 மீற்றர் தூரத்தை ஓடவேண்டுமாயின் எத்தனை தடவைகள் முழுமையாக மைதானத்தைச் சுற்ற வேண்டும்?
...............

5. 

இது ஒரு சமபக்க முக்கோணியாகும்.இதனை அதிகப்பட்சமாக எத்தனை முறைகளில் சமச்சீராக மடிக்க முடியும்.

6. 

கீழுள்ள உருவில் நிழற்றப்பட்டுள்ள துண்டங்களின் எண்ணிக்கையின் பங்கினை பின்னத்தில் எழுதுக.
(...............)

7.4/6 எனும் பின்னத்தில் சமமான பின்னம் ஒன்று எழுதுக.
(...............)

8.ஒரு வயலில் மனிதர்கள் மாடுகளுடன் வேலை செய்தனர். அங்கே தலைகளை எண்ணியபோது 12 இருந்தன .கால்களை எண்ணியபோது 40 இருந்தன. ஆகவே அங்கிருந்த மனிதர்கள் எத்தனை பேர்?
(...............)


9.கோவிந்தனின் வீட்டில் கோழிகளும் ஆடுகளுமாகச் சேர்த்து 10 பிராணிகள் உள்ளன. அவற்றின் கால்களின் எண்ணிக்கை 36 ஆகும்.ஆகவே அங்குள்ள கோழிகளின் எண்ணிக்கை யாது?
(...............)

(10 புள்ளிகள்)

04. கீழ்வரும் வினாக்களின் சரியான விடையின் கீழ் கோடிடுக.
1. சுனாமி எனும் சொல்லுக்குரிய சரியான தமிழ்ச் சொல்லை எழுதுக.
(...............)
2. இலங்கையின் தேசிய கீதத்தை ஆங்கிலத்தில் மொழி பெயர்ந்தவர் யார்?
(...............)
3. சூரிய ஒளியில் காணப்படும் விற்றமின் யாது?
(...............)
4.பிராண வாயு எனப்படும் வாயு யாது?
(...............)
5.மே மாதம் முதலாம் திகதி உலகம் முழுவதும் கொண்டாடப்படும் தினம் யாது?
(...............)

(5 புள்ளிகள்)

05. பின்வரும் தமிழ்ச்சொற்களுக்குரிய ஆங்கிலச் சொற்களைத் தருக.
1.நிறக்கடதாசி (...............)
2.சூரிய காந்தி (...............)
3.அஞ்சல் பெட்டி (...............)
4.மேசை விரிப்பு (...............)

06. 


அருகே உள்ள எளிய விஞ்ஞான செயற்பாட்டை அவதானித்து விடை தருக.

1. Cஎனும் பாத்திரத்தினுள் உள்ள நீர் எந் நிலையில் உள்ளது?
...............

2.Bயினால் காட்டப்படுவது எது?

(.......................................................)

3. இச் செயற்பாட்டின் போது A யில் நிகழ்வது யாது?

(.......................................................)

(3 புள்ளிகள்)

07.பின்வரும் ஆங்கிலச் சொற்களுக்குரிய தமிழ்ச் சொற்களை எழுதுக.

1.Bicycle .................. 2.Tractor............................

3.Balance....................... 4.Waterfall........................

08. கீழே கருவிகளின் கீழ் தரப்பட்டுள்ள தொழிற்பாடுகளுக்குப் பொருத்தமான கருவிகளை இனம் கண்டு அவற்றுக்குரிய ஆங்கில எழுத்துக்களை அடைப் பினுள் எழுதுக.




1. மீன் வெட்டப் பயன்படுத்துவது (.......................................)


2.சிறிய தடிக் குச்சிகளை வெட்டுதல் (.......................................)

3.பெரிய மரக்குற்றிகளை துண்டாடுதல்(.......................................)

4.பலகையில் குழியிடுதல் (.......................................)

5.பற்றைக்காடுகளை வெட்டுதல் (.......................................)

09.கீழுள்ள விளையாட்டுக்களின் பெயர்களை அந்தந்த விளையாட்டுப் படங்களின் கீழ் எழுதுக.




(...................) (...................) (...................) (...................)

(4 புள்ளிகள்)

10.பொருட்களைக் கொள்வனவு செய்யும்போது கொடுக்க வேண்டிய, வாங்க வேண்டிய பணமுறைகள் தொடர்பான வினாக்களுக்குரிய சரியான விடையை எழுதுக.

1. 375 ரூபாவிற்கு பொருட்களை வாங்கிய ஒருவர் அதற்காகக் கொடுக்க வேண்டிய மீதி பெறாத பொருத்தமான ஒரு பண முறையினை எழுதுக.

(.......................................................)

2.ரூபாய் 260 பெறுமதிக்காக 300 ரூபாய் கொடுத்த ஒருவருக்கு கடைக் காரர் மீதி கொடுக்கும் பொருத்தமான முறையை எழுதுக.

(.......................................................)

3. கார்த்திக் 95 ரூபா பெறுமதியுடைய 6 புத்தகங்களை வாங்கி 500 ரூபாய்த் தாள் நாணயத்தைக் கொடுத்தான். அவனுக்கு மீதியாக 9 குற்றி நாணயங்கள் கிடைத் தன எனின் அவை எவையென கீழே எழுதுக.

(.......................................................)

4.அப்துல் செய்த வெசாக் கூடு ஒன்றின் விலை 125 ரூபா எனின் 1000 ரூபா விற்கு எத்தனை வெசாக் கூடுகள் வாங்கலாம்?

(.......................................................)

5. மேகலா ஜனவரி மாதம் 1 ஆம் திகதி தொடக்கம் 13 ஆம் திகதி வரை ஒவ்வொரு நாளும் 10 ரூபாவை உண்டியில் இட்டு வந்தாள் அந்தக் குறிப்பிட்ட நாட்களில் உண்டியலில் சேமிக்கப்பட்டுள்ள பணம் எவ்வளவாகும்?

(.......................................................)

(10 புள்ளிகள்)

11. கீழுள்ள குறியீடுகளின் கருத்தினை அறிந்து அடைப்பினுள் பொருத்தமானதன் எதிரே ஆங்கில எழுத்துக்களால் எழுதுக.




1. மின் தாக்குதல் ஏற்பட இடமுண்டு

(.......................................)

2.நொருங்கக் கூடிய பொருள்

(.......................................)

3.மீள் சுழற்சிக்கு உட்படுத்தக் கூடியது

(.......................................)

4. கவனமாக கையாள வேண்டும்

(.......................................)

12. கீழ்வரும் வினாக்களுக்குரிய சரியான விடையின் கீழ் கோடிடுக.

1. இரவு வேளையில் நடமாடும் பிராணி

1.காகம் 2. முயல் 3.கொக்கு


2. ஆடையில் படிந்த தார்க் கறையை கழுவி நீக்குவதற்கு உகந்த பொருள்

1.எலுமிச்சம் சாறு 2.மதுசாரம் 3. மண்ணெய்

3.தனது குட்டிகளைக் கழுத்துப் பகுதியில் கௌவித் தூக்கிச் செல்லும் பிராணி

1.முயல் 2. பூனை 3.குரங்கு

4. கீழ்வரும் தையல் முறைகளில் சிறுநூலோடித் தையல் முறை




5.  எதிரே காணப்படும் வீதிக்குறியீட்டின் கருத்தாக அமைவது

1. சிறுவர் கடவை 2. சிறுவர் வலயம்

3. விளையாட்டு இடம்

6. வெற்றிலையின் வடிவத்தை ஒத்த இலையைக் கொண்ட இன்னொரு தாவரம்

1.மிளகு 2.பப்பாசி 3. தாமரை

7.தேசப்படங்களில் பிரதான வீதிகளைக் காட்டுவதற்குப் பயன்படுத்தப் படும் நியம நிறம்

1.மஞ்சள் 2.சிவப்பு 3.நீலம்

8. கீழ்வருவனவற்றுள் கொத்துக் கொத்தாகப் பூக்கும் மலர் வகை

1.ரோஜா 2. காட்டுமல்லிகை 3. சூரியகாந்தி

9. பின்வருவனவற்றுள் நரம்புக் கருவி ன்று

1.தம்புரா 2. மிருதங்கம் 3. நாதஸ்வரம்

10. காட்போர்ட், இறப்பர் விதை, நூல், ஈர்க்கு போன்றவற்றை பயன்படுத்தி செய்யக்கூடிய விளையாட்டு உபகரணம்

1. நூற்கட்டை டிராக்டர் 2. உருளும் வண்டி 3. பம்பரம்

(10 புள்ளிகள்)

13. கீழ்வரும் சிங்கள மொழிக் கருத்தில் அமைந்த சொற்றொடர்களின் கருத்தை தமிழில் எழுதுக.

1. அம்மா வ (த்) துர கெனாவா (...............................................)

2.அய்யா கடே (ட்) கியா (...............................................)

(4 புள்ளிகள்)

14. நானும் எனது நண்பர்களும் சேர்ந்து ஆக்கப்பொருளொன்றைச் செய்வதற்கு விரும்பினோம். அதன்படி வெளிச்சக்கூடு ஒன்று செய்வத தெனத் தீர்மானித்தோம்.

(குமரன், கிருபன், நவாஸ், ஆகியோர் நண்பர்களாவர்.)மேற்படி சம் வத்தைத் தொடர்ந்து நான்கு சொற்களுக்குக் குறையாத பொருத்தமான 6 வாக்கியங்கள் எழுதுக

1. _ _ _ _ _ _ _ _ _ _ _ _ _ _ _ _ _ _ _ _ _ _ _ _

2. _ _ _ _ _ _ _ _ _ _ _ _ _ _ _ _ _ _ _ _ _ _ _ _

3. _ _ _ _ _ _ _ _ _ _ _ _ _ _ _ _ _ _ _ _ _ _ _ _

_ _ _ _ _ _ _ _ _ _ _ _ _ _ _ _ _ _ _ _ _ _ _ _

4.

# வைகாசி மாதப் பலன்கள்



## துலாம்

(சித்திரை 3,4 ஆம் பாதங்கள், சுவாதி , விசாகம் 1,2,3 ஆம் பாதங்கள்)

தொட்டகாரியங்களில் எல்லாம் வெற்றி பெற வேண்டும் என நினைக்கும் துலாம் ராசி நேயர்களே!.

வைகாசி மாதக் கிரக நிலைகளை ஆராய்ந்து பார்க்கும் பொழுது ஏழரைச் சனியின் ஆதிக்கம் ஒரு புறம் ஆறாமிடத்து குருவின் ஆதிக்கம் மற்றொரு புறம் அமைய இம் மாதம் பிறப்பதால் எதையும் ஒரு முறைக்கு பலமுறை யோசித்துச் செய்வதே நல்லது. முக்கிய முடிவுகள் எடுப்பதில் தாமதம் ஏற்படும். குடும்ப உறுப்பினர்களிடமும் சான்றோர்களிடமும் ஆலோசனைகளைக் கேட்டுச் செய்தால் எதிர்பார்த்த இலக்கை அடைய முடியும்.

இம்மாதத் தொடக்கத்தில் இராசிநாதன் 8 இல் மறைகிறார். அத்தோடு தொழில் இலாபாதிபதியும் இணைகிறார். எனவே தற்போதைய தொழிலைக் கொடுத்து விட்டு புதிய தொழில் தொடங்கும் சிந்தனை ஒரு சிலருக்கு உருவாகும். ஒரு சிலர் வ்ளர்ச்சியடைந்த தொழிலைக் கொடுக்கலாமா என நினைத்து பங்குதாரர்களோடு பஞ்சாயத்து வைப்பர்

இத்தனைக்கும் மத்தியில் தனாதிபதி செவ்வாயும் நீச்சம் பெற்று சஞ்சரிக்கிறார். அந்த நீச்ச நிலை மாறும் வரை பொறுமையைக் கடைபிடிப்பது நல்லது. செவ்வாய் சிங்கராசிக்கு வந்த பிறகு சில நல்ல வாய்ப்புக்கள் இல்லம் தேடி வரும் . தெய்வீகச் சிந்தனைகள் மேலோங்கும். திருப்பணிக்கும் அறப்பணிக்கும் கொடுக்க வேண்டும் எனச் சொல்வீர்கள்.

சுய ஜாதகத்தில் சனி முதல் சுற்றா? இரண்டாவது சுற்றா? என்று ஆராய்ந்து பார்ப்பது நல்லது. இர[illegible]ாவது சுற்று என்றால் எதற்கும் கவலைப்பட வேண்டாம். சனிக்குரிய வழிபாடுகளை மேற்கொண்டால் சஞ்சலம் தீரும்.

மே 16 ஆம் திகதி மிதுன இராசியில் சுக்ரன் சஞ்சரிக்கிறார். இதன் விளைவாக பெற்றோர் வழியில் ஏற்பட்ட விரிசல்கள் அகலும். பூர்வீக சொத்துக்களில் முறையான பங்கீடு உங்களுக்கு கிடைப்பதற்கான அறிகுறிகள் தோன்றும். பெண் வழிப் பிரச்சினைகள் நல்ல முடிவிற்கு வரும். பண வரவு திருப்தி தரும்.

மே 27 ஆம் திகதி சிங்க இராசியில் செவ்வாய் சஞ்சரிக்கப் போகிறார். இதன் விளைவாக தனவரவு அதிகரிக்கும். தக்க சமயத்தில் நபர்களின் ஆதரவு கிடைக்கும். பூமி யோகம் உண்டு. வாங்கிய பூமி விற்கவில்லையே என்ற கவலை அகலும். வளர்ச்சி கூடும் நேரமிது.

ஏழரைச்சனி வக்ரகதியில் இயங்கிய நிலை இம்மாதம் 27 ஆம்திகதி நிவர்த்தியாகிறது.எனவே சனியின் வலிமை கூடுகிறது. இக்காலத்தில் நபர்களை நம்பி எந்தப் பொறுப்புக்களையும் ஒப்படைக்கவேண்டும். விரயங்கள் அதிகரிக்கும். குடும்பச் செலவு கூடும்.

மே 31 ஆம் திகதி இடபராசியில் புதன் சஞ்சரிக்கப் போகிறார். யூன் 10 ஆம்திகதி கடகராசியில் சுக்ரன் சஞ்சரிக்கப் போகிறார். இந்த இரண்டு பெயர்ச்சிகளையுமே ஓரளவு நன்மைகளையே வழங்கும். உடல் நிலையில் உற்சாகம் கூடும். புதிய திட்டங்கள் தீட்டி வெற்றி காண்பீர் .பெண் வழிப் பிரச்சனைகள் நல்ல முடிவிற்கு வரும்.

அரசு வழியில் எதிர்பார்த்த கடன் உதவி கிடைக்கும். பணியாளர்களை மாற்றுவதில் அக்கறை காட்டுவீர்கள்.உடன் பணிபுரிபவர் - களிடம் அனுசரித்துச் செல்வது நல்லது. சனி வழிபாட்டினால் சஞ்சலங்கள் தீரும்.இம்மாத நவக்கிரக வழிபாட்டின் மூலம் நன்மைகளைக் காணலாம்.



## விருச்சிகம்

(விசாகம் 4ஆம் பாதம் அனுசம், கேட்டை)

வெற்றி ஒன்றையே குறிக்கோளாகக் கொண்டு செயல்படும் விருச்சிக ராசி நேயர்களே!

வைகாசி மாத கிரக நிலைகளை ஆராய்ந்து பார்க்கும்பொழுது ராசிநாதன் செவ்வாய் வக்ர நிவர்த்தியாகி நீச்ச நிலை மாறி சிங்கத்தில் அடியெடுத்து வைக்கும் நிலை இம்மாதத்தில் ஏற்படுவதால் நினைத்த காரியங்களை நினைத்த நேரத்தில் செய்து முடிப்பீர்கள். நிச்சயிக்கப் பெற்ற காரியங்கள் ஒவ்வொன்றாக நிறைவேறும். தொழிலில் எதிர்பாராத இலாபம் கிடைக்கும்.தொல்லை தந்தவர்கள் சரணடைவார்கள். இலாபஸ்தானத்தில் சஞ்சரிக்கும் சனியும் வக்ர நிவர்த்தியாவதால் இம்மாதத்தில் உத்தியோக உயர்வு, ஊதிய உயர்வு ,உழைப்பிற்கேற்ற பலன் அத்தனையும் எதிர்பார்த்தபடி உங்களுக்கு வந்து சேரும். சந்தோஷத்தை வழங்கும் சனி பகவானையும் ஆனந்தத்தை வழங்கும் அங்காரகனையும் அனைத்திற்கும் மூல முதற் கடவுளாக விளங்கும் ஆனைமுகப் பெருமானையும் நீங்கள் வழிபட வழிபட வாழ்வில் வசந்தம் உருவாகும். வசதி வாய்ப்புகள் பெருகும்.

இம்மாதம் தொடக்க நாளிலேயே குருவின் பார்வை உங்கள் ராசியில் பதிகிறது. குரு பார்க்க கோடி நன்மை என்பதால் உடல் ஆரோக்கியம் சீராகும். உள்ளத்தில் உற்சாகம் குடி கொள்ளும். வாழ்க்கைத் தேவைகள் பூர்த்தியாகும். வருங்கால நலன் கருதி புதிய முயற்சி எடுப்பீர்கள். வெற்றிநிச்சயம் என்ற தாரக மந்திரம் இப்பொழுது செயல்படப் போகிறது

மே 16ஆம்திகதி மிதுனராசியில் சுக்ரன் சஞ்சரிக்கிறார்.பன்னிரெண்டுக்கு அதிபதியான சுக்ரன் எட்டில் சஞ்சரிக்கும் பொழுது, விபரீத ராஜயோகம் செயல்படும். எனவே நீண்டநாள் ஆசைகள் நிறைவேறும். நிலம் வாங்குவதில் ஆர்வம் காட்டுவீர்கள். தங்கம், வெள்ளி போன்றவற்றை வாங்கி அணிந்து அழகு பார்க்கும் சூழ்நிலையும் உருவாகும்.

மே 27 ஆம் திகதி தொழில் ஸ்தானத்தில் செவ்வாய் சஞ்சரிக்கப்போகிறார். ராசிநாதன் தொழில் ஸ்தானத்தில் சஞ்சரிக்கும் பொழுது, உங்கள் தொழிலில் வருமானம் இருமடங்காகும். மேலதிக வருமானங்கள் வந்து சேரும். உத்தியோகத்தர்களுக்கு மேலதிகாரிகளின் அனுகூலத்தோடு எதிர்பார்த்த சலுகைகள் கிடைக்கும். நபர்கள் நல்ல தகவல்களைக் கொண்டு வந்து சேர்ப்பர்.

### சிவல்புரி சிங்காரம்

மே 27 ஆம்திகதி கன்னி ராசியில் சஞ்சரிக்கும் சனி வக்ர நிவர்த்தியாகிறார். மேலும்2,5 க்கு அதிபதியான குரு அதை பார்க்கிறார். எனவேபிள்ளைகள் வழியில் சுப காரிய பேச்சுக்கள் நல்ல முடிவுக்கு வரும். பூர்வீக சொத்துக்களால் லாபம் கிடைக்கும்.புதிய பொறுப்புக்களும், பதவிகளும் ஒருசிலருக்கு வந்து சேரலாம்.

மே 31 ஆம் திகதி இடப ராசியில் புதன் சஞ்சரிக்கப் பேர்கிறார். புதனின் பார்வை உங்கள் ராசியில் பதிவதால், கல்வி வளம் பெருகும். இளைய சகோதரத்தின் இனிய ஒத்துழைப்புக் கிடைக்கும்.ஜூன் 10ஆம்திகதி கடகத்தில் சுக்கரன் சஞ்சரிக்கும் பொழுது கல்யாண கனவுகள் நனவாகும். சில காரியங்களில் அதிரடி முடிவெடுத்து மற்றவர்களை ஆச்சரியப்படுத்துவீர்கள். இம்மாதம் பௌர்ணமி கிரிவல வழிபாடும், செல்வ நிலைய உயர்த்தும் செல்வமுத்துக் குமரன் வழிபாடும் செய்வது நல்லது. (தொடரும்)

# வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு நிவாரணம் வழங்க 80 இலட்சம் ரூபா ஒதுக்கீடு

(கொழும்பு)

அடை மழை மற்றும் வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட ஒரு இலட்சத்து 75 ஆயிரம் பேருக்கு நிவாரணம் வழங்குவதற்காக 80 இலட்சம் ரூபாவை உடனடியாக வழங்குமாறு இடர் முகாமைத்துவ அமைச்சுக்கு ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ உத்தரவிட்டுள்ளார்.

ஈரானிலிருந்து நேற்று நாடு திரும்பிய ஜனாதிபதியின் தலைமையில் அலரி மாளிகையில் நடைபெற்ற விசேட கலந்துரையாடலில் இது தொடர்பான முடிவு எடுக்கப்பட்டுள்ளது.

இதன்படி வெள்ளத்தால் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ள கம்பஹா, களுத்துறை மற்றும் கொழும்பு மாவட்ட அரசாங்க அதிபர்களுக்கு நேற்று தலா 10 இலட்சம் ரூபா வீதம் அமைச்சினால் வழங்கப்பட்டதாக ஜனாதிபதி செயலகம் தெரிவித்துள்ளது.

அத்துடன் மழை மற்றும் வெள்ளம் காரணமாக கம்பஹா மாவட்டமே அதிகம் பாதிக்கப்பட்டுள்ளது. இங்கு பாதிக்கப்பட்ட மக்களுக்கு சமைத்த உணவுக்கு புறம்பாக உலர் உணவு வழங்கவும் அவசரத் தேவைகளை நிறைவேற்றுவதற்காகவும் 40 இலட்சம் ரூபா வழங்கப்பட்டுள்ளது.

மேலும் இரத்தினபுரியில் பாதிக்கப்பட்ட மக்களுக்கு நிவாரணம் வழங்குவதற்காக அம் மாவட்ட அரசாங்க அதிபருக்கு ஐந்து இலட்ச ரூபாவும் கேகாலை, காலி மற்றும் மாத்தறை ஆகிய மாவட்ட அரசாங்க அதிபர்களுக்கு் தலா மூன்று இலட்சம் ரூபா வீதமும் நேற்றைய தினம் வழங்கப்பட்டதாக ஜனாதிபதிச் செயலகம் மேலும் அறிவித்துள்ளது. (2-6)

# த.தே.கூட்டமைப்புடன் அரசாங்கம் பேச்சுவார்த்தை நடத்தக் கூடாது

## குணதாச அமரசேகர தெரிவிப்பு

(கொழும்பு)

தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு அரசாங்கம் பேச்சுவார்த்தை நடத்தக் கூடாது என தேசப்பற்றுடைய தேசிய இயக்கத்தின் தலைவர் குணதாச அமரசேகர தெரிவித்துள்ளார்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்புடன் பேச்சுவார்த்தை நடத்த அரசாங்கத்திற்கு எவ்வித உரிமையும் கிடையாது என அவர் குறிப்பிட்டுள்ளதுடன்.

இவ்வாறான பேச்சுவார்த்தைகள் பயங்கரவாதம் மீளத் தூண்டும் வகையில் அமையும் என எச்சரிக்கை விடுத்துள்ளார்.

தமிழ் மக்களின் ஏகப் பிரதிநிதிகளாக குரல் கொடுக்க சில அமைப்புக்கள் முயற்சிக்கின்ற போதிலும் அவற்றை ஏற்றுக்கொள்ள முடியாது என அவர் குறிப்பிட்டுள்ளார்.

மேலும் வடக்கில் அரசாங்கம் முன்னெடுத்து வரும் புனர்வாழ்வு நடவடிக்கைகள் வரவேற்கத்தக்கவை எனவும் அவர் தெரிவித்துள்ளார். (2-6)

# எமது உற்பத்தியை ஐரோப்பிய நாடுகளில் சந்தைப்படுத்தக் கோரியுள்ளோம்

## அமைச்சர் பீரிஸ் தெரிவிப்பு

(கொழும்பு)

சிறு கைத்தொழிலுக்காக இலங்கை மத்திய வங்கி வழங்கும் மூல வளங்களை கொண்டு உற்பத்தி செய்யப்படும் பொருட்களை ஐரோப்பிய நாடுகளில் சந்தைப்படுத்துவதற்கான வாய்ப்புகளை நாம் கோரியுள்ளோம் என வெளிவிவகார அமைச்சர் ஜீ எல் பீரிஸ் தெரிவித்தார்.

நேற்று முன்தினம் வெளிவிவகார அமைச்சில் இடம்பெற்ற ஊடகவியலாளர் மாநாட்டில் உரையாற்றிய போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் அங்கு மேலும் தெரிவிக்கையில்,

எமது நாட்டில் மனிதவளம் தாராளமாகவே உள்ளது. எனவே எமது உற்பத்திகளை தரம் வாய்ந்ததாக மாற்றி அமைக்க எம்மால் முடியும். சூழல் மாசடையாத வகையில் கைத்தொழிற்துறையை மேம்படுத்த முடியும். அது மட்டுமல்ல சூரிய ஒளி மூலம் மின்சாரத்தை உற்பத்தி செய்வதே தமது நோக்கம் என ஜீ 15 மாநாட்டில் பங்கு கொண்ட 17 நாடுகளின் தலைவர்கள் தெரிவித்துள்ளனர் என்றார். (2-6)

# நகர அழிப்பு முகவர் நிறுவனமாக மாறியுள்ள நகர அபிவிருத்தி சபை

## ரணில் தெரிவிப்பு

(கொழும்பு)

நகர அபிவிருத்தி அதிகாரசபை இன்று நகர அழிப்பு முகவர் நிறுவனமாக மாற்றமடைந்துள்ளதாக எதிர்கட்சித் தலைவர் ரணில் விக்ரமசிங்க பாராளுமன்றத்தில் சுட்டிக்காட்டியுள்ளார்.

கிராண்ட்பாஸ் பிரதேசத்தில் வீடுகள் அழிக்கப்பட்டமை தொடர்பில் கருத்து வெளியிட்ட போது அவர் இதனைச் சுட்டிக்காட்டியுள்ளார். சொகுசு தொடர்மாடிக் வீட்டுத் தொகுதியொன்று குறித்த பிரதேசத்தில் உருவாக்கப்படவுள்ளதாகவும் குறித்த மாடிக் கட்டடத்தின் ஒவ்வொரு வீடும் 40 இலட்சம் ரூபா பெறுமதியானதெனக் குறிப்பிட்டுள்ளார்.




இந்த புதிய கட்டடத் தொகுதியை அமைக்கும் முதலீட்டாளருக்கு 15 ஆண்டு வரி விடுமுறை அளிக்கப்பட்டுள்ளது.

1980 ஆம் ஆண்டுகளில் முன்னாள் ஜனாதிபதி ரணசிங்க பிரேம தாஸவினால் குறித்த பிரதேச மக்களுக்கு சட்ட ரீதியாக இந்த வீடுகளை வழங்கி யிருந்ததாக ரணில் விக்கிரமசிங்க குறிப்பிட் டுள்ளார்.

(2-6)

# மாவோயிஸ்ட் பிரச்சினைக்கு தீர்வுகாண இந்திய மத்திய அரசு புது வியூகம்





மாவோயிஸ்ட் பிரச்சினைக்கு நிரந்தர தீர்வு காணும் வகையில் இந்திய மத்திய அரசு புது வியூகத்தை வகுக்க வேண்டும் என்ற கருத்து வலுப்பட்டுள்ளது.

உள்துறை அமைச்சர் சிதம்பரம் மாவோயிஸ்ட்டுகளுக்கு எதிரான அரசின் தற்போதைய கொள்கை மறுபரிசீலனை செய்யப்படும். அதேநேரத்தில் வன்முறையைக் கைவிட்டால் அவர்களுடன் பேச்சு நடத்தவும் தயாராகவுள்ளோம் என கூறியுள்ளார். இது தொடர்பில் மேலும் தெரியவருவதாவது,

சத்திஸ்கரில் பயணிகள் பஸ் மீது மாவோயிஸ்டுகள் கடந்த திங்கட்கிழமை நடத்திய கண்ணிவெடி தாக்குதலில் சிறப்புப் பொலிஸ் அதிகாரிகள், பொது மக்கள் உட்பட 50 பேர் பலியாகினர். இச்சம்பவம் நாடு முழுவதும் பெரும் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.

சம்பவம் நடந்த சுக்மா பகுதிக்கு சத்திஸ்கர் முதல்வர் ராமன் சிங் நேற்று முன்தினம் ஹெலிகொப்டரில் சென்றார். தாக்குதலில் பலியான சிறப்பு பொலிஸ் அதிகாரிகளின் உடல்களுக்கு மலர் வளையம் வைத்து அஞ்சலி செலுத்தினர். பின்னர் செய்தியாளர்களிடம் அவர் கூறுகையில், மாவோயிஸ்டுகள் பாதுகாப்பு படையினரை மட்டுமல்லாமல் அப்பாவி மக்களையும் தற்போது குறிவைக்க ஆரம்பித்துள்ளனர்.

எனவே அவர்களுக்கு எதிராக தற்போது பின்பற்றப்படும் கொள்கையை மறுபரிசீலனை செய்ய வேண்டும். அவர்களை ஒழிப்பதற்கு புதிய கொள்கை வகுக்கப்பட வேண்டும் என்றார்.

சத்திஸ்கர் தாக்குதல் சம்பவம் குறித்து மத்திய உள்துறை அமைச்சர் சிதம்பரம், தனியார் டி.விக்கு அளித்த பேட்டியில் கூறியதாவது, மாவோயிஸ்டுகள் தாக்குதல் நடத்தும் போது பொதுமக்கள், பொலிஸார் என பாரபட்சம் காட்டுவது இல்லை. கொலை செய்ய வேண்டும் என்பது தான் அவர்கள் நோக்கமாக உள்ளது.

இவர்களை ஒழிப்பதில் அரசின் கொள்கை என்ன என்பது குறித்து ஏற்கனவே பலமுறை தெளிவுபடுத்தப்பட்டுள்ளது. மாவோயிஸ்டுகளின் வன்முறை தற்போது அதிகரித்து வருகின்றது இதனால் அவர்களுக்கு எதிரான தற்போதைய கொள்கையைமறு பரிசீலனை செய்ய வேண்டிய நேரம் வந்து விட்டது.

இது குறித்து அரசு ஆலோசிக்கும். வன்முறையை கைவிட்டால் மாவோயிஸ்டுகளுடன்பேச்சு நடத்த தயாராக உள்ளோம்.

ஆனால் வன்முறையை கைவிடுவது போல் அவர்கள் ஏமாற்றுகின்றனர் என்றார்.

மாவோயிஸ்டுகளுக்கு எதிரான அரசின் கொள்கை மறு பரிசீலனை செய்யப்பட வேண்டும் என்ற கருத்து வலுப்பட்டுள்ளதை அடுத்து ஆலோசனை நடத்தப்படவுள்ளது. மாவோயிஸ்ட் ஆதிக்கம் உள்ள மாநிலங்களின் முதல்வர்களும் இக்கூட்டத்தில் பங்கேற்கவுள்ளனர். இதில் மாவோயிஸ்ட் பிரச்சனைக்கு முற்றுப் புள்ளி வைக்கும் வகையில் கடுமையான முடிபு எடுக்கப்படும் என தெரிகிறது. (2-6)

## நித்தியானந்தாவின் பிணை மனு மீதான விசாரணை ஒத்திவைப்பு

பாலியல் வழக்கில் கைதான நித்தியானந்தாவின் பிணை மனு மீதான விசாரணையை மே 26 ஆம் திகதிக்கு ஒத்தி வைத்து கர்நாடக உயர்நீதிமன்றம் உத்தரவு பிறப்பித்தது.

நடிகை ரஞ்சிதாவுடன் நெருக்கமாக இருப்பது போன்ற விடியோ காட்சிகள் தனியார் தொலைக்காட்சி சேனல்களில் கடந்த மார்ச் மாதம் ஒளிபரப்பப்பட்டதை அடுத்து நித்யானந்தா மீது பல்வேறு பிரிவுகளின் கீழ் வழக்குகள் பதிவு செய்யப்பட்டன.

இமாச்சலப் பிரதேசத்தில் கைது செய்யப்பட்ட அவரிடம் சிஐடி பொலிஸார் விசாரணை நடத்திய பிறகு அவர் மே 26ஆம் திகதி வரை நீதிமன்றக் காவலில் ராம்நகர் மாவட்ட சிறையில் அடைக் கப்பட்டார்.

அவர் பிணை கோரி உயர்நீதிமன்றத்தில் தாக்கல் செய்த மனு விடுமுறை கால நீதிபதி கெம்பண்ணா முன்னிலையில் செவ்வாய்க் கிழமை விசாரணைக்கு வந்தது.

அப்போது மனு மீதான விசாரணைகளை நீதிபதி மே 26ஆம் திகதிக்கு ஒத்தி வைத்தார். (6)

# தமிழகம், புதுச்சேரி மற்றும் ஆந்திராவில் பலத்த மழை

## மக்களின் இயல்பு வாழ்க்கை பாதிப்பு

சென்னை அருகே மையம் கொண்ட லைலா புயல் காரணமாக தமிழகம், புதுச்சேரி மற்றும் ஆந்திராவில் பரவலாக பலத்த மழை பெய்து வருகிறது.

கோடையில் கடும் வெயிலால் வாடி வந்த மக்களுக்கு சற்றே ஆறுதலாக இருந்தாலும் பலத்த காற்றுடன் தொடர்ச்சியாக பெய்து வரும் கடும் மழையின் காரணமாக இயல்பு வாழ்க்கை வெகுவாகப் பாதிக்கப்பட்டுள்ளது. குறிப்பாக வட தமிழ் நாட்டில் கனமழை பெய்து வருகிறது.

தமிழகத்தில் சென்னை, திருவள்ளூர், காஞ்சிபுரம், கடலூர், விழுப்புரம், நாகபட்டினம், தஞ்சை, திருவாரூர், புதுக்கோட்டை உள்ளிட்ட கடலோர மாவட்டங்களிலும் புதுச்சேரி ஆகிய இடங்களும் மழையால் பாதிக்கப்பட்டுள்ளன. அத்துடன் தஞ்சை உள்ளிட்ட காவிரி டெல்டா மாவட்டங்களில் சூறா வளிக் காற்றுடன் பலத்த மழை பெய்து வரு கிறது.

சென்னையில் இரவில் தொடங்கி விடாமல் தொடர்ந்து மழை பெய்து வருவதால் பல்வேறு குடியிருப்புப் பகுதிகளிலும் சாலைகளிலும் வெள்ளம் சூழ்ந்துள்ளது. இதனால் போக்குவரத்தும் கடுமையாக பாதிக்கப்பட்டுள்ளது.

சென்னையில் இருந்து கிழக்கு -தென் கிழக்கே400 கிலோ மீற்றர் தூரத்திலும் விசாகப்பட்டினத்துக்கு தென் கிழக்கே 600 கிலோ மீற்றர் தூரத்திலும் மையம் கொண்டுள்ள லைலா புயலால் இரு தினங்களுக்கு வடக்கு தமிழ் நாடு புதுச்சேரி மற்றும் ஆந்திரா கடலோர மாவட்டங்களில் பரவலாக பலத்த மழை பெய்யும் என்று நேற்றைய தினம் சென்னை வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

ஆந்திர கடலோர மாவட்டங்களில் மணிக்கு 65 முதல் 75 கிலோ மீற்றர் வேகத்திலும் புதுச்சேரி மற்றும் வடதமிழ் நாடு கடலோர மாவட்டங்களில் 50 முதல் 60 கிலோ மீற்றர் வேகத்திலும் காற்று வீசும் எனவும் மீனவர்கள் கடலுக்குள் செல்ல வேண்டாம் என்றும் எச்சரிக்கப்பட்டுள்ளது. ஆந்திரா மாநிலம் ஓங்கோல்- விசாகப் பட்டினம் இடையே இன்று அதிகாலையில் புயல் கரையை கடக்கும் என்று வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது. (6)






# ஜெயலலிதாவை எதிர்த்து போட்டியிடத் தயார்

## நடிகை குஷ்பு பேட்டி



நடிகை குஷ்பு சமீபத்தில் தி.மு.க.வில் சேர்ந்தார். இதையடுத்து ஜெயா டி.வி.யில் அவர் நடத்தி வந்த ஜாக்பாட் நிகழ்ச்சி இரத்து செய்யப்பட்டது. இது பற்றி அவர் கூறியதாவது,

ஜெயலலிதா எப்போதுமே என்னுடன் நட்பாக இருந்தது இல்லை. அவரை நான் நேரில் சந்தித்த போது கூட அதிகம் பேசிக்கொள்ளவில்லை. நான் அ.தி.மு.க. அனுதாபி என்று தவறாக செய்திகள் பரப்பப்பட்டன.

ஜெயா டி.வி.யில் ஜாக்பாட் நிகழ்ச்சி நடத்தினேன். அதை நிறையபேர் பாராட்டினார்கள். ஆனால் ஜெயலலிதா அது பற்றி என்னிடம் பேசியதே இல்லை. தி.மு.க.வில் சேர்ந்ததும் ஜாக்பாட் நிகழ்ச்சியை இரத்து செய்யவைத்து விட்டனர்.

தி.மு.க.வில் சேர்ந்தது சுயமாக எடுத்த முடிபு. யாரும் நிர்ப்பந்தப்படுத்தி சேர்க்கவில்லை. சட்டமன்ற தேர்தலில் ஜெயலலிதாவை எதிர்த்து போட்டியிட எனக்கு சீட் கிடைத்தால் கண்டிப்பாக போட்டியிடுவேன்.

நடிகர்கள் சிலர் அரசியலுக்கு வர முடிவு செய்து இருப்பதாக செய்திகள் வருகின்றன. அரசியலுக்கு யார் வேண்டுமானாலும் வரலாம். தைரியம், பக்குவம் இருந்தால் தாராளமாக அரசியில் ஈடுபடலாம்.

நான் அரசியலில் ஈடுபட்டதை பலர் விமர்சிக்கின்றனர். நடிகையாக இருப்பவர்களுக்கும் நாட்டு நடப்புகள் நன்றாக தெரியும். தி.மு.க.வில் தனிமனித சுதந்திரம் இருப்பதால் தான் அக்கட்சியில் சேர்ந்தேன். கருத்து சொல்லும் சுதந்திரமும் இருக்கிறது என்றார். (2-6)

# எஞ்சியுள்ளவர்களையும் மீள்குடியேற்ற இலங்கையை நிர்ப்பந்திக்க வேண்டும்

## இந்திய அரசிடம் கிருஸ்ணசாமி வேண்டுகோள்

(சென்னை)


இலங்கையில் அகதி முகாம்களில் எஞ்சியுள்ள தமிழர்களை அவரவர் சொந்த ஊர்களில் குடியமர்த்துமாறு இலங்கையை இந்திய அரசு நிர்பந்திக்க வேண்டும் என்று புதிய தமிழகம் கட்சியின் தலைவர் டாக்டர் கிருஷ்ணசாமி வேண்டுகோள் விடுத்துள்ளார்.

இது குறித்து நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை அவர் செய்தியாளர்களிடம் கூறியதாவது,

இலங்கையில் சுமார் 80 ஆயிரம் தமிழர்கள் முள்வேலி முகாமில் இருந்து சிறுசிறு முகாம்களுக்கு மாற்றப்பட்டு வருகின்றனர். அவர்கள் அமைதியாகவும் வாழ அவர்களை அவரவர் சொந்த இல்லங்களில் குடியமர்த்த வேண்டும்.

இது தொடர்பாக இலங்கை ஜனாதிபதிக்கு மத்திய அரசு நிர்பந்தம் கொடுக்க வேண்டும் என வெளியாவக்கஹை அமைச்சர் எஸ்.எம். கிருஷ்ணாவை சந்தித்து வலியுறுத்த இருக்கி றேன்.

இலங்கையில் பிரபாகரனின் வீடு மற்றும் முன்னணி போராளிகளின் கல்லறைகள் இடிக்கப்பட்டது போன்ற



இலங்கை அரசின் நடவடிக் கைகளை இந்திய அரசு கண்டிக்க வேண்டும் என்றார் கிருஷ்ணசாமி.

வன்னியில் கொல்லப்பட்ட தமிழர்களுக்காக நேற்று முன்தினம் மாலை சென்னை மெமோரியல் ஹால் அருகே புதிய தமிழகம் கட்சியினர் மெழுகுவர்த்தி ஏந்தி அஞ்சலி செலுத்தினர். (2-6)

# வெனிசுலாவில் விடுதலைப்புலிகளின் செயற்பாடுகள் தூதுவரின் அறிக்கைக்காக இலங்கை காத்திருப்பு

வெனிசுலாவில் விடுதலைப்புலிகள் மீள் குழுக்களாவதாக வெளியாகின்ற தகவல் தொடர்பில் இலங்கை அரசாங்கம் துல்லியமான அறிக்கை ஒன்றை கோரியுள்ளது. இந்த அறிக்கை இன்னும் ஓரிருதினங்களில் இலங்கை அரசாங்கத்துக்கு கிடைக்கும் என எதிர்பார்ப்பதாக ஹவானாவில் உள்ள இலங்கை தூதுவர் தாமர குலிநாயகம் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் தற்போது வெனிசுலா அரசாங்க அதிகாரிகளுடன் பேச்சு நடத்துவதாகவும், விரைவில் அவற்றை அறிக்கைப்படுத்தி இலங்கைக்கு சமர்ப்பிப்பதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

தமிழீழ விடுதலைப்புலிகளின் நாடு கடந்த அரசாங்கத்தின் அமைப்புப் பணிகள் தற்போது வெனிசுலாவில் மேற்கொள்ளப்படுவதாக வெளியான தகவலை அடுத்தே இந்த அறிக்கை கோரப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

இதற்கிடையில் கடந்த தினங்களில் நாடு கடந்த தமிழீழ அரசாங்கத்தின் ஒன்றுகூடல் ஒன்று ஐக்கிய அமெரிக்காவில் நடைபெற்றமையை அடுத்து, அது அரசாங்கத்தின் கவனத்துக்கு சென்றுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இதன்பின்னரே சர்வதேச ரீதியாக விடுதலைப்புலிகளின் செயற்பாடுகளை முறியடிக்க இலங்கை அரசாங்கம் முயற்சிப்பதாக கூறப்படுகிறது. (2-6)

# இந்தியாவில் சிறைவைக்கப்பட்டுள்ள மீனவரை மீட்க விசேட திட்டம்

## அமைச்சர் ராஜித சேனாரட்ண தெரிவிப்பு

இந்தியாவில் சிறைவைக்கப்பட்டிருக்கும் இலங்கை மீனவர்களை விடுவிப்பதற்கு விசேட திட்டம் மேற்கொள்ளப்படுவதாக அமைச்சர் ராஜித சேனாரட்ண தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து மேலும் தெரியவருவதாவது, தற்சமயம் இந்தியாவில் 81 இலங்கை மீனவர்கள் தடுத்துவைக்கப்பட்டுள்ளனர். இவர்களில் 31பேரை விடுதலை செய்வதற்கென விமானப் பயணச்சீட்டுக்கள் கூட அனுப்பிவைக்கப்படவுள்ளதாக தெரிவித்தார்.

மேலும் ஏனைய நாடுகளின் கடற் பிரதேசங்களுக்கு உள்ளூர் மீனவர்களின் பிரச்சினைகளைத் தீர்க்கும் முகமாக நாடுகளின் எல்லைகளை இனங்காணும் கருவிகள் படகுகளில் பொருத்தப்பட இருப்பதாகவும், மீள் கையிருப்புக்களை கிரமமாக விநியோகிப்பதற்கென விசேட திட்டமொன்றும் ஆரம்பிக்கப்பட இருப்பதாக அமைச்சர் தெரிவித்தார். (2-4)

# பகிரங்க ஏலவிற்பனை

யாழ். பழைய பூங்கா வளாகத்தினுள் மாவட்டத் தொழிற்பயிற்சி நிலையக் கட்டடம் அமைய உள்ள இடத்தில் தடையாக உள்ள பெறுமதி வாய்ந்த மலைவேம்பு, வாகை ஆகிய இரு மரங்கள் 26 ஆம் திகதி புதன்கிழமை 11 மணிக்கு பகிரங்க ஏலத்தில் விற்பனை செய்யப்படவுள்ளன.

இவ் ஏலவிற்பனையில் மரங்களைப் பெற்றுக்கொண்டவர்கள் அன்றைய தினமே அவற்றிற்குரிய பணத்தைச் செலுத்தி ஒரு வாரத்தினுள் மரங்களை அகற்றுதல் வேண்டும் என்றும் மேற்படி மரங்களைப் பார்வையிட விரும்புபவர்கள் யாழ்.மாவட்டச் செயலக நிர்வாக உத்தியோகத்தருடன் தொடர்புகொண்டு பார்வையிடலாம்.

க.கணேஷ்
அரசாங்க அதிபர் /மாவட்டச் செயலாளர்,
யாழ்ப்பாணம்.

(C-292)

# உண்மையைக் கண்டறியும் ஆணைக்குழுவின் பணிகள் இன்னும் சில வாரங்களில் ஆரம்பமாகும்

## அதன் தலைவர் சி.ஆர்.டி.சில்வா தெரிவிப்பு

(கொழும்பு)

உண்மையைக் கண்டறியும் ஆணைக் குழுவின் பணிகள் இன்னும் சில வாரங்களில் ஆரம்பமாகும் என அதன் தலைவரும், முன்னாள் சட்டமா அதிபருமான சீ.ஆர்.டி.சில்வா தெரிவித்துள்ளார்.

சில சட்டத்தேவைகள் பூர்த்தி செய்யப்பட்டதன் பின்னரே பணிகளை ஆரம்பிக்க முடியும் என அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

ஆணைக்குழு செயலகம் ஒன்றை நிறுவி உறுப்பினர்களுக்கு இடையே பேச்சுவார்த்தை நடத்தப்படவேண்டுமெனவும் மேலும், சாட்சியங்களிடம் எவ்வாறான விசாரணைகளை நடத்துவது என்பது குறித்து கவனம் செலுத்தப்படவுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

இதேவேளை, உண்மையைக் கண்டறியும் ஆணைக்குழு நியமனத்திற்கு அமெரிக்கா பாராட்டு தெரிவித்துள்ளது.

எவ்வாறெனினும், ஐரோப்பிய ஒன்றியம், இந்தியா மற்றும் பிரித்தானியா ஆகிய நாடு கள் இந்த ஆணைக்குழு நியமனம் குறித்து எவ்வித கருத்துக்களையும் இது வரையில் முன் வைக்கவில்லை. (6)

ALLIANCE FRANCAISE DE JAFFNA
61, Kachcheri-Nallur Road, Jaffna
Phone: 021 2228093
E-mail: alliancejaffna@yahoo. com

**Learn French the French Way French Classes**

சர்வதேச மொழியான **French** மொழிவகுப்புக்கள் French Emabassy இன் அனுசரணையுடன் பிரெஞ்சு கலாசார மையத்தின் ஊடாக கற்பிக்கப்படுகின்றது.

பிரெஞ்சு தூதரகம் மூலம் அங்கீகரிக்கப்பட்ட ALLIANCE FRANCAISE யாழ்ப்பாணத்தில் உள்ள பிரெஞ்சு மொழி பயிலுவதற்கான ஒரே ஒரு கலாசார மையமாகும்.

*புதிய பிரிவுகள் மிக விரைவில் ஆரம்பிக்கப்படவுள்ளன.*

வகுப்புக்கள் : சனி, ஞாயிறுகளில்

மேலதிக விபரங்களை நேரில்/தொலைபேசியினூடாகப் பெறலாம்.

(1531)

தில்லையம்பதியாள் துணை

சீர்மேவு யாழ்ப்பாணம் -கோண்டாவில் தில்லையம்பதி

அருள்மிகு ஸ்ரீ சிவகாமி அம்பாள் திருக்கோயில்

வைகாசி மஹோற்சவப் பெருவிழா

இன்று தில்லையம்பதியில் 5 ஆம் திருவிழா (20.05.2010)

பூச்சப்பறம்

நல்ல பூஞ்சப்பறத்தில் நாயகி நீ இருந்து -நல்லருள்
தரும் காட்சி மெய்சிலிர்க்க வைக்குதம்மா
கல்மனமும் கசிந்துருக வைத்திடுமே -சிவகாமி
அம்பாள் உந்தன் திருக்கோலமம்மா!

மாலை 5 மணிக்கு வசந்த மண்டபப் பூசை, 6.30 மணிக்கு பூச்சப்பறம்.

விசேட மேளக் கச்சேரிகள் இடம்பெறும்

மஹோற்சவ பிரதமகுரு
"மந்திர கிரியா சுரபி"
சிவஸ்ரீ குமார சரவணபவக் குருக்கள்

நித்திய குரு
"சிவாகம கலாநிதி"
சிவஸ்ரீ இ.சுந்தரேஸ்வரக் குருக்கள்
(அருள்வளர் ஸ்ரீசுந்தர ஆஞ்சனேயர் கோயில் ஆதீன கர்த்தா)

திருக்கோயில் நித்திய பூசகர்
பிரம்மஸ்ரீ முத்து குருபரசர்மா
(தில்லையம்பதி)

இரவு 7.30மணிக்கு
தொடர் சொற்பொழிவு: "சக்தியின் மகிமை"
நிகழ்த்துபவர்
சைவப்புலவர் நித்தியதசிதரன்

*5ஆம் திருவிழா உபயகாரர்:*
முத்தொளி

இங்ஙனம்
திருக்கோயில் பரிபாலனசபை



"தில்லையம்பதியாளே சிவகாம சுந்தரியே சரணம்"

(1519)

# தாய்லாந்தில் பயங்கர கலவரம் ; இத்தாலிய பத்திரிகையாளர் பலி

## இராணுவம் குவிப்பு

(பாங்கொங்)

தாய்லாந்தில் அரசுக்கு எதிராக கடந்த சில நாட்களாக பெரும் கலவரம் நடந்து வருகிறது. இந்நிலையில் கலவரம் நடக்கும் இடத்தில் செய்தி மற்றும் போட்டோக்களை சேகரிக்கக் காத்திருந்த வெளிநாட்டு பத்திரி கையாளர்கள் மீது துப்பாக்கிச் சூடு நடைபெற்றுள்ளது.


இதில் இத்தாலிய நாட்டைச் சேர்ந்த பத்திரிகையாளர் ஒருவர் பரிதாபமாக இறந்தார். மேலும் 2 பத்திரிகையாளர்கள் படு காயமடைந்துள்ளனர்.



தாய்லாந்தில் 2006 ஆம் ஆண்டு பிரதமராக இருந்த ஷினவத்ரே பதவி நீக்கம் செய்யப்பட்டார்.

இதைத் தொடர்ந்து அங்கு இராணுவ ஆட்சி அமுல்படுத்தப்பட்டது. 2008 இல் நடந்த தேர்தலில் இராணுவத்தின் ஆதர வுடன் அபிசித் வெஜ்ஜஜிவா பிரதமராக தேர்வு செய்யப்பட்டார். தில்லுமுல்லு செய்து அபிசித் பிரதமராகிவிட்டதாகக் கூறி ஷினவத்ரேவின் ஆதரவாளர்கள் குறிப்பாக கிராம மக்கள் கடந்த இரண்டு மாதங்களாக குடும்பத்துடன் வந்து தலைநகர் பாங்கொக்கை முற்றுகையிட்டுள்ளனர்.

கடந்த நான்கு நாட்களாக போராட்டக்காரர்கள் இராணுவ வீரர்கள் மீது கல்லெறிந்தும் பெட்ரோல் குண்டுகளை வீசியும் ரகளை செய்து வந்தனர்.



இ வ ர் க ளை கலைக்க பாதுகாப்பு படையினர் தடியடி மற்றும் துப்பாக்கிச் சூடு நடத்தினர்.

இந்த துப்பாக்கிச் சூட்டில் 37 பேர் வரை பலியாகியுள்ளனர். கடந்த இரண்டு நாட்களாக பள்ளிகளுக்கு விடுமுறை அறிவிக்கப்பட்டது.

பாங்கொங்கின் புறநகர் பகுதியில் நேற்று முன்தினமும் ஒருசில வன்முறை சம்பவங்கள் நடந்தன.

போராட்டக்காரர்களுடன் பேச்சு வார்த்தை நடத்த பாராளுமன்ற உறுப்பினர்கள் கோரியுள்ளனர்.

பேச்சு வார்த்தை நடந்தாலும் அதில் சுமுக தீர்வு எட்டப்படுமோ என்பது கேள்விக் குறியாக உள்ளது. பாங்கொங்கில் இன்னும் நிலைமை சீரடையாததால் இந்த வாரம் முழுக்க பொது விடுமுறை அறிவித்துள்ளது அந்நாட்டு அரசு.

இந்நிலையில் கலவரம் கட்டுக்கு அடங்காமல் முற்றியது.

இதனையடுத்து கலவரக்காரர்கள் முகாமிட்டிருந்த முக்கிய இடங்களை இராணு வம் சுற்றி வளைத்தது. முதல் நடவடிக்கை யாக கலவரக்காரர்கள் ஆக்கிரமித்திருந்த லுமிபினி பார்க் பகுதியை இராணுவம் கட்டுக்குள் கொண்டு வந்தது.

இத் தகவலை அரச செய்தி தொடர்பாளர் உறுதி படுத்தினார். தொடர்ந்து அங்கு பதட்டமான சூழலே நிலவி வருகிறது. நகர் முழுவதும் துப்பாக்கி சத்தமும் கண்ணீர் புகை குண்டுகளும் வீசப்பட்டு வருகிறது. இதனால் தாய்லாந்து போர்க்களம் போல் காட்சியளிக்கிறது. (2-6)

## சீன சுரங்கத்தில் ஏற்பட்ட தீவிபத்தில் 10 பேர் பலி

(பீஜிங்)

சீனாவில் ஷான்சி மாகாணத்தில் உள்ள ஒரு நிலக்கரி சுரங்கத்தில் 40 தொழிலாளர்கள் பணியில் ஈடுபட்டிருந்தனர். அப்போது அங்கு திடீரென தீ விபத்து ஏற்பட்டது. அவர்களில் 10 பேர் உயிரிழந்தனர்.

தகவல் அறிந்ததும் மீட்பு படையினர் விரைந்து சென்று 30 பேரை உயிருடன் மீட்டனர். (2-6)

## இந்தோனேசியாவில் மீண்டும் ஏற்பட்ட நிலநடுக்கம்

(ஜகார்த்தா)

இந்தோனேசியாவில் அடிக்கடி நில நடுக்கம் ஏற்படுகிறது. கடந்த சில நாட்களுக்கு முன்பு திடீரென நில நடுக்கம் ஏற்பட்டது . ரிக்டர் அளவில் 6.2 அளவில் அது பதிவானது.

இந்த நிலையில் மீண்டும் நேற்று காலை 7.13 மணிக்கு இங்கு நில நடுக்கம் ஏற்பட்டது. மேற்கு ஜாவா தீவில் உள்ள யுஜங் குலான் என்ற இடத்தின் வடமேற்கில் 36 கி.மீற்றர் தூரத்தில் ஏற்பட்டது.

இதனால் ஜகார்த்தா உள்ளிட்ட பல பகுதிகளில் கட்டடங்கள் குலுங்கின. மக்கள் தங்கள் வீடுகளை விட்டு வெளியேறி ஓட்டம் பிடித்தனர்.

இந்த நில நடுக்கத்தினால் சேதம் எதுவும் ஏற்படவில்லை. சுனாமி எச்சரிக்கை எதுவும் விடுக்கப்படவில்லை. (2-6)




# நெருங்கிய உறவில் திருமணம் வாரிசுகள் இன்மைக்கு காரணம்

## டார்வினின் கருத்து ஆய்வில் நிரூபணம்

தன் மூன்று குழந்தைகளின் திடீர் மரணம், மூன்று குழந்தைகளுக்கு வாரிசு இல்லாமை போன்றவற்றுக்கு நெருங்கிய உறவில் திருமணம் செய்து கொண்டது தான் காரணமென சார்ள்ஸ் டார்வின் பயந்தது சரிதான் என நவீன ஆய்வு ஒன்று உறுதி செய்துள்ளது.

பரிணாம கோட்பாட்டின் தந்தை சார்ள்ஸ் டார்வின் தனது 30 ஆவது வயதில் நெருங்கிய உறவினரான 31 வயதுடைய எம்மா வெட் ஜடவுட் என்பவரை திருமணம் செய்து கொண்டார். இத்தம்பதியருக்கு பிறந்த குழந்தைகளில் மூன்று பேர் 10 வயதில் இறந்து போயினர். மேலும் மூன்று பேரின் நீண்டகால திருமண வாழ்வில் குழந்தைப் பேறே கிட்டவில்லை.

இப்பிரச்சினைகளுக்கு அடிப்படையான காரணமாக தனது திருமணம் இருக்கலாமோ என்று அவர் பயந்தார். அவரது பயம் சரியானது தான் என்று சமீபத்தில் நடந்த ஓர் ஆய்வு கூறுகிறது.

ஓகியோ மாநில பல்கலைக்கழகத்தின் பரிணாம துறையின் ஓய்வு பெற்ற பேராசிரியர் டிம் பெர்ரா மற்றும் அவரது உடன் பணியாற்றும் இரண்டு பேர் சார்ள்ஸ் டார்வினின் குடும்ப பாரம்பரியம் குறித்த ஆய்வில் ஈடுபட்டனர்.

சார்ள்ஸின் தந்தை மற்றும் தாய்வழி மரபுகளின் வேர்களை கி.பி. 16 ஆம் நூற்றாண்டு வரை தேடிக் கண்டுபிடித்து சேகரித்தனர். அந்த உறவு முறைகளை பற்றிய இவர்களின் ஆராய்ச்சியில் சார்ள்சின் குழந்தைகள் தங்கள் முன்னோரிடமிருந்து மரபணுக் களை பெறுவதற்கு 6 சதவீதம் வாய்ப்பு இருந்துள்ளது தெரியவந்தது.

சார்ள்ஸ் தம்பதியரின் பெற்றோரிடம் நோய் விளைவிக்கக் கூடிய மரபணுக்கள் ஒரே குரோமோசோமில் பதிவாகியிருந்ததால் அவை இரண்டும் ஒரே நேரத்தில் அவர்களின் சந்ததியரிடம் வந்து சேர வாய்ப்பு அதிகம் உள்ளது. அவை தான் நோய்களை உருவாக்கும் என்கிறார் பெர்ரா.

சார்ள்ஸ் இரண்டு வேறுவிதமான தாவரங்களை ஒட்டு முறையில் சேர்த்து புதிய தாவரங்களை உருவாக்கி பார்த்தார். வழக்கமான தாவரங்களை விட இவை மிகவும் ஆரோக்கியமாக இருந்ததையும் சந்ததி எண்ணிக்கையில் அதிகரித்ததையும் கண்டறிந்தார். அதன் முடிவுகளை மனித குலத்துக்கும் பொருத்தி பார்த்துதான் அந்த முடிவுக்கு அவர் வந்தார்.

டார்வினின் பயத்துக்கான காரணத்தை கண்டறிய விரும்பினேன். அவரது பயம் சரிதான் என்பது இப்போது தெளிவாகி விட்டது. அவருக்கு நவீன தோற்றவியல் குறித்து எதுவும் தெரியாது.

அவர் ஒட்டு முறையில் தாவரங்களை உருவாக்கி பார்த்து அதன் முடிபுகளை மனித குலத்தோடும் பொருத்தி பார்த்தார் என்கிறார் பெர்ரா. (6)

# உலக வரலாற்றில் இவ்வாண்டே மிகவும் வெப்பமான ஆண்டு

## அமெரிக்க வானிலை ஆராய்ச்சியாளர்கள் தெரிவிப்பு

(வோஷிங்டன்)

உலக வரலாற்றில் 2010ஆம் ஆண்டு தான் மிகவும் வெப்பமான ஆண்டு என அமெரிக்க வானிலை ஆராய்ச்சியாளர்கள் தெரிவித்துள்ளனர்.

அமெரிக்க வானிலை ஆராய்ச்சியாளர்கள் கூறியதாவது,

சர்வதேச அளவில் நிலம் மற்றும் கடலின் மேற்பரப்பில் நிலவிய வெப்பநிலையை கணக் கிட்டு பார்த்து ஒரு ஆய்வு மேற்கொள்ளப்பட்டுள்ளது.

குறிப்பாக கடந்த ஜனவரியிலிருந்து ஏப்ரல் வரையிலான நான்கு மாதங்கள்இந்த ஆய்வு மேற்கொள்ளப்பட்டுள்ளது.

குறிப்பாக கடந்த ஜனவரியிலிருந்து ஏப்ரல் வரையிலான நான்கு மாதங்களி லு ள்ள வெப்பநிலை முழுவதையும் ஆய்வு செய்து அதன் சராசரி அளவை சேகரித்தனர்.

இதில் உலக வரலாற்றில் இதுவரை இல்லாத அளவுக்கு இந்தாண்டு தான் மிகவும் வெப்பமான ஆண்டு என்பது தெரிய வந்துள்ளது. இந்த நான்கு மாதங்களில் உலகின் சராசரி வெப்ப நிலை 13.3 டிகிரி செல்சியஸ் ஆக இருந்தது. இது கடந்த 20 ஆம் நூற்றாண்டில் நிலவிய சராசரி வெப்ப நிலையை விட 0.69 டிகிரி செல்சியஸ் அதிகம்.

இதேபோல் இந்த நான்கு மாதங்களில் ஏப்ரல் தான் அதிகம் வெப்பமான மாதமாக இருந்துள்ளது. இவ்வாறு வானிலை ஆராய்ச்சியாளர்கள் தெரிவித்துள்ளனர். (2-6)

# பெண்களை விடவும் ஆண்களே அதிகளவு பொய் பேசுகின்றனர்

## கருத்துக் கணிப்பில் தகவல்

பெண்களை விடவும் ஆண்களே அதிகளவு பொய் பேசுவதாக அண்மையில் நடத்தப்பட்ட கருத்துக்கணிப்பொன்றின் மூலம் தகவல் வெளியிடப்பட்டுள்ளது. மூவாயிரம் பேரிடம் இந்தக் கருத்துக் கணிப்பு நடத்தப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

பிரித்தானியாவில் ஆண் ஒருவர் சராசரியாக நாள் ஒன்றுக்கு குறைந்த பட்சம் மூன்று பொய்களை கூறுவதாகவும் இதன்படி வருடமொன்றுக்கு பிரித்தானிய ஆண் ஒருவர் சராசரியாக ஆயிரத்து 92 பொய்களை கூறுவதாகக் குறிப்பிடப்படுகிறது.

எவ்வாறெனினும் பெண்கள் நாள் ஒன்றுக்கு இரண்டு பொய்களையே பேசுவதாகவும் இதன்படி வருடமொன்றுக்கு 728 பொய்கள் கூறுவதாகத் தெரிவிக்கப்படுகிறது.



அதிகமான நபர்கள் தங்களுடைய தாயிடமே பொய் பேசுவதாகத் தெரிவிக்கப்படுகிறது. வாழ்க்கைத் துணையிடம் ஆண்கள் தங்கள் குடிப்பழக்கம் அல்லது மதுபானம் அருந்திய அளவு தொடர்பிலான பொய்களை கூறுவதாகவும் அநேகமான சந்தர்ப்பங்களில் பெண்கள் தங்களது உண்மையான உணர்வுகளை வெளிப்படுத்துவதில்லை எனத் தெரிவிக்கடுகிறது. மேலும் பொய் பேசும் பெண்கள் குற்ற உணர்ச்சியினால் பாதிக்கப்படுகின்ற போதிலும் ஆண்கள் அதிகளவு பாதிக்கப்படுவதில்லை எனக் குறிப்பிடப்படுகிறது. (2-6)

துருப்பிடித்து அழிவதை விட
தேய்ந்து அழிவது சிறந்தது
- ஓர் அறிஞர்

வலம்புரி
T.P. 021 567 1530
Web: www.valampurii.com
e-mail: editor@valampurii.com

# இயற்கையின் சீற்றம் இறைவன் நடத்தும் யுத்தம்

இயற்கையின் சீற்றம், மப்பு மந்தாரமான வானிலை, கதிரவனின் கவலை தோய்ந்த முக மறைப்பு. இதே காலநிலை 2009ஆம் ஆண்டு 16,17,18-ம் திகதிகளில் இருந்தது.

அன்று வன்னியில் தமிழ் மக்களின் உயிர்கள் அவலமாகப் பறிக்கப்பட்டன.

மிகவும் கொடூரமான முறையில் இந்த நாடு நடந்து கொண்டது.

எக்காலத்திலும் மன்னிக்க முடியாத கொடுமை அரங்கேறும் உண்மை கண்டும் உலக நாடுகள் மௌனமாய் நின்றன.

இந்தியா, சீனா, பாகிஸ்தான், ஜப்பான், அமெரிக்கா, பிரிட்டன் என எல்லா நாடுகளும் தமிழர்களின் வதைக்கு ஆசி வழங்க, பேச்சு வார்த்தையில் ஈடுபட்ட நோர்வே எதுவும் தெரியாததுபோல் இருந்து கொண்டது.

விடுதலைப்புலிகளின் தலைவர் பிரபாகரன் தன்னைச் சந்திக்க வில்லை என்பதற்காக ஜப்பானின் விசேட தூதுவர் யசூசி அகாஷி வன்னி யுத்தத்தை ஆதரித்தார்.

போராட்டக்காலத்திலும், யுத்தம் நடந்த போதும் அடிக்கடி இலங்கைக்கு வந்து சென்ற அகாஷி இப்போது ஓய்வெடுக்கின்றார்.

இதிலிருந்து அவரின் இலங்கைக்கான வருகை எதற்கான என்பதை ஊகிக்க முடியும்.

யுத்தத்தை நிறுத்துங்கள், தமிழ் மக்களை காப்பாற்றுங்கள், இனப்பிரச்சினைக்கு உடனடியாகத் தீர்வை முன்நிறுத்துங்கள் என வெளிப்படையாகக் கூறிய நாடுகளின் உள்நோக்கம் அறியா அப்பாவி ஈழத் தமிழர்கள் அழிந்ததைத் தவிர வேறு எதுவும் இல்லை.

எல்லாம் தோல்வி. எல்லாம் ஏமாற்றம். வெறுங்கை, இதுதான் விதி.

இனப்பிரச்சினைக்குத் தீர்வு, இரா.சம்பந்தருடன் முக்கிய அமைச்சர் பேச்சு, அரசியல் அமைப்பில் மாற்றம் இவை யாவுமே மீண்டும் ஒரு தடவை தமிழ் மக்களை ஏமாற்றும் நாடகம்.

இந்த ஏமாற்று நாடகத்தை நம்பும் தமிழ் நாடாளுமன்ற உறுப்பினர்கள் பரிதாபத்திற்குரியவர்களே.

பரவாயில்லை, ஆண்டாண்டு காலமாக இந்த பிரபஞ்சம் இயங்குகின்றது.

இனமும் மொழியும் இல்லாத மனித இனம் வாழ்ந்து தொடக்கம் இனத்தால், மொழியால் அழிவு யுத்தம் நடக்கும் வரையான வரலாறுகள் மட்டுமே நாம் அறிந்தவை.

நாளை என்ன நடக்கும் என்பதே தெரியாத அப்பாவிகளாக வாழும் மனித இனம் இயற்கையின் சீற்றத்தையும் அதன் யுத்தத்தையும் எதிர்கொள்ள வேண்டிய காலம் நெருங்கிவிட்டது.

அதன் அடையாளமும் அறிகுறியுமாக வன்னி யுத்தத்தில் இறந்த தமிழ் மக்களின் ஆத்ம ஈடேற்றத்தின் ஓராண்டு நினைவில் மீண்டும் அதே காலநிலை. கதிரவன் மறைவு. ஓ! இறைவா நீதியறியா மானிடத்திற்கு தண்டனை கொடுக்க நீ முனைந்து விட்டாய். இனி உன்னை தடுப்பது யாராலும் முடியாது. எல்லாம் உன் செயல்.

# மருந்துத் தட்டுப்பாடு அடுத்த 10 நாட்களுக்குள் தீர்க்கப்படும்

## மைத்திரிபால சிறிசேன தெரிவிப்பு

(கொழும்பு)

மருந்துகளுக்குள்ள தட்டுப்பாடு அடுத்த 10 நாட்களுக்குள் தீர்த்து வைக்கப்படும் என அமைச்சர் மைத்திரிபால சிறிசேன தெரிவித்தார்.

சேலைன் உட்பட அத்தியாவசிய மருந்துகளுக்கு தட்டுப்பாடு எதுவும் இல்லை என்றும் அவர் தெரிவித்தார்.

மருந்துப் பற்றாக்குறையை தீர்ப்பதற்கு உடனடி நடவடிக்கையை எடுத்தமைக்காக ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவுக்கும் பாதுகாப்பு செயலாளருக்கும் அமைச்சர் நன்றியை தெரி வித்துக் கொண்டார்.



இந்தியாவிலிருந்து மருந்துகளை இறக்குமதி செய்தல், இந்தியா அரசாங்கத்தால் அங்கீகரிக்கப்பட்ட கப்பல்க ளிலிருந்து அவற்றை இறக் குமதி செய்வது குறித்து கவனம் செலுத்தப்படும் எனவும் அவர் குறிப்பிட்டார். (2-4)

# ஒருமித்த பலத்தைக் காணவே மக்கள் ஜனாதிபதியை தெரிவு செய்தனர்

## ஹெகலிய ரம்புக்வெல தெரிவிப்பு

(கொழும்பு)

மக்கள் ஜனாதிபதியின் மீது வைத்த நம்பிக்கையின் விளைவாகவே முற்றாக யுத்தத்தை வெல்ல முடிந்தது என்று அமைச்சர் ஹெகலிய ரம்புக்வெல கூறியுள்ளார்.

வேறுபட்ட அரசியல் கோட்பாடுகளை கொண்டிருந்த போதிலும் மக்கள் ஒரு நாடு என்ற முறையில் தலை நிமிர்ந்து நிற்பதற்கான பலத்தை காண்பதற்கு மகிந்த ராஜபக்ஷவை ஜனாதிபதியாக தெரிவு செய்தனர் என்றும் அவர் குறிப்பிட்டார்.

இதே போன்று இலங்கையை ஆசியாவின் அற்புதமாக்குவது மக்கள் பிரதிநிதிகள் அனைவரினதும் எதிர்பார்ப்பாகும் என்று கூறினார். (2-4)

# மிஹின் லங்கா விமானசேவை நிறுவனத்தை ஸ்ரீலங்கன் நிறுவனத்துடன் இணைக்க வேண்டும்

## ஐ.தே.க. எம்.பி. தெரிவிப்பு

(கொழும்பு)

மிஹின் லங்கா நிறுவனத்தை ஸ்ரீலங்கன் நிறுவனத்துடன் இணைக்க வேண்டுமென ஐக்கிய தேசியக்கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் ஹர்ஷ டி சில்வா தெரிவித்துள்ளார்.

மிஹின் லங்கா விமான சேவை நிறுவனத்திற்கு நிதி ஒதுக்கப்படக்கூடாது எனவும் அதனை ஸ்ரீலங்கன் நிறுவனத்துடன் இணைக்க வேண்டுமெனவும் அவர் கோரிக்கை விடுத்துள்ளார்.

இவ்வாறு நட்டமடையும் நிறுவனங்களை மூடிவிடுவது நாட்டின் பொருளாதாரத்திற்கு நன்மை அளிக்கும் என சுட்டிக்காட்டிய அவர் நட்டத்தை எதிர்நோக்கும் நிறுவனங்களுக்கு மேலும் நிதி ஒடுக்கீடு செய்வதனை தவிர்த்து அந்தப் பணத்தை கல்வி, சுகாதாரம் போன்ற துறைகளில் முதலீடு செய்ய முடியும் என குறிப்பிட்டுள்ளார். இலங்கை போன்ற சிறிய நாடொன்றில் இரண்டு விமான சேவைகளுக்கு அவசிய மில்லை என அவர் தெரிவித்துள்ளார்.

இதேவேளை மிஹின் லங்கா நிறுவனம் தற்போது ஸ்திரத் தன்மையை எட்டி வருவதாகஆளும் கட்சி பாராளுமன்ற உறுப்பினர் ஏ.எச். எம்.அஸ்வர் தெரிவித்துள்ளார். கடந்த காலங்களில் மிஹின் லங்கா நட்டமடைந்த போதிலும் தற்போது அபிவிருத்திப் பாதை நோக்கி நகர்வதாக அவர் குறிப்பிட்டுள்ளார். மிஹின் லங்கா நிறுவனம் கடந்த ஆண்டு 933 மில்லியன் நட்டமடைந்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (6)

# ஒன்பது இலங்கையர்களை அவுஸ்.நாடு கடத்தியுள்ளது

அவுஸ்திரேலியாவில் அரசியல் தஞ்சம் கோரிய 9 இலங்கையர்களை அங்கிருந்து நாடு கடத்தியுள்ளதாக அவுஸ்திரேலிய செய்திகள் தெரிவிக்கின்றன.

பல்வேறு குற்றச்சாட்டுக்கள் தொடர்பில் அவர்கள் பொலிஸ் காவலில் இருந்துள்ளமையை அடுத்து அவர்களுக்கான அரசியல் தஞ்சம் வழங்கும் செயல்பாடுகளை இடை நிறுத்தியுள்ளதுடன் அவர்களை இலங்கைக்கு திருப்பி அனுப்பியுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளை விடுதலைப்புலிகளுடன் தொடர்புடையவர்கள் அவுஸ்திரேலியாவுக்கு அகதி அந்தஸ்து கோரி வருகின்றமை அரசாங்கத்துக்கு பாரிய சிக்கலை தோற்றுவித்துள்ளதாக குடிவரவுத்துறை அமைச்சர் கிரிஸ் ஈவன்ஸ் தெரிவித்துள்ளார்.

அண்மையில் ஹவோர் விமான நிலையத்தில் வைத்து பல்வேறு குற்றச்சாட்டுகளுடன் தொடர்புடைய 11 இலங்கையர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

அவர்கள் அனைவரும் கடந்த ஒருவருட காலப்பகுதியில் அல்லது அதற்கு முன்னர் இலங்கையில் பல குற்றச் செயல்களில் ஈடுபட்டவர்கள் என்றும் அனைவரும் இலங்கை குற்றவியல் புலனாய்வுத்துறையினரிடம் கையளிக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது. (2-6)

# திருகோணமலையில் கடும் காற்று; 200 வீடுகளுக்கு கடும் சேதம்

(திருகோணமலை)

திருகோணமலையில் வீசிய கடும் புயல் காற்று காரணமாக 200 வீடுகள் சேதமடைந்துள்ளன.

இந்நிலையில் வீடுகளை இழந்த குடும்பங்களுக்கு தற்காலிகக் கூடாரங்களை வழங்குவதற்கான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டிருப்பதாக திருகோணமலை அரசாங்க அதிபர் மேஜர் ஜெனரல் ரஞ்சித் டி சில்வா தெரிவித்தார்.

இதேவேளை பதவியா மற்றும் மொரவெவ பகுதியில் பல வீடுகள் சேதமடைந்திருப்பதுடன் 20 வீடுகள் முற்றாக சேதமடைந்துள்ளன. (2-6)

# அனைவரின் இதயத்தையும் விரைவில் அலங்கரிக்கும் சாயி நாமம்

மிகச்சிறந்த வலிமை மிக்க, மிகுந்த அழகு படைத்த, மிக உயர்ந்த, புரிந்து கொள்ள இயலாதவர் பாபா. ஒவ்வொரு மனித இதயத்திலும் வாழ்பவர் பாபா. நாள் தோறும் பாபாவைக் காணவரும் ஆயிரக் கணக்கான வெளிநாட்டவர்களையும், உள்நாட்டவர்களையும் அருகில் அழைத்து அன்போடும், இரக்கத்தோடும் அருள்பாலிக்கின்றார். உடல் நோய், மனச்சுமை, மனக்கோளாறு, பணத்தேவை, குடும்பத்தில் வேற்றுமை, தொழில் துறையில் தடைகள் முதலிய பிரச்சினைகளை தனது தெய்வீகத்தால் தீர்த்தருளுகின்றார்.

பாபா அனைவருக்கும் தனது சிருஷ்டியினால் திருநீற்றை அளிப்பது வழக்கம். முடிசூடிய மன்னரும் முடிவில் ஒருபிடி சாம்பலாவதுடன் எல்லாப் பொருளும் முடிவில் எய்தும் நிலை அதுவே என்பதைத் தெரிவிக்கின்றார். உலகில் ஆடம்பரம், பெருமை, கர்வம் ஆகியனவற்றுக்கு நேரப்போகும் கதியை நினைவுபடுத்தி அளவில்லா ஆசைகளுக்கு முற்றுப் புள்ளி வைக்கின்றார்.

பாபா தன்னை நம்புகின்றவர்களை காத்தருளுகின்றார். ஐயம் கொண்டவர்களை உணரும்படி செய்கின்றார். மனித உடலெடுத்து பூமிக்கு வர எண்ணங்கொண்டு தம் சங்கல் பத்தினால் உலகிற்கு வந்துள்ள தெய்வீகமே பாபா. இதை மறுத்து பாபாவும் எம்மைப் போன்ற மனிதர் தானே என்று கருதும் தவறை அடிக்கடி செய்கின்றோம். அது நம் தீவினைப் பயன் என்றே கூறலாம்.



ஷீரடியில் அவதரித்த ஷீரடி பாபாவும் தாமும் ஒரே தெய்வீக மானவர்கள் என்றும் அருள்கின்றார் பாபா. உலகில் தோன்றிய அவதாரங்கள் அத்தனையும் அவருடையதே. பாபாவின் பக்தர்களைப் பொறுத்தமட்டில் நெருங்கியவர்கள், நெருக்க மற்றவர்கள் என்றோ ஏதும் இல்லை.

மக்கள் அனைவரும் அவரின் பிடியில் உள்ளவர்களே. சாயி என்ற என்ற நாமம் உலகத்தில் உள்ள அனைவரினதும் இதயத்தை விரைவில் அலங்கரிக்கும் என்பது உறுதி.

**ஜெய்சாயிராம் யாதவன்**





நேசன் லங்கா பினான்ஸ் பி.எல்.சி. நிறுவனம் நேற்று சுன்னாகத்தில் திறந்து வைக்கப்பட்டது. இந்நிகழ்வில் நிறுவனத்தின் தலைவர் எஸ்.பி.பல்லலே நாடாவெட்டித் திறந்து வைப்பதையும் முகாமைத்துவப்பணிப்பாளர் வீட்பெர்னாண்டோ மங்கல விளக்கேற்றுவதையும் நிறுவனத்தின் தலைவர் முதலாவது கணக்கை ஆரம்பித்து வைப்பதையும் நிகழ்வில் கலந்துகொண்ட ஒரு தொகுதியினரையும் படங்களில் காணலாம். (படங்கள் :-அலுவலகச்செய்தியாளர்)

## பண்டாரநாயக்க விமான நிலையத்திற்கு செல்ல ஹெலிகொப்டர் சேவை

(கொழும்பு)

கொழும்பு சர்வதேச பண்டாரநாயக்க விமான நிலையத்திற்கு பயணிகள் புறப்பட்டுச் செல்வதற்கான போக்குவரத்து வசதியினை விமானப்பபடையினர் ஒழுங்கு செய்துள்ளனர்.

இந்நிலையில் கொழும்பு சர்வதேச பண்டாரநாயக்க விமான நிலையத்திற்கு பொதுமக்கள் செல்வதற்காக குறைந்தளவு கட்டணத்தில் ஹெலிகொப்டர் வசதி ஒழுங்கு செய்யப்பட்டிருப்பதாக விமானப்படை பேச்சாளர் தெரிவித்தார்.

பயணிகள் 011144944 என்ற தொலைபேசி இலக்கத்திற்கு தொடர்புகொள்ள முடியுமெனவும் அவர் கூறினார்.

நாட்டின் அனைத்துப்பாகங்களிலும் கடந்த 17ஆம் திகதி முதல் அடை மழை பெய்ததினால் வெள்ளப்பெருக்கு ஏற்பட்டிருந்தது.

இந்நிலையில் வீதிகளில் வெள்ள நீர் காணப்படுவதால் கொழும்பிற்கும் கட்டுநாயக்காவிற்கும் இடையிலான சில பகுதிகளிலுள்ள வீதிகள் மூடப்பட்டுள்ளன.

(2-6)

# மீள் குடியேற்ற செயற்பாட்டில் அசமந்த நிலையே காணப்படுகிறது


## ரில்வின் சில்வா குற்றச்சாட்டு

(கொழும்பு)

யுத்தம் காரணமாக இடம்பெயர்ந்த மக்களை சகல வசதிகளுடனும் மீள்குடியேற்றும் செயற்பாட்டில் அரசாங்கம் கடந்த ஒரு வருட காலத்தில் அசமந்தமாக இருந்துள்ளது. இன்னும் முகாம்களில் 77 ஆயிரம் மக்கள் தங்கியுள்ளனர். அந்த மக்களின் இதயங்களை வெற்றிக்கொள்ள அரசாங்கத்தினால் முடியவில்லை என்று மக்கள் விடுதலை முன்னணியின் பொதுச் செயலாளர் ரில்வின் சில்வா தெரிவித்தார்.

மேலும் மீள்குடியேற்றப்படும் மக்கள் ஒரு முகாமிலிருந்து மற்றுமொரு முகாமுக்கு மாற்றப்படும் செயற்பாட்டுக்கே உட்படுகின்றனர். அங்கு எந்த வசதிகளும் இல்லை. மீள் குடியேற்றப்படும் ஒரு குடும்பத்துக்கு 25 ஆயிரம் ரூபா பணமும் 12 தகரத்துண்டுகளும் வழங்கப்படுகின்றன. இவற்றை வைத்துக் கொண்டு அம்மக்களால் வாழ்க்கையை நடத்த முடியுமா? என்றும் அவர் குறிப்பிட்டார்.

பத்திரமுல்லையில் அமைந்துள்ள கட்சியின் தலைமை அலுவலகத்தில் நேற்றுமுன் தினம் செவ்வாய்க்கிழமை காலை நடைபெற்ற விசேட செய்தியாளர் மாநாட்டில் கலந்து கொண்டு கருத்து வெளியிடுகையிலேயே



அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் அங்கு மேலும் கூறியதாவது, யுத்தம் முடிவுற்றதும் இடம்பெயர்ந்த மக்கள் 180 நாட்களில் மீள்குடியேற்றப்படுவார்கள் என்று அரசாங்க தரப்பில் கூறப்பட்டது.

நியாயமான காலப்பகுதி ஒன்று அவசியம் என்பதனை நாங்களும் ஏற்றுக்கொண்டோம். ஆனால் ஒருவருட காலம் கடந்து விட்டது.இன்னும் 77 ஆயிரம் மக்கள் வவுனியாவில் முகாம்களில் வாழ்கின்றனர்.

மேலும் 93 ஆயிரம் அகதி மக்கள் தமது உறவினர்கள் இல்லங்களில் உள்ளனர். அந்த வகையில் பார்க்கும் போது ஒரு இலட்சத்து 30 ஆயிரம் பேர் மட்டுமே மீள்குடியேற்றப்பட்டுள்ளனர்.

இந்நிலையில் மீள்குடியேற்றப்படும் மக்கள் எதிர்கொள்ளும் பிரச்சினைகள் குறித்தும் ஆராயவேண்டும்.

அதாவது வவுனியா முகாம்களிலிருந்து வேறு முகாம்களுக்கு மாற்றப்படும் செயற்பாடே இடம்பெறுகின்றது. அதாவது பெரிய முகாமிலிருந்து சிறிய முகாமுக்கு மக்கள் மாற்றப்படுகின்றனர்.

அம் மக்கள் சுகாதாரம், கல்வி மற்றும் வதி விடப் பிரச்சினைகளுக்கு முகம்கொடுக்கின்றனர். எவ்விதமான திட்டமிடல்களும் இன்றி முறைமையும் இன்றி அதிக மக்கள் மீள் குடி யேற்றப்பட்டுள்ளனர்.

இடம்பெயர்ந்த மக்கள் மீள்குடியேற்றப்படும் விடயத்தில் அரசாங்கம் பொறுப்பிலிருந்து தவறியுள்ளது.

மேலும் தற்போது புதிய அரசாங்கம் பதவியேற்றுள்ளது. அமைச்சுக்கள் பிரிக்கப்பட்டுள்ளன. அந்த வகையில் முகாம்களில் அகதி மக்கள் இடர் முகாமைத்துவதின் கீழும் மீள்குடியேற்றப்படும்மக்கள் குடியேற்ற அமைச்சின் கீழும் வருகின்றது. இதில் குழப்பகரமான நிலைமையேற்படுகின்றது.

எனவே முறையான திட்டம் அமைந்த வேலைத்திட்டத்தின் அடியில் அனைத்து மக்களும் சகல வசதிகளுடனும் விரைவில் மீள்குடியேற்றப் பட வேண்டும் என்றார்.(2-6)

# ஒரு வார இடி முழக்கம் எமது மக்களின் மரண ஓலங்களை எதிரொலிக்கின்றது

## மனோ கணேசன் தெரிவிப்பு



(கொழும்பு)

ஒருவார காலமாக தலைநகர் கொழும்பு உட்பட தென்னிலங்கை முழுக்க ஒலிக்கின்ற இடி முழக்கமும் பொழிகின்ற அடைமழையும் வெட்டுகின்ற மின்னலும் ஒரு வருடத்திற்கு முன்னர் இதே நாட்களில் ஒலித்த எங்களது மக்களின் மரண ஓலங்களை எதிரொலிக்கின்றன என ஜனநாயக மக்கள் முன்னணி தலைவரும் மக்கள் கண்காணிப்புக்குழு ஏற்பாட்டாளருமான மனோகணேசன் விடுத்துள்ள அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

அவ்வறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

ஒரு வருடத்திற்கு முன்னைய யுத்த முனை வெற்றி இவ்வாரம் நினைவு கூறப்படுகின்றது. யுத்தத்தில் உயிர் நீத்த இராணுவ வீரர்களின் தியாகம் அரசாங்கத்தினால் முன்னிறுத்தப்படுகின்றது.

அதேபோல் யுத்த வெற்றியின் நாயகனான ஜெனரல் சரத் பொன்சேகாவை சிறையில் அடைத்து வைத்துவிட்டு யுத்த வெற்றியை கொண்டாடுவதா என ஐக்கிய தேசியக் கட்சியும் ஜே.வி.பி.யும் கேள்வி எழுப்புகின்றன.

யுத்த சிறையில் அடைத்துவிட்ட காரணத்தினால் தான் இயற்கை சீற்றம் கொண்டு சீறி எழுந்துள்ளது எனவும் அதனால் தான் யுத்த முனை கொண்டாட்டங்கள் ஒத்திவைக்கப்பட நேர்ந்தன எனவும் ஜே.வி.பி. எம்.பி பாராளுமன்றத்தில் முழங்கியுள்ளார்.

ஆனால் அன்றைய யுத்த முனையிலே இருத்தரப்பினருக்கும் இடையில் சிக்கி உயிர் இழந்த பல்லாயிரக்கணக்கான அப்பாவி மக்களின் ஆன்மாக்கள் இன்னமும் சாந்தியடையவில்லை என்பதே தான் இந்த இயற்கையின் சீற்றம் அடையாளப்படுத்துகிறதாக நாங்கள் நம்புகின்றோம்.

அன்றைய தினத்தில் சுமார் 3 இலட்சம் மக்கள் வடக்கிலே அகதிகளாக்கப்பட்டார்கள். ஏறக்குறைய அதே தொகையினர் இன்று தென்னிலங்கையிலே அகதிகளாக்கப்பட்டிருக்கிறார்கள். ஒலிக்கின்ற இடி முழக்கங்களும் வெட்டுகின்ற மின்னல் தீப்பிழம்புகளையும் யுத்த முனையிலே பயன்படுத்தப்பட்ட பல்குழல் பீரங்கிகளையும் குண்டுகளையும் ஆயுதங்களையும் நினைவுப்படுத்துகின்றன.

இறுதி யுத்தத்தின் போது அப்பாவி மக்களின் பேரவலம் அறிந்த நிலையிலும் தொடர்ந்து யுத்தத்தை முன்னெடுத்த இரண்டு தரப்பினருமே இந்த மரணங்களுக்கு பொறுப்பேற்க வேண்டும். எமது மக்களின் பேரவலம் கண்டும் காணாதது போல் பாசாங்கு செய்த ஐ.நா. சபையையும் சர்வதேச சமூகத்தையும் மன்னித்துவிடவும் எமக்கு மனதில்லை. மரணங்களை எதிர் பார்த்து ஆயுதங்களை தூக்கியவர்களுக்காக கண்ணீர் சிந்துவதற்கும் உங்களுக்கு இன்று நேரமில்லை.

ஆனால் ஒன்றும் அறியாத அப்பாவி பெண்களும் குழந்தைகளும் வயோதி பர்களும் உள்ளடங்கிய பெருந்தொகையான எமது மக்களுக்காக நாங்கள் கண்ணீர் வடிக்கின்றோம். தமது மரணங்களுக்கு காரணமாக இரண்டு தரப்பினரையும் சர்வதேச சமூகத்தையும் மாத்திரம் அல்லாமல் கட்சிதலைவர்களையும் கூட தமது இறுதி கணங்களிலே அந்த அப்பாவி மக்கள் சபித்திருப்பார்கள் என நான் உணருகின்றேன். இலங்கையின் எதிர்கால அரசியல் பயணம் முழுக்கவும் பல்லாயிரக்கணக்கான மக்களின் சாபங்கள் தொடரப்போகின்றன என்பதை அரசியல் தலைமைகள் ஒவ்வொன் றும் மனதில் கொள்ளவேண்டும். இதிலிருந்து நாம் இறுதிவரை விடுபடவே முடியாது. (2)

# பிழையான இராணுவ தந்திரோபாயங்களே புலிகளின் வீழ்ச்சிக்குக் காரணமாகியது

## சிங்கப்பூர் பேராசிரியர் தெரிவிப்பு

(சிங்கப்பூர்)

வேலுப்பிள்ளை பிரபாகரனின் பிழையான இராணுவ தந்திரோபாயங்களே தமிழீழ விடுதலைப்புலிகளின் வீழ்ச்சிக்கு காரணம் என சிங்கப்பூரின் நாங்யாங் பல்கலைக் கழகத்தின் சர்வதேச பயங்கரவாதம் தொடர்பான பேராசிரியர் ரொஹான் குணரட்ன தெரிவித்தார்.

பிரபாகரன் மிகச் சிறந்த யுத்த தந்திரோபாயங்களை பயன்படுத்திய சிறந்த இராணுவத்தலைவராக உள்நாட்டு, வெளிநாட்டு ஆய்வாளர்கள் கருதியபோதிலும் உண்மை நிலைமை முற்றிலும் மாறுபட்டது என அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

இறுதியில் பிரபாகரனின் யுத்ததந்திரோபாயங்கள் மாபெரும் தோல்வியை தழுவியதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

கெரில்லா போராட்ட முறைமையிலிருந்து மரபு ரீதியான ஆயுதப் போராட்டக்குழுவாக மாற்றமடைந்தமை பிரபாகரன் இழைத்த மாபெரும் தவறு.

புலிகள் கெரில்லா தாக்குதல் முறைமையை பின்பற்றியிருந்தால் இலங்கைப் படையினரால் ஒரு போதும் யுத்த ரீதியாக தோற்கடித்திருக்க முடியாது.

இலங்கை அரசாங்கத்தின் மரபு ரீதியான படையைப்போன்றே புலிகளின் படைப் பலத்தையும் அதிகரிக்கும் நோக்கில் மேற்கொள்ளப்பட்ட பலவந்த ஆட்சேர்ப்பு புலிகளுக்கு பின்னடைவை ஏற்படுத்தியது.

எவ்[illegible] பயிற்சியுமற்ற பொதுமக்களை யுத்தகளத்தில் ஈடுபடுத்தியதாகவும் இதனால் தோல்விகள் ஏற்பட்டதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

60 வீதமான உறுப்பினர்கள் பலவந்தமான முறையில் புலிகளால் இணைத்துக் கொள்ளப்பட்டவர்கள். ஆயுத பலம் காணப்பட்ட அளவிற்கு இறுதி நேரத்தில் புலிகளிடம் ஆள் பலம் இருக்கவில்லை.

ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவின் இராணுவ படை தொடர்பில் பிரபாகரன் குறைவாக கணித்து வைத்திருந்தமை, அரச படையினர் வெற்றியீட்ட வழிகோலியதாக அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

புலிகளின் தத்துவாசிரியரான அன்ரன் பாலசிங்கத்தின் மறைவுக்குப்பின்னர் யதார்த்த பூர்வமான ஆலோசனைகளை பிரபாகரனுக்கு எவரும் வழங்கவில்லை.

இந்தியா அல்லது மேற்குலக நாடுகள் தலையீடு செய்யும் என பிரபாகரன் இறுதி தருணம் வரையில் நம்பியிருந்தார்.

ஹிட்லரின்மறைவின்பின்னர்நாசிக்கட்சிக்கு நேர்ந்தநிலையே புலிகளுக்கு நேர்ந்துள்ளதாக பேராசிரியர் குணரட்ன தெரிவித்துள்ளார். (ச-5)

## எதிர்வரும் ஜீ-15 மாநாடு இலங்கையில்

(கொழும்பு)

எதிர்வரும் 2012ஆம் ஆண்டு இலங்கையில் ஜி-15 நாடுகளினது மாநாடு நடைபெறும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

ஆசிய, ஆபிரிக்க மற்றும் லத்தீன் அமெரிக்காவைச் சேர்ந்த 18 நாடுகளின் கூட்டமைப்பான ஜி-15இன் 15ஆம் மாநாடு இலங்கையில் நடைபெறும் என வெளிவிவகார அமைச்சர் ஜி.எல்.பீரிஸ் தெரிவித்துள்ளார்.

ஜி-15 நாடுகள் உலகின் மொத்த சனத்தொகையில் 33 வீதத்தை பிரதிநிதித்துவப்படுத்துவதாகவும் உலகின் மிக முக்கியமான பொருளாதாரங்களை உள்ளடக்கியதாகவும் சுட்டிக்காட்டப்படுகிறது.

தெஹ்ரானில் நடைபெற்ற 14ஆவது மாநாட்டில் இலங்கைக்கு தலைமைப்பதவி வழங்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ச-5)

# சிறுபான்மை அரசியல் கட்சிகளுடன் அரசு இணக்கப்பாட்டுக்கு வரவேண்டும்

## சர்வதேச சிறுபான்மை உரிமைகள் அமைப்பு கோரிக்கை

(கொழும்பு)

சிறுபான்மை அரசியல் கட்சிகளுடன் அரசாங்கம் இணக்கப்பாட்டை ஏற்படுத்திக் கொள்ள வேண்டும் என சர்வதேச சிறுபான்மை உரிமைகள் அமைப்பு (எம்.ஆர்.ஜி) கோரிக்கை விடுத்துள்ளது.

இது தொடர்பில் அந்த அமைப்பு கூறியுள்ளதாவது,

இலங்கையின் தேசிய இனப்பிரச்சினைக்கு தீர்வுகாணும் முயற்சிகளின் போது சிறுபான்மை அரசியல் கட்சிகளுடன் பொதுவான இணக்கப்பாடொன்றை ஏற்படுத்திக்கொள்ள வேண்டியது இன்றியமையாதது.

யுத்தம் நிறைவடைந்து ஒருவருடகாலம் பூர்த்தியாகியுள்ள நிலையில் யுத்தவலயத்தில் பாதிக்கப்பட்ட சிறுபான்மை தமிழ், முஸ்லிம் மக்களின் நிலைமையில் பாரிய மாற்றங்கள் ஏற்படவில்லை.

வடக்குக் கிழக்கு பகுதிகளில் பாரிய அபிவிருத்தித்திட்டங்களை அரசாங்கம் முன்னெடுத்து வருவதாக தெரிவிக்கப்பட்ட போதிலும் யுத்தவலய மக்களுக்கு உரிய நன்மைகள் கிடைக்கப்பெறவில்லை என குறிப்படப்பட்டுள்ளது.

அபிவிருத்தி நடவடிக்கைகள் குறித்து வடக்குக் கிழக்கு வாழ் மக்களிடம் போதிய தெளிவில்லை என தெரிவிக்கப்பட்டுள்ளது.

3 தசாப்த காலத்திற்குப் பின்னர் வடக்கு கிழக்கு சிறுபான்மை மக்கள் எவ்வித அச்சமும் இன்றி வாழக் கூடிய ஓர் சூழ்நிலை உருவாகியுள்ளதெனக் குறிப்பிடப்பட்டுள்ளது.

எனினும் மனித உரிமைகளைப் பேணுதல் மற்றும் நிரந்தர சமாதானம் ஆகிய வற்றை உறுதிப்படுத்தக் கூடிய வகையில் இந்த சூழ்நிலை மாற்றமடைய வேண்டும்.

இடம் பெயர் மக்கள் மீள் குடியேற்றப்படும் நடவடிக்கைகள் திருப்தி அளிக்கும் வகையில் அமையப்பெறவில்லை. மீள்குடியேற்றப்பட்ட மக்கள் போதிய அடிப்படை வசதிகள் இன்றி அல்லலுறுகின்றனர்.

அரசியல் சுயநிர்ணயம் மற்றும் அதிகாரப் பகிர்வு ஆகியவற்றை அடிப்படையாகக் கொண்டு சிறுபான்மை அரசியல் கட்சிகளுடன் அரசாங்கம் இனக்கப்பாடுகளை எட்ட வேண்டும் எனவும் எம்.ஆர்.ஜி வலியுறுத்தியுள்ளது.

சிறுபான்மை மக்களின் அபிலாசைகளை பூர்த்தி செய்வதற்கு இலங்கை அரசாங்கத்திற்கு சிறந்த சந்தர்ப்பம் கிட்டியுள்ள தென அந்த அமைப்பு தெரிவித்துள்ளது. (ச-5)

## வெசாக் தினத்தில் மதுபானசாலைகள் பூட்டு

(யாழ்ப்பாணம்)

வெசாக் தினத்தை முன்னிட்டு எதிர் வரும் 27 மற்றும் 28ஆம் திகதிகளில் மதுபான சாலைகள் மூடப்பட்டிருக்கும் என மதுவரி ஆணையாளர் அறிவித்துள்ளார்.

இவ் அறிவித்தலை மீறுபவர்கள் மீது சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது. (ச)

# யாழ். மத்திய கல்லூரி அணி கூடை பந்தாட்டத்தில் சம்பியன்



(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்டப் பாடசாலைகளுக்கிடையில் நடைபெற்ற கூடை பந்தாட்ட சுற்றுப் போட்டியில் யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி அணி சம்பியனானது.

இறுதிப் போட்டியில் சென்.ஜோன்ஸ் கல்லூரியை எதிர்த்து யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி மோதியது. ஆரம்பம் முதல் யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி அடுத்தடுத்து புள்ளிகளைப் போட்டது. இதன் மூலம் முதல் பாதி ஆட்டத்தில் யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி 32:12 என்ற புள்ளிகள் அடிப்படையில் முன்னிலையில் இருந்தது.


இரண்டாவது பாதி ஆட்டத்தில் சென். ஜோன்ஸ் கல்லூரி சுற்றுச் சிறப்பாக ஆடியது. எனினும் யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி அணியின் புள்ளிகளை முந்த முடியவில்லை.

இறுதியில் 58:30 என்ற புள்ளி அடிப்படையில் யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி வென்று சம்பியனானது. யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி அணி தொடர்ந்து 5 ஆவது முறையாக சம்பியனானமை குறிப்பிடத்தக்கது.

# மென்பந்து கிரிக்கெட் போட்டியில் யாழ். மத்திய கல்லூரி வெற்றி

(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்ட பாடசாலைகளுக்கிடையிலான மென்பந்துக் கிரிக்கெட் போட்டியில் யாழ்.மத்திய கல்லூரி சம்பியனானது.



யாழ். மாவட்டப் பாடசாலைகளுக்கிடையிலான 10 ஓவர்கள் மட்டுப்படுத்தப்பட்ட மென்பந்து கிரிக்கெட் போட்டிகள் அதிபர் சங்கத்தின் அனுசரணையில் அண்மையில் யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி மைதானத்தில் நடைபெற்று வந்தன.

இறுதிப் போட்டியில் யாழ்ப்பாணம் மத்திய கல்லூரியும் யாழ்ப்பாண இந்துக்கல்லூரியும் மோதின. நாணயச்சுழற்சியில் வென்ற யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி அணி முதல் துடுப்பெடுத்தாடக் களமிறங்க முடிபு செய்தது.

யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி அணி 10 ஓவர்கள் நிறைவில் 09 விக்கெட்டுக்களையிழந்து 75 ஓட்டங்களைப் பெற்றது. துடுப்பாட்டத்தில் கிருசோபன் 23, பார்த்தீபன் 22, பிரகாஸ் 20 ஓட்டங்களையும் பெற்றனர்.

பந்துவீச்சில் கரிதாஸ் 6 விக்கெட்டுக்களையும், டார்வின் 2 விக்கெட்டுக்களையும் கைப்பற்றினர்.

பதிலுக்கு 76 ஓட்டங்களை வெற்றியிலக்காகக் கொண்டு துடுப்பெடுத்தாடக் களமிறங்கிய யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி அணி 9.3 ஓவர்களில் 8 விக்கெட்டுக்களை மாத்திரம் இழந்து வெற்றியிலக்கை அடைந்தது. துடுப்பாட்டத்தில் எட்வேர்ட் எடின் 20, ஜோய் 15 ஓட்டங்களையும் பெற்றுக் கொடுத்தனர்.

பந்துவீச்சில் ரகுவரன் 4 விக்கெட்டுக்களையும், ஏகதன் 2 விக்கெட்டுக்களையும் கைப்பற்றினர்.

# நூற்றாண்டு விழாவை முன்னிட்டு கொக்குவில் இந்துக் கல்லூரி நடத்தும் இருபது-20 தொடர்

(கொக்குவில்)

கொக்குவில் இந்துக் கல்லூரி இவ்வருடம் கொண்டாடவுள்ள நூற்றாண்டு விழாவினையொட்டி யாழ்.மாவட்டப் பாடசாலைகளின் கிரிக்கெட் அணிகளுக்கிடையில் இருபது-20 கிரிக்கெட் சுற்றுப் போட்டியொன்றினை எதிர்வரும் 31 ஆம் திகதி திங்கட்கிழமை முதல் நடத்தவுள்ளது.

பத்துப் பாடசாலை அணிகள் பங்குபற்றவுள்ள மேற்படி இருபது-20 கிரிக்கெட் சுற்றுப் போட்டியில் அணிகள் இரண்டு பிரிவுகளின் கீழ் பங்குபற்றுகின்றன.

சென்.ஜோன்ஸ் கல்லூரி, கனகரட்ணம் மத்திய மகா வித்தியாலயம், சென்.பற்றிக்ஸ் கல்லூரி, வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரி, மகாஜனக் கல்லூரி ஆகிய அணிகள் ஒரு பிரிவாகவும் ஸ்கந்தவரோதயக் கல்லூரி, யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி, கொக்குவில் இந்துக் கல்லூரி, மானிப்பாய் இந்துக்கல்லூரி, யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி ஆகிய அணிகள் இன்னொரு பிரிவாகவும் போட்டிகளில் பங்குபற்றவுள்ளன.

போட்டிகள் அனைத்தும் விலகல் முறையில் இடம்பெறவுள்ளன. 31ஆம் திகதி தொடக்கம் கொக்குவில் இந்துக்கல்லூரி மைதானத்தில் ஆரம்பமாகும் போட்டிகள் தொடர்ந்து 7 நாட்கள் நடைபெறவுள்ளன.

மூன்றாமிடத்துக்கான போட்டிகள் யூன் மாதம் 6ஆம் திகதி காலை 8.30 மணிக்கும் இறுதிப் போட்டி அதே தினம் பிற்பகல் 1.30 மணிக்கும் நடைபெறவுள்ளன.

# இடிக்கும் முழக்கமும் வெட்டுகின்ற மின்னலும் தமிழ் மக்களின் மரண ஓலங்களின் எதிரொலி

## மனோ கணேசன் உருக்கமான அறிக்கை

(கொழும்பு)

ஒருவார காலமாக தலைநகர் கொழும்பு உட்பட தென்னிலங்கை முழுவதும் ஒலிக்கின்ற இடி முழக்கமும், பொழிகின்ற அடைமழையும், வெட்டுகின்ற மின்னலும் ஒரு வருடத்திற்கு முன்னர் இதே நாட்களில் ஒலித்த எங்களது மக்களின் மரண ஓலங்களை எதிரொலிக்கின்றன என ஜனநாயக மக்கள் முன்னணி தலைவரான மனோ கணேசன் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் விடுத்துள்ள அறிக்கையில் தெரிவித்துள்ளதாவது;

ஒரு வருடத்திற்கு முந்தைய யுத்தமுனை வெற்றி இவ்வாரம் நினைவு கூரப்படுகின்றது. யுத்தத்தில் உயிர் நீத்த இராணுவ வீரர்களின் தியாகம் அரசாங்கத்தினால் முன் நிறுத்தப்படுகின்றது.

ஆனால் அன்றைய யுத்த முனையிலே இருதரப்பினருக்கும் இடையில் சிக்கி உயிர் இழந்த பல்லாயிரக் கணக்கான அப்பாவி மக்களின் ஆன்மாக்கள் இன்னமும் சாந்தியடையவில்லை என்பதே தான் இந்த இயற்கையின் சீற்றம் அடையாளப்படுத்துகிறதாக நாங்கள் நம்புகின்றோம்.

அன்றைய தினத்தில் சுமார் 3 இலட்சம் மக்கள் வடக்கிலே அகதிகளாக்கப்பட்டார்கள். ஏறக்குறைய அதே தொகையினர் இன்று தென்னிலங்கையில் அகதிகளாக்கப்பட்டிருக்கின்றார்கள்.

ஒலிக்கின்ற இடி முழக்கங்களும், வெட்டுகின்ற மின்னல் தீப்பிழம்புகளும் யுத்த முனையிலே பயன்படுத்தப்பட்ட பல்குழல் பீரங்கிகளையும், குண்டுகளையும், ஆயுதங்களையும் நினைவுப்படுத்துகின்றன.

இறுதி யுத்தத்தின்போது அப்பாவி மக்களின் பேரவலம் அறிந்த நிலையிலும் தொடர்ந்து யுத்தத்தை முன்னெடுத்த இரண்டு தரப்பினருமே இந்த மரணங்களுக்கு பொறுப்பேற்க வேண்டும். எமது மக்களின் பேரவலம் கண்டும். காணாததுபோல் பாசாங்கு செய்த ஐ.நா.சபையையும், சர்வதேச சமூகத்தையும் மன்னித்துவிட எமக்கு மனதில்லை.

மரணங்களை எதிர்பார்த்து ஆயுதங்களை தூக்கியவர்களுக்காக கண்ணீர் சிந்துவதற்கும் எங்களுக்கு இன்று நேரமில்லை. ஆனால் ஒன்றும் அறியாத அப்பாவி பெண்களும், குழந்தைகளும் வயோதிபர்களும் உள்ளடங்கிய பெருந்தொகையான எமது மக்களுக்காக நாங்கள் கண்ணீர் வடிக்கின்றோம்.

தமது மரணங்களுக்கு காரணமான இரண்டு தரப்பினரையும் சர்வதேச சமூகத்தையும் மாத்திரம் அல்லாமல் இக்கொடுமையை தடுத்து நிறுத்த முடியாமல் கையாலாகாதுபோன தமிழ் அரசியல் கட்சி தலைவர்களையும் கூட, தமது இறுதி கணங்களிலே



அந்த அப்பாவி மக்கள் சபித்திருப்பார்கள் என நான் உணருகின்றேன்.

இலங்கையின் எதிர்கால அரசியல் பயணம் முழுக்கவும் பல்லாயிரக்கணக்கான மக்களின் சாபங்கள் தொடரப் போகின்றன என்பதை அரசியல் தலைமைகள் ஒவ்வொன்றும் மனதில் கொள்ளவேண்டும். இதிலிருந்து நாம் இறுதிவரை விடுபடவே முடியாது என்றார். (ச-5)

## நிபுணர் குழுவை அமைக்...

முன்னெடுக்கப்படும் எனச் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. இந் நிலையில் நிபுணர்கள் குழு உருவாக்கும் திட்டத்தை ஐக்கிய நாடுகளின் பொதுச் செயலாளர் பான் கீ மூன் கைவிடவில்லை என ஐக்கிய நாடுகள் சபையின் தலைமையக அதிகாரி சொயிஸ் சொங் தெரிவித்துள்ளார்.

பான் கீ மூனில் அரசியல் பிரதிநிதியான லியன் பொஸ்கோவை விரைவில் இலங்கைக்கு அனுப்பி வைக்கப் பான் கீ மூன் திட்டமிட்டுள்ளதாகவும் இலங்கை அரசாங்கம் அனுமதி வழங்கியவுடன் பொஸ்கோவின் விஜயம் இடம்பெறும் எனவும் குறிப்பிட்டுள்ளார்.

ஜனாதிபதியின் உண்மையைக் கண்டறியும் ஆணைக்குழுவுக்கு பான் கீ மூனின் நிபுணர்கள் குழுவுக்கும் இடையில் பாரிய வேறுபாடுகள் காணப்படுவதாகவும் சொயிஸ் சொங் சுட்டிக்காட்டியுள்ளார்.

ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ எவ்வாறான ஆணைக்குழுக்களையும் உருவாக்க முடியும் எனவும் அவை நிபுணர்கள் நியமனத்திற்குப் பாதிப்பை ஏற்படுத்தாது எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

சர்வதேச சமூகத்திற்கு வாக்குறுதி அளித்தது போன்று ஜனாதிபதி ஆணைக்குழு வை நிறுவியமை வரவேற்கத்தக்கது எனவும் சொயிஸ் சொங் பாராட்டியுள்ளார். (ச-5)

## சனல்-4...

நடைபெற்ற நாடுகளில் இவ்வாறான குற்றச்சாட்டுக்கள் எழுவது இயற்கை. அந்த வகையில் இலங்கையும் இவ்வாறான குற்றச்சாட்டுக்கு உள்ளாகியுள்ளது.

முப்பது வருட காலமாக நடைபெற்ற யுத்தத்தில் இவ்வாறான குற்றச்சாட்டுக்கள் எழுவது இயற்கையானது. சனல்-4 தொலைக்காட்சி இவ்வாறான ஒரு ஒளிநாடாவை ஒளிபரப்பப் போவதாக எமக்குக் கூறியது.

அப்போது நாங்கள் அதனை ஒளி பரப்புவதற்கு முன்னர் அக் காட்சி தொடர்பில் எம்முடன் பகிர்ந்து கொள்ளுங்கள். நாம் இது தொடர்பில் ஒரு பதிலினை அளிக்கலாம் என்று கூறினோம்.

எமக்கு அதற்கான சந்தர்ப்பம் அவர்களால் வழங்கப்படவில்லை. புலிகள் இயக்கத்தினால் மனித கேடயங்களாகப் பயன்படுத்தப்பட்ட மக்களை மீட்கும் நடவடிக்கையையே படையினர் மேற்கொண்டனர்.

இதன் இறுதிக் கால கட்டத்தில் மக்களை ஆதரித்து அரவணைத்துச் செயற்பட்டார்கள் என்பது உண்மையான விடயமாகும்.

குறிப்பாக மக்களுக்கு எவ்விதமான உயிர்ச் சேதங்களும் இல்லாத நிலையில் செயற்பட்டார்கள். ஆனால் சனல்-4 தொலைக்காட்சி வெளியிடும் தகவல்கள் உண்மையற்றது என்றும் மேலும் தெரிவித்தார். (ச-9)

## காற்றுடன்...

திணையடுத்து கொற்றாவத்தைப் பகுதி அபாயம் நிறைந்து காணப்பட்டதாகவும் எனினும் வடமராட்சி மின்சார சபைக் காரியாலயத்துடன் பல நிமிட நேரமாகியும் தொடர்பு கொள்ள முடியாமல் போனதாகவும் பிரதேசவாசி ஒருவர் குற்றஞ்சாட்டியுள்ளார்.

எனினும் இதுபோன்ற பல சம்பவங்கள் தமக்கு உடனடியாக அறிவிக்கப்பட்டுக் கொண்டிருந்ததால் தொலைபேசித் தொடர்பில் காலதாமதம் ஏற்பட்டதாக மின்சார சபை வட்டாரங்கள் தெரிவித்தன.

இதேவேளை கொட்டடிப் பகுதியில் மரம் முறிந்து விழுந்ததில் வயோதிப் பெண் ஒருவர் சிறு காயங்களுக்குள்ளான நிலையில் யாழ்.போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். (ச)

## விசாரணை செய்யப்பட்டதன்...

மட்ட உத்தரவுக்கு அமைய மேற்கொள்ளப்பட்டதென்பதை சிரேஷ்ட படை அதிகாரி ஒருவரும் கள முனைப் படையினர் ஒருவரும் சனல்-4க்கு நேரடியாக உறுதிப்படுத்தியிருக்கின்றார்கள் என்றும் அறிவித்துள்ளது.

அப் படை அதிகாரி சனல்-4ற்குத் தெரிவித்ததாவது, இறுதி யுத்தத்தின் போது எதிர்ப்படும் ஒவ்வொருவரையும் கொல்லுமாறு தளபதி எங்களுக்கு உத்தரவிட்டார். எல்லோரையும் கொன்றொழித்து விடுமாறும் உத்தரவிட்டார்.

**பொதுமக்களும் இறந்தார்களா?**

அந்தப் போரில் இராணுவத்தினர்இறந்தார்கள். புலிகள் இறந்தார்கள். பொதுமக்களும் இறந்தார்கள்.

**நீங்கள் பொதுமக்களைக் கொன்றீர்களா?**

ஆம் நாம் பொதுமக்களைக் கொன்றோம்.

**வெள்ளைக் கொடிகளுடன் சரணடைந்த புலிகளுக்கும் அவர்களுடைய குடும்பத்தினருக்கும் என்ன நடந்தது?**

முதலில் அவர்களைக் கைது செய்தோம். பின்னர் சித்திரவதை செய்தோம். பின்னர் கொன்று தள்ளினோம். இறுதி நாள்களில் நேரடியாகவே கொன்று தள்ளினோம்.

பெருமளவான மக்கள் கொல்லப்பட்டார்கள். பெருமளவான சடலங்கள் அங்கு காணப்பட்டன. ஆம், தளபதி அனைவரையும் கொல்லும் படி கட்டளையிட்டார். அதன்படி அனைவரையும் நாங்கள் கொன்று தள்ளினோம்.

விடுதலைப்புலிகளின் தலைவரின் 13 வயது மகன் மெய்ப்பாதுகாவலர் களுடன் சரணடைந்தார். அவர் தனது தந்தையின் இருப்பிடத்தைக் காட்டித் தருமாறு விசாரணை செய்யப்பட்ட பின் கொல்லப்பட்டார்.

படையினர் பலர் பெருமளவான சடலங்களைப் படம் பிடித்துள்ளனர். அவற்றில் பல புலிகளினுடையதாகவும் இருந்துள்ளன. பொதுமக்களினுடையதாகவும் இருந்துள்ளன. சில அடையாளம் காணப்பட முடியாதவையாக இருக்கின்றன.

பின்னால் கைகள் கட்டப்பட்ட நிலை யில் கொல்லப்பட்ட இரண்டு பெண்களின் சடலத்தைச் சுற்றிப் படையினர் நிற்கும் படமும் வெளியாகியுள்ளது.

அதிகாரியின் தகவல்களின்படி அவை கைது செய்யப்பட்டவர்களினுடைய படங்கள். சரணடைந்த புலிகள் எவரையும் உயிருடன் வைத்திருக்கவில்லை. அவ்வாறு வைத்திருப்பது பின்னர் பிரச்சினைகளை ஏற்படுத்தும் என்பதால் அவர்கள் அனைவரையும் கொன்றுவிடுமாறு எங்களுக்கு உத்தரவிடப்பட்டது என அவர் கூறியதாக சனல்-4 செய்தி வெளியிட்டுள்ளது. (எ-1)

## சரணடைந்த விடுதலைப் புலிகள்...

இலங்கையில் விடுதலைப்புலிகளுக்கெதிரான இறுதிப் போரின்போது அரச படையினர் போர்க் குற்றங்களைப் புரிந்ததாகச் சனல்-4 தொலைக்காட்சி மீண்டும் குற்றஞ்சாட்டியுள்ளது.

பிரிட்டனிலிருந்து ஒளிபரப்பாகும் சனல்-4 என்ற தொலைக்காட்சி நிறுவனம் இலங்கையில் கடந்த ஆண்டு நடந்து முடிந்த போரின் இறுதி மாதங்களில் சரணடைந்த சகல விடுதலைப்புலி உறுப்பினர்களையும் சுட்டுக் கொல்லுமாறு மூத்த அதிகாரிகளிடமிருந்து தங்களுக்கு உத்தரவு வந்தது என்று பெயர் குறிப்பிடாத இராணுவ அதிகாரியை மேற்கோள்காட்டி நேற்று முன்தினம் செவ்வாய்கிழமை இரவு சிறப்பு நிகழ்ச்சி ஒன்றை ஒளிபரப்பி பரபரப்பை ஏற்படுத்தியது.

சனல்-4 தொலைக்காட்சி நிகழ்ச்சியில் மேற்கோள்காட்டப்பட்ட இந்த இராணுவ அதிகாரியின் உண்மையான குரல் ஒலிபரப்பப்படவில்லை.

அவரது உருவமும் தெளிவாகக் காட்டப்படவில்லை. இந்த நிகழ்ச்சியில் அவரது குரலுக்குப் பதிலாக வேறொரு குரல் ஒலிக்க வைக்கப்பட்டது.

நிகழ்ச்சிக்குத் தகவல் தெரிவித்ததாகக் கூறும் இந்த இராணுவ அதிகாரி தங்களுக்குப் போரின் இறுதிக் கட்டங்களில் சரணடைந்த எந்தவொரு புலிகள் இயக்கப் பிரமுகர்கள் அல்லது உறுப்பினர்களை வைத்துக் கொள்வது பிரச்சினையாக இருக்கும் என்பதால் அவர்களைச் சுட்டுக் கொன்றுவிடுமாறு கட்டளைகள் பிறப்பிக்கப்பட்டது.

முதலில் நாங்கள் அவர்களைக் கைது செய்தோம். பின்னர் சித்திரவதை செய்தோம். பின்னர் கொலை செய்தோம். இவ்வாறு பலரைக் கொலை செய்தோம் என்று கூறினார்.

மேலும் விடுதலைப்புலிகளின் இயக்கத் தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரனின் இளைய மகன் 13 வயது பாலச்சந்திரன், அவரது மெய்க்காப்பாளர்களுடன் இலங்கைப் படைகளிடம் சரணடைந்த போது அவரது தந்தை எங்கே என்று விசாரிக்கப்பட்ட பின்னர் சுட்டுக் கொல்லப்பட்டார் என்றும் இந்த இராணுவ அதிகாரி கூறினார்.

இந்த நிகழ்ச்சியின் போது கடந்த ஆண்டு போரின் இறுதிக் கட்டங்களில் எடுக்கப்பட்ட புகைப்படங்கள் பலவும் ஒளிபரப்பப்பட்டன.

இந்தப் புகைப்படங்களில் பொதுமக்கள் குண்டுத் தாக்குதலில் சிக்கித் துன்புறுவது, கொல்லப்படுவது போன்ற புகைப்படங்களும் இடம்பெற்றன.

இந்தச் சனல்-4 தொலைக்காட்சிதான் கடந்த ஆண்டு ஓகஸ்ட் மாதத்தில் நிர்வாணப்படுத்தப்பட்ட, நிராயுதபாணியான நபர்கள் சிலர் பின்னால் கைகள் கட்டப்பட்டு, கண்களும் கட்டப்பட்ட நிலையில் இலங்கை இராணுவத்தினர் போல் தோன்றும் சீருடை அணிந்த படையினரால் துப்பாக்கியால் நெருக்கமான தூரத்தில் சுட்டுக் கொல்லப்படும் காட்சிகள் அடங்கிய வீடியோ ஒன்றை ஒளிபரப்பியது.

ஜனநாயகத்திற்கான ஊடகவியலாளர்கள் என்ற இலங்கையிலிருந்து வெளியேறி ஐரோப்பிய நாடுகளில் தஞ்சம் பெற்று வசிக்கும் பத்திரிகையாளர்கள் அமைப்பால் விநியோகிக்கப்பட்ட இந்த வீடியோ பெரும் பரபரப்பை ஏற்படுத்தியது.

இதை இலங்கை அரசு போலியான ஒன்று என்று மறுத்தாலும் ஐ.நா. மன்ற சிறப்புத் தூதர் பிலிப் ஆல்ஸ்டனால் இது உண்மையான வீடியோதான் என்று ஊர்ஜிதப்படுத்தப்பட்டது. (ச-5)

## முகாங்க...

தங்களுக்கு அனுமதி வேண்டும் எனச் சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்தின் தலைவர் ஜேக்கப் கெல்லன்பர்கர் கோரியுள்ளார்.

இந்த இரண்டு கோரிக்கைகளுமே அங்குள்ள மக்களின் பாதுகாப்பைக் கருதியே என்றும் அவர் கூறுகின்றார்.

விடுதலைப்புலிகளுடனான போர் உக்கிரமாக நடைபெற்று வந்த இறுதி நேரத்திலும் அதற்குப் பிறகும் சில சதுரகிலோமீற்றர் பரப்பளவே கொண்ட குறுகிய நிலப்பரப்பில் இருந்து பணியாற்றிய ஒரே நிறுவனம் தமது அமைப்புத்தான் என்பதனையும் ஜேக்கப் கெல்லன்பர்கர் சுட்டிக்காட்டுகின்றார். (ச-5)

இப்பத்திரிகை வலம்புரி அன்.கோஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 20.05.2010 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.